பக்கங்கள்: 22

விலை: 30.00

THEEMPUNAL
தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:42 12.02.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



வடக்கின் கரிநாளும் மலையகத்துக்குக் கிடைக்காத சுதந்திரமும்...!

பிதாமகன்

பக்கம் 04



மனங்கள் தொடர்பான சிக்மன் பிராயிட்டை முன்வைத்த சிறு விளக்கவுரை:

சி.உதயகுமார்

பக்கம் 12

# பயங்கரவாதத் தடைச் சட்டமும் ஜெனீவாவும்



> மக்கள் செல்வாக்கை மீண்டுமொரு முறை உலகத்துக்கு வெளிப்படுத்தும் நோக்கில் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட மாநாடு, மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் புதிய அரசியல் யாப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுவதாகவும் அமைந்திருக்கின்றது.

அ.நிக்ஸன்

புதுடில்லிக்குச் சென்று திரும்பிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எஸ்.பீரிஸ் இந்தியாவிடம் இருந்து பெருமளவு நிதியுதவிகள் மற்றும் இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையின் இந்தியா மீதான நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

இதன் பின்னணியில் அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர்களிடம் இலங்கைக்கு உதவி செய்யுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் கோரவுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

புதுடில்லி இந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியதெனவும் பீரிஸ் கூறுகின்றார். அநுராதபுரத்தில் புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் இதனைத் தெரிவித்த அமைச்சர் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் பெற்ற வெற்றியே, இதற்கான காரணம் எனவும் சொல்லியிருக்கிறார்.

இந்தியா 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியாக வழங்கியுள்ளது என்றும், இந்தியாவின் தலைமைத்துவம், இலங்கைக்குத் தற்போது பாரிய சக்தியாக உள்ளது என்றும் புகழாரம் சூட்டியிருக்கிறார் பீரிஸ்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான், மீட்கப்படாத இந்திய மீனவர்களின் மீன்பிடிப்படகுகளை அப்புறப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காகத் தமிழகத்திலிருந்து விசேட குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் கூறியுள்ளது. அதுவும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்ற பிரதமர் நரேந்திரமோடி கொழும்புக்கு வரவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள பிம்ஸ்டெக் எனப்படும் பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான வங்காள விரிகுடா முயற்சி (The Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation- BIMSTEC) மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பிம்ஸ்டெக் அமைப்பின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் ஜனாதிபதி, பிரதமர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

மோடியின் வருகை மற்றும் ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு நடைபெறவுள்ள நிலையில், இலங்கையின் மிகப் பயங்கரமான சட்டம் எனக் கருதப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்கும் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



புதுடில்லிப் பயணத்தின் பின்னர் இந்தத் திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னணியில் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வில் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கையின் வீரியத்தைக் குறைக்கவே என்பது பட்டவர்த்தனம். அத்துடன் நீதியமைச்சர் அலிசப்ரி சமர்ப்பித்திருக்க வேண்டிய திருத்தச் சட்டமூலத்தை வெளிவிவகார அமைச்சராக இருக்கும் பேராசிரியர் பீரிஸ் ஏன் சமர்ப்பித்தார் என்பதே இங்கு கேள்வி.

பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என நீதியமைச்சர் உறுதியளித்திருந்தார் எனவும் அவ்வாறான நிலையில் இந்தத் திருத்தச் சட்ட மூலத்தை சபையில் ஏன் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்,கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்ற பொருள்கோடலுக்கும் அரசாங்கம் காத்திருக்கின்றது. ஏனெனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் தொடர்புடைய தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் நீதிமன்றங்களில் உள்ளன அதனாலேயே உயர் நீதிமன்றத்திடம் இந்த நகல் சட்டமூலம் பொருள்கோடலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

ஆகவே ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு மற்றும் பிம்ஸ்டெக் சர்வதேச மாநாடு ஆகியவற்றுக்கு முன்னதாக இலங்கை தங்களைச் சுத்தப்படுத்த முற்படுகின்றது என்பதே இதன் அர்த்தமாகும். ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் இதன் பின்னணி தொடர்பான விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தத் தயங்குவதன் மர்மம் குறித்த கேள்விகளும் உண்டு.

ஜெனீவா அமர்வு, பிம்ஸ்டெக் மாநாட்டுக்கு முன்னர் இது பற்றிய சந்தேகங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் வெளிப்படுத்த வேண்டும். இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில், ஈழத்தமிழர் விவகாரங்களில் பொறுப்புக்கூறல் முறைக்கு உட்படுவது போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது.

▶ 11

சிலம்பு




# குழந்தைகளை விற்கும் ஆப்கான் பெற்றோர்

மேற்கு ஆப்கானிஸ்தானில், வறட்சி மற்றும் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் மண் செங்கல் குடிசைகளின் பரந்த குடியிருப்பில், ஒரு பெண் தனது மகளைக் காப்பாற்ற போராடுகிறார். அஜீஸ் குல்லின் கணவர் 10 வயது சிறுமியைத் தனது மனைவியிடம் சொல்லாமல் விற்று, ஐந்து குழந்தைகளைக் கொண்ட தனது குடும்பத்திற்கு உணவளிக்க முன்பணத்தை எடுத்துக் கொண்டார். அந்த பணம் இல்லாவிட்டால், அவர்கள் அனைவரும் பட்டினி கிடப்பார்கள் என்று அவர் அவளிடம் கூறினார். மீதியைக் காப்பாற்ற ஒருவரைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

ஆப்கானிஸ்தானில் வளர்ந்து வரும் ஆதரவற்ற மக்களில் பலர், தங்கள் நாடு வறுமையின் சுழலில் சுழல்வதைப் போன்ற அவநம்பிக்கையான முடிவுகளை எடுக்கின்றனர்.

மற்றும் நேட்டோ துருப்புக்களின் குழப்பமான வாபஸ்களுக்கு மத்தியில் ஆகஸ்ட் நடுப்பகுதியில் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது, உதவி சார்ந்து இருக்கும் நாட்டின் பொருளாதாரம் ஏற்கெனவே தத்தளித்துக் கொண்டிருந்தது. சர்வதேச சமூகம் ஆப்கானிஸ்தானின் வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை முடக்கியது மற்றும் அனைத்து நிதியுதவிகளையும் நிறுத்தியது, 20 ஆண்டுகளுக்கு முன்பு அதன் முந்தைய ஆட்சியின் போது மிருகத்தனத்திற்கு நற்பெயரைக் கொடுத்த தலிபான் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை. நான்கு தசாப்த கால யுத்தம், தண்டனை தரும் வறட்சி மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டிற்கு அதன் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்துகின்றன.

மருத்துவர்கள் உட்பட அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வறுமை ஆகியவை மிகவும் பாதிக்கப்படக்கூடியவை, மேலும் உதவிக் குழுக்கள் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். நாளுக்கு நாள், இந்த நாட்டில் நிலைமை மோசமடைந்து வருகிறது, குறிப்பாக குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர்," என்று ஆப்கானிஸ்தானில் உள்ள வேல்ட் விஷன் எய்ட் அமைப்பின் தேசிய இயக்குநர் அசுந்தா சாள்ஸ் கூறினார்.

இது மேற்கு நகரமான ஹெராட்டிற்கு வெளியே இடம்பெயர்ந்த மக்களுக்காக ஒரு சுகாதார கிளினிக்கை நடத்துகிறது. "இன்று குடும்பங்கள் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு உணவளிக்க தங்கள் குழந்தைகளை விற்கத் தயாராக இருப்பதைக் கண்டு நான் மனம் உடைந்தேன்" என்று சாள்ஸ் கூறினார். "எனவே மனிதாபிமான சமூகம் எழுந்து நின்று ஆப்கானிஸ்தான் மக்களுடன் இருக்க இது சரியான நேரம்." மிக இளம் பெண்களுக்குச் திருமணங்களை ஏற்பாடு செய்வது இப்பகுதி முழுவதும் அடிக்கடி நடக்கும் நடைமுறை. மணமகன் குடும்பம் - பெரும்பாலும் தொலை தூர உறவினர்கள் - ஒப்பந்தத்தைச் சீல் செய்ய பணம் செலுத்துகிறார்கள்,

மேலும் குழந்தை வழக்கமாக குறைந்தபட்சம் 15 அல்லது 16 வயது வரை தனது சொந்த பெற்றோருடன் தங்கியிருக்கும். இன்னும் பலருக்கு அடிப்படை உணவைக் கூட வாங்க முடியாத நிலையில், சிலர் அனுமதிப்பதாகக் கூறுகிறார்கள். வருங்கால மாப்பிள்ளைகள் மிகவும் இளம் பெண்களை அழைத்துச் செல்ல அல்லது தங்கள் மகன்களை விற்க முயற்சிக்கிறார்கள். ஆனால் குல், இந்த ஆழ்ந்த ஆணாதிக்க, ஆண் ஆதிக்க சமூகத்தில் வழக்கத்திற்கு மாறாக எதிர்க்கிறார்.



15 வயதில் திருமணம் செய்து கொண்ட அவர், தனது மகள் காண்டி குல் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறுகிறார். குல் தனது கணவன் காண்டியை விற்றதை அறிந்த தருணம் நன்றாக நினைவிருக்கிறது. சுமார் இரண்டு மாதங்கள், குடும்பம் சாப்பிட முடிந்தது. இறுதியில், அவள் கணவனிடம் பணம் எங்கிருந்து வந்தது என்று கேட்டாள், அவன் அவளிடம் சொன்னான். "என் இதயம் துடிப்பதை நிறுத்தியது. அந்த நேரத்தில் நான் இறந்திருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன், ஆனால் நான் இறப்பதைக் கடவுள் விரும்பவில்லை," என்று குல் கூறினார்.

காண்டி தன் தாயின் அருகில் அமர்ந்தாள், அவளது பழுப்பு நிற கண்கள் அவளது வான-நீல முக்காடுக்கு அடியில் இருந்து வெட்கத்துடன் எட்டிப் பார்த்தன. "ஒவ்வொரு முறையும் அந்த இரவை நான் நினைவுகூர்கிறேன் ... நான் இறந்து மீண்டும் உயிர் பெறுகிறேன். அது மிகவும் கடினமாக இருந்தது. அவள் ஏன் அப்படி செய்தாய் என்று கணவரிடம் கேட்டாள்." அவர் ஒன்றை விற்று மற்றதைக் காப்பாற்ற விரும்புவதாகக் கூறினார். 'நீங்கள் அனைவரும் இப்படித்தான் இறந்திருப்பீர்கள்,' (அவர் கூறினார்.) நான் அவரிடம், 'நீங்கள் செய்ததை விட இறப்பது மிகவும் சிறந்தது' என்று சொன்னேன்

குல் தனது சமூகத்தைத் திரட்டினார், அவரது சகோதரர் மற்றும் கிராமப் பெரியவர்களிடம் தனது கணவர் தனது குழந்தையை விற்றுவிட்டார் என்று கூறினார். அவர்கள் அவளை ஆதரித்தனர், மேலும் அவர்களின் உதவியுடன் அவள் தன் குழந்தைக்கு "விவாகரத்து" பெற்றுக் கொடுத்தாள், ஆனால் நிபந்தனையின் பேரில் அவள் தன் கணவன் பெற்ற 100,000 ஆப்கானியர்களை (சுமார் $1,000) திருப்பிச் செலுத்துகிறாள். அது அவளிடம் இல்லாத பணம். குல் தன்னை அதிகாரிகளிடம் கண்டித்துவிடுவானோ என்ற பயத்தில் அவளுடைய கணவன் தப்பி ஓடிவிட்டான். தாலிபான் அரசாங்கம் சமீபத்தில் பெண்களைக் கட்டாயப்படுத்தி திருமணம் செய்யத் தடை விதித்துள்ளது அல்லது தகராறுகளைத் தீர்ப்பதற்குப் பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பரிமாற்ற டோக்கன்களாகப் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளது. வருங்கால மணமகனின் குடும்பத்தினர், சுமார் 21 அல்லது 22 வயதுடையவர், அந்தப் பெண்ணைக் கோருவதற்கு ஏற்கெனவே பலமுறை முயற்சித்துள்ளனர் என்று அவர் கூறுகிறார். எவ்வளவு காலம் அவர்களைத் தற்காத்துக் கொள்ள முடியும் என்று அவளுக்குத் தெரியவில்லை. ■

> **"மருத்துவர்கள் உட்பட அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் வறுமை ஆகியவை மிகவும் பாதிக்கப்படக்கூடியவை, மேலும் உதவிக் குழுக்கள் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். நாளுக்கு நாள், இந்த நாட்டில் நிலைமை மோசமடைந்து வருகிறது, குறிப்பாக குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர், என்று ஆப்கானிஸ்தானில் உள்ள வேல்ட் விஷன் எய்ட் அமைப்பின் தேசிய இயக்குநர் அசுந்தா சாள்ஸ் கூறினார்."**

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

## பொதுமக்களைச் சங்கடப்படுத்தும்
# வேலை நிறுத்தங்கள்

அரச ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்படும்போது வேலை நிறுத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வேலை நிறுத்த அறிவிப்பு வெளியானதும் அரசாங்கம் அதற்கு செவிசாய்ப்பதில்லை. வேலை நிறுத்தம் உச்சக்கட்டத்தை அடையும்போது பேச்சுவார்த்தை நடத்தப்படும் எந்த ஒரு வேலை நிறுத்தப் போராட்டமும் முதல் சுற்றுப் பேச்சு வார்த்தையில் முடிவு காணப்படுவதில்லை.

காலையில் ஊடகச் செய்திகளில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் பற்றிய செய்திகளே முதலிடம் பிடிக்கின்றன. மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம், ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், போக்குவரத்து சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் எனத் தொடர்ச்சியாக வேலை நிறுத்தச் செய்திகளே முதலிடம் பிடிக்கின்றன.

கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கான இலங்கைத் தொழிலாளர்கள் வாழ்க்கை, சமூக நிலைமைகள் ஆகியவற்றைக் காரணம் காட்டி வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஆசிரியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டுவந்து ஆசுவாசமாக இருப்பதற்கிடையில் சுகாதாரத்துறைத் தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தத்தால் நாடெங்கும் உள்ள வைத்திய சாலைகள் முடங்கின.

சம்பள முரண்பாடுகளைச் சரிசெய்தல், போக்குவரத்து கொடுப்பனவுகள் மற்றும் திடீர் கடமை அழைப்பு கொடுப்பனவுகள் - 3,000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக - அதிகரிக்கப்பட வேண்டும் மற்றும் மேலதிக நேர ஊதியம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பதவி உயர்வு நடைமுறைகளைப் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

கடந்த 12 மாதங்களில் ஆயிரக்கணக்கான சுகாதார ஊழியர்கள் சுமார் 30 வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். தொழிற்சங்கங்கள் அதே கோரிக்கைகளை மீண்டும் முன்வைத்து, பின்னர் இந்த நடவடிக்கைகளை ஒத்திவைக்கின்றன.

ஒரு நாள் வேலைநிறுத்தத்துக்கு, கடந்த நவம்பரில் சுகாதார தொழில் வல்லுநர்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்திருந்தது. மாகாண ரீதியான தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. 15 தொழிற்சங்கங்களின் கூட்டணியான சுகாதார தொழில் வல்லுநர்களின் சம்மேளனம் பெப்ரவரி 7 ஆம் திகதிக்கு முன்னர் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், சுகாதார ஊழியர்களின் காலவரையற்ற தேசிய வேலைநிறுத்தத்தை நடத்தப்போவதாக அறிவித்தது.

சுகாதாரத்துறை ,மின்சாரம், போக்குவரத்து ஆகியவற்றில் வேலை செய்பவர்களின் போராட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நேரடியாக மக்களைப் பாதிக்கக்கூடியவை. அவர்களின் நியாயமான கோரிக்கைகள் உதாசீனப்படுத்தப்படும்போது பொது மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். அரசியல்வாதிகளுக்கும் அமைச்சர்களுக்கும் அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை.

மின்சாரம் தடைப்பட்டால் உடனடியாக இயங்கும் வகையில் மின் பிறப்பாக்கி இருக்கும். பஸ், ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தாலும் அவர்கள் பாதிப்படைவதில்லை. அவர்களிடம் வகை வகையான வாகனங்கள் இருக்கும். தும்மல், தடிமல் என்றாலே அரசியல்வாதிகள் தனியார் வைத்தியசாலைகளைத்தான் நாடுவார்கள். ஆனால், அப்பாவிப் பொதுமக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தைத்தான் எதிர்பார்ப்பார்கள்.

ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.வேலை நாட்கள், விடுமுறைகள் போன்றவை அவற்றுள் அடங்கும். ஆனால், வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமையை இலங்கைச் சட்டம் வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லை, இருப்பினும் தொழிற்சங்க கட்டளைச் சட்டம் வேலைநிறுத்த நடவடிக்கையை உள்ளடக்கியது மற்றும் அத்தியாவசியச் சேவைகளில் வேலைநிறுத்தத்தைத் தடைசெய்கிறது. வேலைநிறுத்தம் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு முன்னதாக, பரிந்துரைக்கப்பட்ட முறையில் மற்றும் படிவத்தில் முதலாளிக்குத் தெரிவிக்கப்பட்டால், சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறது.கட்டாயம் மத்தியஸ்தம் மற்றும் அத்தியாவசிய சேவைகள் என்று அழைக்கப்படுபவற்றின் நீண்ட பட்டியல் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமையை கட்டுப்படுத்துகிறது.

தொழிற்சங்கங்கள் ஆணைச் சட்டம் மற்றும் தொழில் தகராறு சட்டம் வேலைநிறுத்தம் என வரையறை செய்யப்பட்டுள்ளது, எந்தவொரு வர்த்தகம் அல்லது தொழிற்துறையில் இணைந்து செயற்படும் நபர்களின் குழுவால் வேலை நிறுத்தம், ஒருங்கிணைக்கப்பட்ட மறுப்பு, அல்லது எந்த எண்ணிக்கையிலான நபர்களின் பொதுவான புரிதலின் கீழ் மறுப்பு, அல்லது அவ்வாறு பணியமர்த்தப்பட்டிருந்தால், தொடர்ந்து வேலை செய்ய அல்லது வேலைவாய்ப்பை அனுமதிக்கப்படுகிறது.

தொழில் தகராறு என்பது முதலாளிகளுக்கும் வேலையாட்களுக்கும் இடையில் அல்லது வேலையாட்களுக்கும் வேலையாட்களுக்கும் இடையேயான வேலை அல்லது வேலையின்மை, அல்லது வேலை விதிமுறைகள், அல்லது தொழிலாளர் நிலைமைகள், ஒரு நபரின் வேலை நிலைமைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய எந்தவொரு சர்ச்சை அல்லது வேறுபாடு ஆகும்.

வேலை நிறுத்தம் செய்பவர்களுடன் பேச்சுவார்த்தை செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது. வேலை நிறுத்தம் செய்தவர்களை வேலையில் இருந்து நீக்கி வீட்டுக்கு அனுப்பிய வரலாறு ஏற்கெனவே இலங்கையில் பதியப்பட்டுள்ளது.

அரசாங்கங்கள் மாறினாலும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. வேலை நிறுத்தம் செய்பவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டும். அரசங்கம் இன்று மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. ஆகையால் அரசுக்கு நெருக்கடி கொடுக்காது நியாயமான தீர்வை எட்டுவதற்குத் தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும்.

---



# பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க என்ன செய்யப் போகிறது அரசாங்கம்

இலங்கையில் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்குச் சீனாவையும் இந்தியாவையும் எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் அந்த நாடுகளுக்கு விஜயம் செய்து உதவி புரியுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனாலும் அந்த நாடுகள் இலங்கைக்குக் கொடுக்கப்போகும் கடன், இன்றைய நிலைமையைச் சமாளிப்பதற்குப் போதுமானதல்ல. நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்குக் கடன் மறுசீரமைப்பு அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற வேண்டிய நிலை ஏற்படும் எனச் சர்வதேச முதலீட்டாளர்களை மேற்கோள் காட்டி பினான்ஸியல் ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 2019 ஆம் ஆண்டு பாரிய வரிக் குறைப்பு செய்யப்பட்டதுடன், கொவிட் தொற்று காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது.

வட்டி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக இந்த ஆண்டு சுமார் 7 பில்லியன் டொலர் செலுத்த வேண்டும். ஆனால், இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 3 பில்லியனுக்குக் குறைவான அமெரிக்க டொலரே இருக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் அடுத்த பெரும் சவால் எதிர்வரும் ஜூன் மாதம் ஒரு பில்லியன் டொலர் இறையாண்மை முறிகளை மீளச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பத்திரப்பதிவுதாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடலாம் என்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளார். சர்வதேச பத்திரம் வைத்திருப்பவர்களுடன் கடன் நிவாரணம் பற்றி இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாததால் மின்வெட்டு மற்றும் எரிபொருள், பால் பவுடர் உள்ளிட்ட இறக்குமதிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு இரட்டை இலக்க பணவீக்கத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மூன்றில் ஒரு பங்குக் கடன்கள் சர்வதேச பத்திரம் வைத்திருப்பவர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது மற்றும் நாடு கடந்த வாரம் $500 பத்திரத்தை திருப்பிச் செலுத்தியது. இன்னும் ஒரு பில்லியன் டொலர் ஜூலையில் வரவுள்ளது.

இந்தியா கிட்டத்தட்ட 1 பில்லியன் டொலர் நிவாரணம் வழங்கியுள்ளது, மேலும் உதவிகோரிய பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. சீனா கடந்த மாதம் $1.5bn மதிப்புள்ள ரென்மின்பி நாணய பரிமாற்றத்தை வழங்கியது, இருப்பினும் இது டொலர் மதிப்பிலான கடனைச் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட வாய்ப்பில்லை என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சீனாவிடம் இருந்து பெறப்பட்ட கடன் தேவையற்ற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு நெருக்கடியை அதிகப்படுத்தியதாக குற்றச்சாட்டு உள்ளது.

கடன் சுமை என்பது இலங்கைக்குத் திடீரென ஏற்பட்ட ஒன்று அல்ல. யுத்தம் முடிந்ததும் இலங்கை சொர்க்க பூமியாகும் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. அதற்கேற்றால் போல கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. யுத்தத்தால் அழிக்கப்பட்ட அனைத்தும் நவீன முறையில் கட்டி எழுப்பப்பட்டன. இது வரை காலமும் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தியதுபோல் இப்போதைய கடனையும் செலுத்தி விடலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு இருந்தது.

கொரோனா என்ற கொடூரத் தொற்று எல்லாவற்றையும்புரட்டிப் போட்டது. கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாக்க உலக நாடுகள் அனைத்தும் போராடின. கொரோனாவில் இருந்து மக்களை மீட்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை கொடுத்தது. கொரோனாவுடன் உலக நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. வாங்கிய கடனின் வட்டியைச் செலுத்துவதற்குக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடன் கொடுக்கும் நாடுகளும் அமைப்புகளும் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை தயாராக இல்லை. இந்த இடியப்பச் சிக்கலில் இருந்து வெளியேறி மக்களையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளது.

# வடக்கின் கரிநாளும் மலையகத்துக்குக் கிடைக்காத சுதந்திரமும்...!

பிதாமகன்




இலங்கையின் 74 ஆவது சுந்திர தினத்தை வடக்கில் மக்கள் கரி நாளாக அனுஷ்டித்தனர். மற்றுமொரு சாரார் ஒன்றும் நடவாதது போன்று தேசிய கொடி ஏற்றிக் கொண்டாடினர். தலைநகர் கொழும்பில் ஆளும் அரசாங்கமானது தேசிய சுதந்திர விழாவாகக் கொண்டாடியது. மலையகத்திலும் சுதந்திர தின நிகழ்வுகள் நுவரெலியா மாவட்டத்தின் கிரகரிவாவிக்கு அருகாமையில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வை நுவரெலியா மாவட்ட செயலகமும் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. அரசாங்கத்தின் பக்கமிருக்கும் இ.தொ.காவின் இராஜாங்க அமைச்சர் தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டிருக்கவில்லை. அவர் நுவரெலியா நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். அவரை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அறிவுறுத்தல்கள் வந்திருக்கலாம். ஆளுந்தரப்பில் நுவரெலியா மாவட்டத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் 5 எம்.பிக்கள் இருந்தாலும் மாவட்டத்துக்கு ஒரே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் உள்ளார். அவர் அமைச்சர் சி.பி.ரட்நாயக்க. அவரும் தலைநகர் நிகழ்வில் கலந்து கொள்ள இராஜாங்க அமைச்சர் இங்கு கலந்து கொண்டார்.

இதில் விசேட அம்சம் என்னவெனில், இங்கு உரையாற்றியிருந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையெனக் கூறினார். இது அங்கு வருகை தந்திருந்தவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. ஏனென்றால் சுதந்திர தினத்துக்கு முதல் நாள் அவர் தனது பிரத்தியேக முகநூல் தளத்தில் பின்வருமாறு சுதந்திர தின வாழ்த்துச் செய்தியை பதிவேற்றியிருந்தார்.

'இலங்கை 74 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. இத்தினத்தில் பெருந்தோட்ட மக்களுக்குப் பல்வேறு வரப்பிரசாதங்கள் கிட்டும் என்ற திடமான நம்பிக்கையோடு நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். அனைத்து இலங்கை வாழ் மக்களுக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.'

இவ்வாறு வாழ்த்துச் செய்தியை விடுத்திருந்த ஜீவன் தொண்டமான் மறுநாள் சுதந்திர தின நிகழ்வில் வித்தியாசமாகப் பேசியிருந்தமையை மறுநாள் பல ஊடகங்கள், செய்தியாக வெளிப்படுத்தியிருந்தன. எனினும் தான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வையும் படங்களுடனும் தனது உரையினுடனும் முகநூலில் பதிவேற்றும் ஜீவன் தொண்டமான், சுதந்திர தின நிகழ்வில் தனது உரையை பதிவேற்றாமல் படங்களை மட்டும் பதிவேற்றியிருந்தார்.

எங்கே தனது உரை பெரிய இடத்துக்குச்சென்றால் பதில் கூற வேண்டி வருமோ என்ற அச்சமோ தெரியவில்லை. ஆனால், அவரின் உரை எதிர்த்தரப்பினருக்கு வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல் ஆயிற்று. அதே வேளை கட்சியின் மூத்த பிரதிநிதிகளுக்கு இவரது உரை வயிற்றில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காலங் காலமாக மலையக மக்களுக்கு எல்லா உரிமைகளையும் வாங்கிக்கொடுத்தது இ.தொ.கா தான என அவர்களே பிரசாரம் செய்து வரும் நிலையில் எமது புதிய இரத்தமான செயலாளர் என்ன இப்படி கூறி விட்டாரே என கட்சிக்குள் கசமுசாக்கள் அதிகரித்துள்ளன.

ஆனால், எதிர்த்தரப்பினரோ அவர் கூறியதில் என்ன தவறு உள்ளது? இத்தனை காலமும் இந்த மக்களை அடிமையாக வைத்திருந்ததே இ.தொ.கா தான். இப்போது கட்சியின் நான்காவது வாரிசு அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார். அவர் கடந்த காலத்தை போட்டுடைத்திருக்கிறார். இதில் என்ன ஆச்சரியப் பட வேண்டியுள்ளது என முகநூலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை துவைத்து காயப் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து பாராளுமன்றில் நியமன எம்.பியாக அவரது கொள்ளுத் தாத்தா அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் விளங்கினார். சுதந்திரத்துக்குப் பிறகு மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை அந்தஸ்து கிடைத்த பின்னர் இடம் பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவர் 1977 இல் ஜே.ஆரின் அரசாங்கத்தில் அமைச்சரானார். அதன் பின்னர் தொடர்ச்சியாக எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும் மக்களுக்காக என்ற ஒரே வார்த்தையைக் கூறி விட்டு ஆளும்பக்கம் ஆதரவு தரும் கொள்கையை இ.தொ. கா தொடர்ந்தும் கடைபிடித்து வந்தது. அவருக்குப் பிறகு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஆறுமுகன் தொண்டமான் 25 வருடங்களுக்கும் மேல் ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் பக்கமிருந்த அமைச்சரவை பதவி உள்ளிட்ட பல சலுகைகளை அனுபவித்தார். ஆறுமுகன் தொண்டமானின் தந்தை இராமநாதன் தொண்டமான் முதலாவது மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மத்திய மாகாண சபையின் முதலாவது கல்வியமைச்சராக விளங்கினார் என்பது முக்கிய விடயம்.



தற்போது ஆறுமுகனின் மகன் ஜீவன் தொண்டமானும் இ.தொ.காவின் கொள்கை படியே தனது கன்னி இன்னிங்ஸை ஆரம்பித்துள்ளார்.

மலையக வரலாற்றில் தனது பரம்பரையே பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிக காலம் தக்க வைத்து கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் இந்த மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென அவர் பேசியிருந்தமை தனது தந்தை, பாட்டனார், கொள்ளுத் தாத்தா என அனைவரையும் அவமானப் படுத்தியுள்ளதாகக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் குமுறுகின்றனர். ஆனால் மறுபக்கம் உண்மையில் இந்த மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென்பதை அவர்களும் ஏற்றுக் கொள்ளத்தான் செய்கின்றனர். வடக்கில் மக்கள் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க, இங்கு மலையகத்தின் பாரம்பரிய கட்சியின் இளம் தலைவர் தனது கட்சியின் முகத்திலேயே கரியை பூசி விட்டார் என்று முகநூலில் விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன.

இலங்கையின் சுதந்திர தின வரலாறு பற்றி அறிந்திராத இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தனது உரையில் இனவாத செயற்பாடுகள் காரணமாக நாம் என்றும் ஒற்றுமையாக வாழ முடியாது என்றும் சிங்கள, முஸ்லிம், தமிழர்கள் அனைவரும் போராடி பெற்ற சுதந்திரத்தை மலையக மக்கள் அனுபவிக்க முடியாதுள்ளனர் என்றும் பேசியிருக்கிறார். இந்தியாவைப் போன்று இலங்கையின் சுதந்திரத்தை எவரும் போராடிப்பெறவில்லையென்பது வரலாறு. இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்ட போது அருகிலிருந்த இலங்கைக்கும் சுதந்திரத்தை அறிவித்தனர் ஆங்கிலேயர். அதுவும் அரைவாசி சுதந்திரமே அது. 1972 இல் இலங்கை குடியரசான பின்னரே முழுமையாக பிரித்தானியரிடமிருந்த சுதந்திரத்தைப் பெற்றது.

ஏதோ வாய்க்கு வந்ததை ஜீவன் பேசியிருந்தாலும் மலையக மக்கள் இன்னும் சுதந்திரத்தை அனுபவிக்கவில்லையென்பதே உண்மை. வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் சுதந்திர தாகம் வேறு, இந்த மக்களின் சுதந்திரம் வேறு என வகைப்படுத்த முடியாது. சுதந்திரம் என்றால் அனைத்திலும் கிடைக்கும் உரிமையாகும். அந்த உரிமைகளை இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் கூட்டம் இன்னும் பெறவில்லையென்பதே யதார்த்தம். ■

> **"மலையக வரலாற்றில் தனது பரம்பரையே பாரளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிக காலம் தக்க வைத்துக் கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் இந்த மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென அவர் பேசியிருந்தமை தனது தந்தை, பாட்டனார், கொள்ளுத்தாத்தா என அனைவரையும் அவமானப் படுத்தியுள்ளதாகக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் குமுறுகின்றனர். ஆனால் மறுபக்கம் உண்மையில் இந்த மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லையென்பதை அவர்களும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கின்றனர்."**

ரமா

**“இரண்டு நாடுகளுக்கிடையில் உருவான எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலக வல்லரசுகள் களத்தில் இறங்கியுள்ளன. அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து உட்படப் பல நாடுகள் ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்துகின்றன. யாருடைய பேச்சையும் காதுகொடுத்துக் கேட்பதற்கு ரஷ்யா தயாராக இல்லை.”**



# வல்லரசுகளின் அதிகாரப் பசியில் சிக்கிய ரஷ்ய – உக்ரைன் எல்லை

போர் மேகம் சூழ்ந்துள்ள ரஷ்ய - உக்ரைன் எல்லையில் ஏட்டிக்குப் போட்டியாக படைகளும் படைக் கலங்களும் குவிக்கப்பட்டு வருகின்றன. ஒரே நாடு ஒரே மக்கள் என இருந்தவர்கள் 1991 ஆம் ஆண்டு பிரிவினைக்குப் பின்னர் இரண்டு நாடுகளாகின.

1991இல் சோவியத் யூனியன் உடைவதற்கு முன்பு வரை உக்ரைன் சோவியத் ஒன்றியத்தில் உறுப்பு நாடாக அங்கம் வகித்தது. பின், சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்து 15 நாடுகளாகப் பிரிந்தபோது ரஷ்யாவும் உக்ரைனும் இறையாண்மையுள்ள தனித்தனி நாடுகளாயின. உக்ரைன் தன்னுடைய ஒருபுற எல்லையை ரஷ்யாவோடும் மற்றொருபுற எல்லையை ஐரோப்பிய யூனியனுடனும் பகிர்ந்து கொள்கிறது. அதே நேரத்தில் கலாசார ரீதியாக ரஷ்யாவோடு நெருக்கமான தொடர்பு கொண்ட நாடாக உள்ளது உக்ரைன். இன்றும் உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப்பகுதியில் ரஷ்ய மொழி பேசும் மக்கள் அதிக அளவில் வாழ்கிறார்கள். அவர்கள் ரஷ்ய ஆதரவு மனநிலை கொண்டவர்களாக இருப்பதும் தனக்கான அரசியலைத் தீர்மானிப்பதில் உக்ரைனுக்கு இருக்கும் மிகப்பெரும் சவால்களில் ஒன்று.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து உக்ரைன் தனி நாடாக மாறினாலும், உக்ரைனைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவே ரஷ்யா விரும்புகிறது. அது தன்னுடைய பாதுகாப்பிற்கு அவசியமானது என்றும் ரஷ்யா கருதுகிறது. ஆனால், உக்ரைனோ அரசியல் ரீதியாக மேற்குலக நாடுகளின் உறவை விரும்புகிறது. அதை விரும்பாத ரஷ்யா, உக்ரைனுடன் தொடர்ந்து மோதல்ப் போக்கை கடைபிடித்து வருகிறது. இது தொடர்பாக இரு தரப்பிற்கும் இடையே இருந்த புகைச்சல், கடந்த 2014 ஆம் ஆண்டு மிகப்பெரும் மோதலாக வெடித்தது.



ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொருளாதார ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தை ரஷ்ய ஆதரவாளரான உக்ரேனிய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சி நிராகரிக்கிறார். அதனைத்தொடர்ந்து, நவம்பர் 2013 இல் தலைநகர் கியேவில் அரசுக்கு எதிராக மக்கள் புரட்சி செய்ய ஆரம்பித்தனர். கௌரவத்திற்கான புரட்சி (The revolution of dignity) என அறியப்படும் இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமானதையடுத்து, ஜனாதிபதி யானுகோவிச் 2014 பெப்ரவரியில் நாட்டை விட்டு வெளியேறுகிறார். அடுத்த ஒரு மாதத்தில் ரஷ்யா, உக்ரைனின் தெற்குப்பகுதியில் இருந்த கிரிமியா தீபகற்பத்தைக் கைப்பற்றி தன் நாட்டுடன் இணைந்து கொண்டது. ரஷ்யாவின் இந்தச் செயலுக்கு உலகம் முழுவதும் இருந்து கடும் கண்டனங்கள் எழுந்தன.




மேலும், உக்ரைனின் கிழக்குப்பகுதியில் உள்ள ரஷ்ய ஆதரவு நிலை கொண்ட பிரிவினைவாதிகளுக்கு ரஷ்யா தொடர்ந்து உதவி வருகிறது. அந்தப் பிரிவினை குழுக்களுக்கும் உக்ரைனின் ராணுவத்திற்கும் இடையே நடந்து வரும் போரில் தற்போது வரை 14,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கிடையில் உருவான எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலக வல்லரசுகள் களத்தில் இறங்கியுள்ளன. அமெரிக்கா, ஜேர்மனி, இங்கிலாந்து உட்படப் பல நாடுகள் ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்துகின்றன. யாருடைய பேச்சையும் காதுகொடுத்துக் கேட்பதற்கு ரஷ்யா தயாராக இல்லை.

மாஸ்கோவில் உள்ள இங்கிலாந்துத் தூதுவர் உக்ரைன் நெருக்கடியைத் தணிக்க முயற்சிக்கிறார். இங்கிலாந்தின் வெளியுறவுச் செயலர் லிஸ் ட்ரஸ் கடந்த புதன்கிழமை மாஸ்கோவுக்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்தினார். இங்கிலாந்தின் வெளியுறவுச் செயலர் ஒருவர் நான்கு வருடங்களின் பின்னர் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். போர் ஏற்பட்டால் அனைத்து நாடுகளும் பாதிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

உக்ரைனின் எல்லைக்கு அருகே 100,000 துருப்புக்களை குவித்துள்ளது மற்றும் பிராந்தியத்தில் இராணுவ சூழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளது, ஆனால் அதன் அண்டை நாடு மீது படையெடுக்கும் திட்டம் இல்லை என்று கூறுகிறது. உக்ரைன் மற்றும் பிற முன்னாள் சோவியத் நாடுகளை உறுப்பினர்களாக நேட்டோ அனுமதிக்காது, கூட்டணி அங்கு ஆயுதம் ஏந்துவதை நிறுத்த வேண்டும், கிழக்கு ஐரோப்பாவில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று மேற்கு நாடுகளிடம் இருந்து உத்தரவாதம் கோருகிறது. அமெரிக்காவும் நேட்டோவும் இந்தக் கோரிக்கைகளை அடியோடு நிராகரிக்கின்றன.

மாஸ்கோ உக்ரைனை ஆக்கிரமித்தால் ரஷ்ய வணிகங்கள் மற்றும் தனி நபர்கள் மீது இதுவரை இல்லாத கடுமையான தடைகளை விதிக்கப் போவதாக மேற்கத்திய நாடுகள் கூறுகின்றன.

இரண்டு நாள் பயணத்தின் போது வெளியுறவு மந்திரி செர்ஜி லாவ்ரோவை சந்தித்த டிரஸ், “எங்கள் பதிலின் வலிமை குறித்து ரஷ்யா எந்த சந்தேகமும் கொள்ளக்கூடாது” என்று கூறினார்.

உக்ரைனின் சுதந்திரம் மற்றும் இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் சர்வதேச உடன்படிக்கைகளுக்குத் கட்டுப்படுமாறு மாஸ்கோவை ட்ரஸ் வலியுறுத்தினார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, வாஷிங்டன் மற்றும் அதன் நட்பு நாடுகளின் ரஷ்ய படையெடுப்பு பற்றிய எச்சரிக்கைகளை நிராகரித்தார், அவற்றை “அபத்தமானது” என்றார்.

“எங்களிடம் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் எதுவும் இல்லை, ஆனால் அமெரிக்கா செய்கிறது என்று எனக்கு ஒரு உணர்வு இருக்கிறது,” என்று அவர் கூறினார், வாஷிங்டனின் அறிக்கைகள் ஈராக்கில் அமெரிக்கப் போருக்கு முந்தைய சொல்லாட்சியை நினைவூட்டுகின்றன.

கியேவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு வெளியே உக்ரேனியர்கள் பேரணி நடத்தினர், ரஷ்ய தாக்குதலைத் தடுக்க வாஷிங்டனின் சர்வதேச செல்வாக்கைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினர்.

மேற்கத்திய தலைவர்கள் நெருக்கடியை தணிக்கும் நம்பிக்கையில் பல சுற்று உயர்-பங்கு இராஜதந்திரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் திங்களன்று மாஸ்கோவில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் ஐந்து மணிநேரப் பேச்சுக்களை நடத்தினார். உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை அடுத்த நாள் கியேவில் சந்தித்தார்.

பனிப்போருக்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான மிகப்பெரிய பாதுகாப்பு நெருக்கடிக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண நேரம் எடுக்கும் என்றும் புடின் தன்னிடம் கூறியதாக மக்ரோன் கூறினார்.

பின்னர் அவர் ஜேர்மன் சான்சிலர் ஓலாஃப் ஷோல்ஸ் மற்றும் போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடாவை சந்திக்க பேர்லினுக்குச் சென்றார், மேலும் அவர்கள் ரஷ்யாவின் விரிவாக்கத்தைத் தணிக்க வேண்டும் என்றும் அது ஐரோப்பிய பாதுகாப்பு குறித்த அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

புதனன்று, ஸ்பெயின் வெளியுறவு மந்திரி ஜோஸ் மானுவல் அல்பரேஸ் கியேவ் சென்று உக்ரேனிய வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபாவை சந்தித்தார்.

ஜப்பான் தனது எரிவாயு இருப்புகளில் சிலவற்றை ஐரோப்பாவிற்குத் திருப்பிவிட முடிவு செய்துள்ளதாக ஜப்பானிய பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கொய்ச்சி ஹகியுடா தெரிவித்தார். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கையை ஏற்று இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா இயற்கை எரிவாயு விநியோகத்தைத் துண்டிக்கும் பட்சத்தில் அதன் தாக்கத்தை குறைக்க அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அதிகாரிகள் உலகளாவிய இயற்கை எரிவாயு முகவர்களுடன் ஒருங்கிணைத்து வருகின்றனர்.

கூட்டணியின் கிழக்குப் பகுதியை வலுப்படுத்த நேட்டோ படைகளை அனுப்புவதையும் முடுக்கிவிட்டுள்ளது.

ஜேர்மனியின் வில்செக்கில் இருந்து உக்ரைன் எல்லையை ஒட்டிய ருமேனியாவுக்கு 2 ஆவது குதிரைப் படைப்பிரிவை அமெரிக்கா மாற்றத் தொடங்கியுள்ளது. சுமார் 1,000 நேட்டோ துருப்புக்களை அனுப்பவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதல் துருப்புக்கள் ருமேனியாவை வந்தடைந்ததாகப் படைப்பிரிவின் தளபதி கர்னல் ஜோ ஈவர்ஸ் தெரிவித்தார். ஆனால் கவனம் பயிற்சியில் இருக்கும், நாங்கள் ஆரம்பத்தில் அங்குள்ள பிராந்தியத்தில் உள்ள பல ருமேனிய கூறுகளுடன் கூட்டாளியாக இருப்போம்.”

82 ஆவது வான்வழிப் பிரிவில் இருந்து சுமார் 1,700 அமெரிக்க வீரர்கள் போலந்துக்குச் செல்கிறார்கள், அங்கு பிரிட்டன் மேலும் 350 துருப்புக்களை அனுப்புவதாக உறுதியளித்தது.

போலந்தில் உள்ள அமெரிக்கத் தூதரக சேவைகள் உக்ரைனில் வசிக்கும் அமெரிக்கர்களின் வெளியேறத் தயாராகி வருகின்றன. அவர்கள், ரஷ்யா படையெடுத்தால் வெளியேற முடிவு செய்யலாம். போலந்திற்கு அனுப்பப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புக்கள், ரஷ்ய தாக்குதல் ஏற்பட்டால், போலந்து வழியாக உக்ரைனில் இருந்து வெளியேறும் அமெரிக்கர்களுக்கு உதவ திட்டங்களை உருவாக்கியுள்ளனர்.

உக்ரைன் -ரஷ்ய பதற்றத்தைத் தவிர்க்க உலகத் தலைவர்கள் பேச்சு வர்த்தைகளை நடத்தி வருகின்ற அதேவேளை படைகளும் ஆயுதங்களும் அங்கு குவிக்கப்பட்டு வருகின்றன. ■




# அணுசக்தி மோதலைத் தவிர்க்க உறுதியளித்த வல்லரசுகள்

உலகின் சக்தி வாய்ந்த வல்லரசுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகளும் இணைந்து அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுக்கவும் அணுசக்தி மோதலைத் தவிர்க்கவும் உறுதியளித்துள்ளன. இந்த ஆண்டின் பிற்பகுதியில் ஒரு முக்கிய அணுசக்தி ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதற்கு முன்னதாக ஒரு அரிய கூட்டு அறிக்கையில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. “இதுபோன்ற ஆயுதங்கள் மேலும் பரவுவது தடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், ஒரு அணு ஆயுதப் போரை வெல்ல முடியாது, ஒரு போதும் போராடக்கூடாது.” என உலக வல்லரசுகள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய - உக்ரைன் எல்லைப் போருக்குள் அமெரிக்கா மூக்கை நுழைக்கிறது, தாய்வானை சீனா ஆக்கிரமிக்க முற்படுகிறது. அங்கே பெரியண்ணன் அமெரிக்கா நியாயம் பேசுகிறது. பொருளா தாரத்தில் வங்குரோத்தான நாடுகளுக்கு கடன் கொடுத்து அந்த நாடுகளின் வளங்களைச் சீனா சுரண்டுகிறது. அமெரிக்காவும் சீனாவும் ரஷ்யாவும் புதிய புதிய ஆயுதங்களை வெளிப்படையாகவும் இரகசியமாகவும் தயாரிக்கின்றன. இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியன ஆயுதத் தயாரிப்பில் அதிக அக்கறை காட்டுவதில்லை.

இந்த அறிக்கை, “அணுசக்திப் போரைத் தடுப்பதற்கான ஐந்து நாடுகளின் அரசியல் விருப்பத்தை உள்ளடக்கியது மற்றும் உலகளாவிய மூலோபாய ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்கும் அணுசக்தி மோதலின் அபாயத்தைக் குறைப்பதற்கும் பொதுவான குரலை வெளிப்படுத்துகிறது,” என்று சின்ஹுவா மேற்கோள் காட்டிக் கூறினார். “ஐந்து நாடுகளும் கூட்டறிக்கையை ஒரு புதிய தொடக்கப் புள்ளியாக எடுத்துக் கொள்ள வேண்டும், பரஸ்பர நம்பிக்கையை அதிகரிக்க வேண்டும், ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும், நீடித்த அமைதி மற்றும் உலகளாவிய பாதுகாப்பின் உலகத்தை உருவாக்குவதில், செயலில் பங்கு வகிக்க வேண்டும்” என்று அறிக்கை மேலும் கூறியது.

சீனா, ரஷ்யா மற்றும் அவற்றின் மேற்கத்திய பங்காளிகளுக்கு இடையே பெரும் பதட்டங்களை ஏற்படுத்திய தற்போதைய வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஐந்து உலக வல்லரசுகளும் ‘அணு ஆயுத நாடுகளுக்கு இடையேயான போரைத் தவிர்ப்பது மற்றும் மூலோபாய அபாயங்களைக் குறைப்பது எங்கள் முதன்மையான பொறுப்புகளாக’ இருப்பதாகக் கூறியது. “அணுசக்தி பயன்பாடு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், அணு ஆயுதங்கள் - அவை தொடர்ந்து இருக்கும் வரை - தற்காப்பு நோக்கங்களுக்காகவும், ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், போரைத் தடுக்கவும் வேண்டும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்,” என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தக் கூட்டறிக்கையில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. அணு ஆயுதப் போர் ஒரு போதும் நடக்காது என்பதை உறுதி செய்வதாக உறுதியளித்தது. இந்தக் காரணமாக அணு ஆயுதப் போர் நடைபெறாது என்ற அறிவிப்பு நிம்மதியைத் தந்துள்ளது. அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றில் பல ஹைப்பர்சோனிக் ஆயுதத் திட்டங்களைக் கொண்டுள்ளது. ஆனால், பெரும்பாலானவை இன்னும் வளர்ச்சிக் கட்டத்தில் உள்ளன மற்றும் மிகவும் ரகசியமாக உள்ளன. அறியப்பட்ட திட்டங்கள் அனைத்தும் அதிக உயரத்தில் இருந்து தாக்கும் வழக்கமான ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் ஆகும். இவற்றை விட வேகமும் நவீனமுமான ஆயுதங்களை சீனா கடந்த வாரம் உருவாக்கியுள்ளது. 1,000 மைல்களுக்குள் இலக்குகளைத் தாக்க 15,345 மைல் வேகத்தைப் பயன்படுத்தி ஹைப்பர் ஆயுதத்தை அமெரிக்கா தயாரித்துள்ளது. டொனால்ட்ரம்ப் பதவியில் இருந்த போது “சூப்பர் டூப்பர் ஏவுகணை” என்று குறிப்பிட்டார். கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலுக்கான நீண்ட தூர ஹைப்பர்சோனிக் ஆயுதம் 2023 க்குள் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏவுகணை அதன் எரிபொருளின் ஒரு பகுதியாக வளிமண்டலத்தில் ஒட்சிசனைப் பயன்படுத்துகிறது. ஒரு வேகமான காற்றோட்டக் கலவையை உருவாக்க ஹைட்ரோகார்பன் எரிபொருளுடன் உள்வரும் காற்றை அழுத்துவதன் மூலம் இயந்திரம் செயல்படுகிறது, இது ஒரு வினாடிக்கு 1,700 மீற்றர் அல்லது ஒலியின் ஐந்து மடங்கு வேகத்தை எட்டும் திறன் கொண்டது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், அமெரிக்க விமானப்படையின் ஹைப்பர் சோனிக் ஏவுகணையின் சோதனை அதன் ஏவுதல் வரிசையை முடிக்க முடியாததால் கைவிடப்பட்டது. கடந்த ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி, பென்டகன் விமானம் ஹவாய், ஹவாயில் உள்ள பசுபிக் ஏவுகணை வீச்சு வசதியில் ஹைப்பர்சோனிக் கிளைடு வாகனத்தைச் சோதனை செய்தது.

இது சோதனையை வெற்றிகரமாகக் கருதியது மற்றும் 2020களின் ஆரம்பம் முதல் நடுப்பகுதியில் ஹைப்பர்சோனிக் போர்ச் சண்டை திறன்களைக் களமிறக்கும் துறையின் இலக்கை நோக்கிய ஒரு முக்கிய மைல்கல் எனக் கருதப்படுகிறது. “ரஷ்யாவைப் போல் அல்லாமல், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு ஹைப்பர்சோனிக் ஆயுதங்களை உருவாக்கவில்லை” என்று அமெரிக்கா கூறுகிறது. இதன் விளைவாக, ஒரு அமெரிக்க ஹைப்பர்சோனிக் ஆயுதம் மிகவும் துல்லியமாக இருக்க வேண்டும், இது கூடுதல் தொழில்நுட்ப சவால்களை ஏற்படுத்துகிறது. கடந்த ஆண்டு, எதிரி ஏவுகணைகளை நடுவானில் இடைமறிக்கக் கூடிய ஹைப்பர்சோனிக் ராக்கெட்டை உருவாக்க ஏரோ ஜெட் ராக்கெட்டுடன் கிட்டத்தட்ட 20 மில்லியன் டொலர் திட்டத்தில் பணிபுரிவதாக அமெரிக்கா கூறியது.

ரஷ்யா சமீபத்தில் ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஜிர்கான் என்ற ஹைப்பர்சோனிக் ஏவுகணையை ஏவியது, மேலும் 2019 இன் பிற்பகுதியில் இருந்து ஹைப்பர்சோனிக் அணுசக்தி திறன் கொண்ட அவன்கார்ட் ஏவுகணைகள் சேவையில் உள்ளன. இது பாதை மற்றும் உயரத்தை மாற்றும் திறன் கொண்டது. ரஷ்யாவின் ஹைப்பர் சோனிக் ஏவுகணையான சிர்கான் 621 மைல்கள், மணிக்கு 9,800 மைல் வேகம் கொண்டது.

இந்த மாதத் தொடக்கத்தில், ரஷ்யா முதல் முறையாக அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சிர்கானை வெற்றிகரமாகச் சோதனை செய்ததாக அறிவித்தது. அட்மிரல் கோர்ஷ் கோவ் என்ற போர்க்கப்பலில் இருந்தும், கடலோர மவுண்டிலிருந்தும் புதிய ஏவுகணையின் விமானப் பரிசோதனையை முடித்துவிட்டதாக ரஷ்யா கூறியது, ஆனால், அது முன்பு போல் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படவில்லை. கடந்த ஒகஸ்ட் மாதம் சீனா பரிசோதித்த ஹைப்பர் சோனிக் ஆர் பிட்டல் குண்டுவீச்சு அமைப்பு, 21,000 மைல் வேகத்தை அடைந்து விண்வெளியில் இருந்து தாக்குகிறது. சீனாவின் “புதிய” ஆயுதத்தின் முக்கிய கருத்து - ஒரு போர்க் கப்பலை சுற்றுப்பாதையில் செலுத்தி, இலக்கைத் தாக்கும் முன் உலகத்தை வட்டமிட வேண்டும் - 1960 களில் சோவியத் யூனியனால் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. இது சக்தி வாய்ந்த அமெரிக்க ரேடார் வரிசைகள் மற்றும் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்புகளைத் தவிர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.

அந்த அமைப்புகள் ஏவுகணைகளைக் கண்டறிவதன் மூலம் செயற்படுகின்றன - அணுகுண்டுகளைக் கொண்டு முனையக்கூடிய மிக நீண்ட தூர ஏவுகணைகள் - மற்றும் அவற்றை விண்வெளியில் கண்காணித்து, பின்னர் அவர்கள் தங்கள் இலக்குகளைத் தாக்கும் முன் அவற்றை வெடிக்கும் நம்பிக்கையில் கீழே வரும் போர்க் கப்பல்கள் மீது தாக்குதலை நடத்தும். அணு ஆயுதப் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வல்லரசுகள் எதிர் நாடுகளின் ஆயுதங்களை முடக்கும் நவீன ஆயுதங்களை ஏட்டிக்குப் போட்டியாக அறிமுகப்படுத்துகின்றன. அணுஆயுதம் தவிர்ந்த வேறு ஒரு போருக்கு அவை தம்மை ஆயத்தப்படுத்துகின்றன. ■

> **“இந்த கூட்டறிக்கையில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. அணு ஆயுதப் போர் ஒருபோதும் நடக்காது என்பதை உறுதி செய்வதாக உறுதியளித்தது. இந்தக் காரணமாக அணு ஆயுதப் போர் நடைபெறாது என்ற அறிவிப்பு நிம்மதியைத் தந்துள்ளது. அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றில் பல ஹைப்பர்சோனிக் ஆயுதத் திட்டங்களைக் கொண்டுள்ளது, ஆனால், பெரும்பாலானவை இன்னும் வளர்ச்சி கட்டத்தில் உள்ளன மற்றும் மிகவும் ரகசியமாக உள்ளன. அறியப்பட்ட திட்டங்கள் அனைத்தும் அதிக உயரத்தில் இருந்து தாக்கும் வழக்கமான ஹைப்பர் சோனிக் ஆயுதங்கள் ஆகும். இவற்றை விட வேகமும் நவீனமுமான ஆயுதங்களை சீனா கடந்த வாரம் உருவாக்கியுள்ளது. 1,000 மைல்களுக்குள் இலக்குகளைத் தாக்க 15,345 மைல் வேகத்தைப் பயன்படுத்தி ஹைப்பர் ஆயுதத்தை அமெரிக்கா தயாரித்துள்ளது. டொனால்ட்ரம்ப் பதவியில் இருந்தபோது “சூப்பர் டூப்பர் ஏவுகணை” என்று குறிப்பிட்டார். கடற்படையின் நீர் மூழ்கிக் கப்பலுக்கான நீண்டதூர ஹைப்பர்சோனிக் ஆயுதம் 2023க்குள் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”**

# தரைமேல் பிறந்தவர்களை கண்ணீரில் குளிக்க வைக்கும் கடல் எல்லைப் பிரச்சினை

அவதானி

**பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா, இலங்கை-தமிழக கடல் எல்லைகளிலேயே அத்துமீறிவரும் மீனவர்களுக்கு எதிரான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. சர்வதேசக் கடல் எல்லை கோட்டுக்கான (International Maritime Boundary Line-IMBL) ஒப்பந்தம் ஒன்று நடைமுறையிலிருக்கிறது. இதுபற்றி இரண்டு தரப்பு மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வு இருக்கிறதா..? என்பது தெரியவில்லை. ஆனால், இந்த விவகாரத்தை முன்வைத்து அரசியல் நடத்தும் அரசியல் தலைவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்பது தெளிவானது.**

*“உலகத்தின் தூக்கம் கலையாதோ உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ*
*உழைப்பவர் வாழ்க்கை மலராதோ*
*ஒரு நாள் பொழுதும் புலராதோ*
*தரை மேல் பிறக்க வைத்தான் எங்களை*
*தண்ணீரில் பிழைக்க வைத்தான்*
*கரைமேல் இருக்க வைத்தான் பெண்களை*
*கண்ணீரில் குளிக்க வைத்தான்.”*

இந்த பாடல் வரிகள் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அரை நூற்றாண்டுக்கு முன்னர் பட்டி தொட்டி எங்கும் கடலோரக் கிராமங்களிலும் ஒலித்த பிரபல்யமான திரைப்படப் பாடல்.

எம்.ஜி.ஆர். நடித்த படகோட்டி (1964) திரைப்படத்திற்காக கவிஞர் வாலி இயற்றி, ரி.எம். சௌந்தர ராஜன் பாடி, மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் - இராமமூர்த்தி இசையமைத்த பாடல்.

எப்பொழுதும் தன்னை ஏழைப் பங்காளனாகவே திரையில் காண்பிக்கும் மக்கள் திலகத்திற்குப் பெரும் புகழைத் தேடித்தந்த மற்றும் ஒரு படப் பாடல்.

மக்கள் திலகமும் உழைக்கும் வர்க்கத்தின் துயரத்துக்கு அபிநயம் காண்பித்து, தமிழக முதல்வராகவும் பதவி வகித்துவிட்டு நிரந்தரமாக விடைபெற்று விட்டார்.

இந்தியாவிலும், இலங்கையிலும் தமிழகத்திலும் அதிகாரங்கள் போதியளவு இல்லாத வடமாகாண சபையிலும் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன.

ஆனால், தாய்நாடு - சேய்நாடு என்று காலங் காலமாக பேசப்படும் இரண்டு நாடுகளையும் பிரிக்கும் கடல் பரப்பில் நீடித்திருக்கும் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வாதாரப்பிரச்சினை உட்பட தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்கு இன்னமும் நிரந்தரத்தீர்வு கண்டுபிடிக்கப்படவில்லை.

தமிழ்நாட்டிலிருந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மீன்பிடிக்கவரும் இந்திய (தமிழக) மீனவர்கள் எல்லை கடந்து வந்து, இலங்கைக்குச் சொந்தமான கடல்பரப்பில் ரோலர் படகுகள் மூலம் கடல் வளங்களை அள்ளிச்சென்றுவிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது.



அதேசமயம், தமக்கும் இக்கடலில் மீன் பிடிக்க உரிமையிருக்கிறது என்று தமிழக மீனவர்களும் தொடர்ந்து குரல் எழுப்பி போராட்டம் நடத்துகின்றனர்.

இதேவேளை, ராஜேந்திர சோழன் காலத்தில் கடல்கடந்து வந்து இலங்கையைக் கைப்பற்றிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் நாம், இக்கடல் எமக்கு சொந்தமில்லையா..? என்று தமிழ்நாட்டில் பட்டிமன்றப் பேச்சாளர்கள் முதல் தமிழ்த்திரைப்பட வசனங்களை எழுதும் எழுத்தாளர்களும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

ஊடகங்களில் தினம் தினம் இலங்கை - இந்திய மீனவர் சம்பந்தப்பட்ட நெருக்கடி குறித்து செய்திகள் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன.

கடந்த வாரம் காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்களின் 135 ரோலர் படகுகள் ஏலத்தில் விடப்பட்டன. இந்த ஏல விற்பனையின் மூலம் இலங்கை அரசுக்கு 52 இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைத்துள்ளது. இதே சமயம் காங்கேசன் துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் மேலும் சில படகுகள் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறிப்பிட்ட ஏலத்தொகையில் இலங்கை அரசு பெற்றுள்ள பணத்தை, தாங்களே தருகின்றோம். எமக்கு, எமது படகுகளை கையளித்து விடுங்கள் என்று இராமேஸ்வரம் படகு உரிமையாளர் சங்கம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளது.




அத்துடன் 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை கடற்படையால் பிடிக்கப்பட்ட நூறுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விடுவிக்கப்பட்டிருந்ததாகவும் தமது சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் சென்று பார்த்து வந்திருப்பதாகவும் இடையில் வந்த கோவிட் நெருக்கடியினால், அவற்றை மீட்டு எடுத்துச்செல்ல முடியாது போய்விட்டதாகவும் இச்சங்கத்தின் தரப்பில் சொல்லப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, வடபகுதி மீனவர்கள் யாழ். அரசாங்கச் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டமும் நடத்திவிட்டனர். இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையும் சரிவரவில்லை.



இந்நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கடந்த வாரம் இந்தியா சென்று, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெய்சங்கரை சந்தித்து இந்த விவகாரம் தொடர்பாகப் பேசியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இலங்கை அமைச்சர், இந்த மீனவர் பிரச்சினைபற்றி மாத்திரம் பேசுவதற்காக இந்தப்பயணம் மேற்கொள்ளவில்லை என்பதும் தெளிவு.

அதாவது, இலங்கை - இந்திய உறவின் 75 ஆவது ஆண்டு நிறைவை நினைவு படுத்தி, தொடர்ந்தும் அந்த உறவை ஆரோக்கியமாகப் பேணுவதற்காகவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அதில் மீனவர் பிரச்சினை, விருந்தில் பரிமாறப்படும் உணவுடன் தொட்டுக் கொள்ள வைக்கப்படும் ஊறுகாய் போன்று அமைந்துள்ளது.

இதற்கு முன்னரும் இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் எத்தனை தடவைகள் இரண்டு தரப்பினராலும் பேசப்பட்டிருக்கிறது..? என்பதைக் கடந்த காலங்களில் வெளியான பத்திரிகை ஊடகங்களிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

தமிழக முன்னால் முதல்வர்கள் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரும் இந்த விவகாரம் குறித்து அவர்களது பதவிக் காலத்தில் மத்திய அரசின் பிரதமர்களுக்குப் பல கடிதங்கள் எழுதினர்.

அதேபோன்று இலங்கை மீனவர்களும் தங்கள் நாட்டின் மீன்பிடித்துறை அமைச்சருக்கும் அரசுக்கும் பல தடவைகள் முறையிட்டுள்ளனர்.

பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடந்திருக்கின்றன. கடந்த 30 ஆண்டு காலத்தில் தமிழக மீனவர்கள் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கும் செய்தி ஆழ்ந்த கவலைக்குரியது. பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா, இலங்கை-தமிழக கடல் எல்லைகளிலேயே அத்துமீறி வரும் மீனவர்களுக்கு எதிரான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. சர்வதேசக் கடல் எல்லை கோட்டுக்கான (International Maritime Boundary Line - IMBL) ஒப்பந்தம் ஒன்று நடைமுறையிலிருக்கிறது. இதுபற்றி இரண்டு தரப்பு மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வு இருக்கிறதா..? என்பது தெரியவில்லை.

ஆனால், இந்த விவகாரத்தை முன்வைத்து அரசியல் நடத்தும் அரசியல் தலைவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பது தெளிவானது.

மீனவர்கள் கடலை நம்பி வாழ்பவர்கள். அதனால் அவர்கள் கடல் தொழிலாளர்கள் எனவும் அழைக்கப்படுபவர்கள். அந்த உழைக்கும் வர்க்ளளகம் உயிரைப் பணயம் வைத்தே கடளளலுக்குள் செல்கின்றது.

அதற்கு இயற்கையின் சீற்றமும் முன்னர் முக்கிய காரணம். ஆனால், சமகாலத்தில், கடல் எல்லைகளில் கடற்படையினரால் நடத்தப்ளபடும் துப்பாக்கி வேட்டுக்கள்தான் பிரதானமான காரணமாகவும் விளங்குகிறது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய ரோலர் படகுகள் வந்து கடல் வளங்களை அள்ளிச் சுருட்டிச் செல்வதனால், தங்கள் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுவதாக இலங்கை வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக முறையிட்டு வருகின்றனர்.

இதனை வடபகுதி தமிழ் அரசியல் தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். இவர்கள் தமிழக முன்னாள் - இந்நாள் முதல்வர்களுடன் நல்லுறவைப் பேணியவர்கள். அடிக்கடி தாய்நாடு சேய்நாடு பல்லவியும் பாடுபவர்கள்.

விவசாயி சேற்றில் கால் வைப்பதனால், நாம் சோற்றில் கை வைக்கின்றோம். அதுபோன்று மீனவர்கள் கடலில் உயிரைப் பணயம் வைத்து இறங்குவதனால்தான் நாமும் மீனை வாயில் வைக்கின்றோம்.

எனவே இந்த நீடித்த பிரச்சினையை அரசியலாக்கி ஆதாயம் தேடாமல், மனிதாபிமான கண்ணோட்டத்தில் அணுகி தீர்வுகாண்பதற்கு இரண்டு தரப்பு மீனவர்களும்தான் முயற்சிக்கவேண்டும்.

இரண்டு தரப்பிலுமிருக்கும் சிவில் அமைப்புகள், தன்னார்வத் தொண்டர் இயக்கங்கள் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வரவேண்டும். ■

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 08

## கிராமிய கல்வி மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் கிராமிய படிப்பகங்களின் உருவாக்கம்

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 06

**பகுதி - 01**

இலங்கையின் வடக்குக் கிழக்கு மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களின் கல்வித் துறையின் சரிவுகள் பலமாக உணரப்பட்டதால் ஏற்பட்டு வரும் விழிப்புணர்வு இலங்கையின் தமிழ் மாணவர்களுடைய கல்விப் புரட்சிக்கான விதைகளாக சமூகக் குழுக்கள் பலவற்றில் பேசுபொருளாகி உள்ளது. பல கிராமிய அமைப்புகள் அக்கறைகள் சமூக வெளியில் உணரப்படுகின்றன. கல்வித்திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றிலும் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற சலசலப்பு கோசமாகி வருகிறது.

கடந்த அத்தியாயம் 03 இல் உங்கள் பகுதிகளில், நீங்கள் படித்த பாடசாலைகளில், உங்கள் கிராமங்களில் என்ன நடக்கிறது என உற்று அவதானிக்கக் கேட்டிருந்தேன். என்ன செய்யலாம்? என்ற உங்கள் சிந்தனை ஓட்டத்தில் எப்படியானவற்றைச் செய்தால் எங்கள் அடித்தட்டு கல்விப்புலத்தை உறுதியாகக் கட்டியெழுப்ப முடியும் என்ற 3 உதாரண செயற்திட்டங்களை விரிவாக அலசுகிறது இந்தக் கட்டுரை! இலங்கையின் வடக்குக் கிழக்கு மலையகம் உள்ளிட்ட எந்தத் தமிழ் கிராமத்திலும் சிறிய மாற்றங்களுடன் நீங்கள் மனம் வைத்து உழைத்தால் சாத்தியமாகக் கூடிய திட்டங்களே அவை. எங்கள் அடித்தட்டுக் கல்விப் புலத்தை உறுதியாக்கக் கூடியவை! தயவு செய்து ஆழமாக உணர்ந்து வாசியுங்கள்!

என்ன செய்யலாம்? என்ற கேள்விக்கான பதில் தேடலில் என்ன பிரச்சினை என்பதற்காக பதிலின் ஆதிக்கம் அதிகம் இருக்கும். பல்வேறு பிரச்சினைகள் இனங் காணப்பட்டிருக்கும். குறிப்பாக கல்வி நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள், போர் வடுக்கள், ஆசிரியப் பற்றாக்குறை, சமூக வலைத்தளங்களின் தாக்கம், ரியூசன்கள், சாதிய முறைமைகளின் தாக்கம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். கல்விக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் தேவை என்பது உண்மை. அவற்றைப் பற்றி ஏன் இன்னும் அதிகம் எழுதவில்லை என்கிறீர்களா? ஆனால் அதற்கு முன் எங்கள் அடித்தட்டின் அத்திவாரங்களை உறுதியாக்கிக் கொள்வதே அவசியம். அந்தப் பணி தான் மிக முக்கியம். நீங்கள் அத்தனை பேரும் சமூகமாக ஒரு மித்து உழைக்க முன்வருவது தான் மிக முக்கியம்.

என் கடந்த பதிவில் வெளியிடப்பட்ட பின்னர்தான் பல பாடசாலைகளின் அடைவு மட்டங்களின் விபரங்கள் பல கிராம மக்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இப்போதுதான் பலர் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் குறைந்த பட்ச அடைவு மட்டங்களைத் தேட ஆரம்பித்துள்ளனர். பல புரிதல்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்ற வெறி பலருக்கு ஏற்பட்டு புரட்சியாக பரிணமிக்க ஆரம்பித்து விட்டது. அடித்தட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு உறுதியாக பயணிக்க ஆரம்பிக்கும் போதுதான் மேல்தட்டு மாற்றங்களை இலகுவாக செய்ய முடியும் என்பது என் நம்பிக்கை.

இனி கிராமிய அடிப்படையில் எவ்வாறு கல்வி கட்டமைப்பை உறுதியாக்கலாம் என 3 உதாரணமான செயற்திட்டங்களை முன் வைக்கிறேன். உங்கள் கிராமங்களில் கிராமிய ரீதியில் கல்வி மேம்பாட்டுக்கென ஏதும் அமைப்புகள் உண்டா என உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள்! ஊரூராய் சனசமூக நிலையங்களும் கட்சி அலுவலகங்களும் வீதிக்கொரு தொழிலாளர் சங்கங்களும் மாதர் சங்கங்களும் வாலிபர்சங்கங்களும் விளையாட்டுக் கழகங்களும் மட்டும் ஏராளம். சில சங்கங்கள் சமூக அக்கறையுடன் பரந்துபட்ட செயற்திட்டங்களைச் செய்து வருவது உண்மையாக இருப்பினும், பெரும்பாலானவை கல்வியில் அக்கறை எடுப்பதில்லை என்பது கசப்பான உண்மை. அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்களால் கிடைக்கும் உதவிகளும் கல்வியில் முதலிடப்படுவது அரிது. ஆக எல்லாவற்றிற்கும் பாடசாலையில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, கல்வித் துறையில் அரசியல் அல்லது நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படும் போது அது ஒட்டு மொத்த அடித்தளக் கல்வியைச் சிதைத்து விடுகிறது. உங்களுக்குக் கசப்பாக இருந்தாலும் அதுதான் உண்மை.

இந்தக் கட்டுரையில் நான் முன்வைக்கும் மூன்று திட்டங்கள் பெயரளவில் உங்களுக்குப் பரீட்சயமாக இருந் தாலும் செயற்பாட்டளவில் சற்று வித்தியாசமானவை. உங்கள் வழமைகளுக்கு மாறானவை.

இவை செயற்படுத்தப்படும் போது உங்கள் அடித்தளம் பலமாகும். ஒவ்வொன்றாக விளக்குகிறேன்.

1) கிராமியப் படிப்பகங்கள்

2) கல்விக்கண் காணிப்புக் குழு / கிராமியக் கல்வி மேம்பாட்டுக் குழு

3) ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி உதவித் திட்டங்கள் / புலமைப் பரிசில்கள் / பொருளாதார உதவித்திட்டங்கள்

இனி ஒவ்வொன்றாகச் சற்று ஆராய்வோம்.

**1) கிராமியப் படிப்பகங்கள்**

இன்றைய காலத்தின் கட்டாயம். முன்னொரு காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் சனசமூக நிலையங்கள் இருந்தன. பல பத்திரிகை செய்திகளை / உலக அறிவை வீடுகளுக்கு எடுத்து செல்லும் வேலையை அவை செய்தன. இன்று பெரும்பாலானவை பெயரளவில் மட்டுமே இருக்கின்றன. இந்தச் சனசமூக நிலையங்கள் கூட படிப்பகங்களாக மாற்றப்படலாம் / தொழிற்படலாம். மலையகத்தின் பிள்ளை மடுவங்கள் சற்று புனரமைக்கப்பட்டு படிப்பகங்களாக பரிணமிக்கலாம். இந்தப் படிப்பகங்கள்

> **முன்னொரு காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் சனசமூக நிலையங்கள் இருந்தன. பல பத்திரிகைச் செய்திகளை / உலக அறிவை வீடுகளுக்கு எடுத்து செல்லும் வேலையை அவை செய்தன. இன்று பெரும்பாலானவை பெயரளவில் மட்டுமே இருக்கின்றன. இந்த சனசமூக நிலையங்கள் கூட படிப்பகங்களாக மாற்றப்படலாம் / தொழிற்படலாம். மலையகத்தின் பிள்ளை மடுவங்கள் சற்று புனரமைக்கப்பட்டு படிப்பகங்களாக பரிணமிக்கலாம்.**



என்ன செய்யப் போகின்றன என்கிறீர்களா?

தினமும், குறிப்பாக மாலை ஆறு மணி முதல், இரவு பத்து மணி வரை, அந்தக் கிராமத்தில் உள்ள படிப்பதற்குரிய சூழலைக் கொண்டிராத சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைகள் அமைதியாக இருந்து படிக்கக் கூடிய சூழலை கொடுக்கப் போகின்றன. சில மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து படிக்கும், விவாதித்துப் படிக்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்றன. வீட்டில் TV பார்த்துக் கொண்டிருக்கும் பெற்றோரிடமிருந்து விலகி படிப்பதற்கான ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கப் போகின்றன. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என முடிந்தவர்கள் தங்கள் நேரத்தை இந்தப் படிப்பகங்களில் செலவளியுங்கள். யாராவது பிள்ளைகள் படிப்பில் சந்தேகம் கேட்டால் சொல்லிக் கொடுங்கள். தனியாகவோ / சில மாணவர்களைச் சேர்த்தோ இதைச் செய்யலாம். கூட்டுக் கல்வி முறை மீண்டும் தோன்றட்டும். இப்போதெல்லாம் சேர்ந்து கற்றலுக்குப் பலருக்கு நேரம் இருப்பதில்லை. அதற்கான சூழ்நிலைகளும் அமைவதில்லை. ஒவ்வொரு ஊரிலும் பலர் கல்வித்துறை சார்ந்து இருப்பார்கள். பல ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இருப்பார்கள். அவர்களில் ஓரிருவரை இந்தப் படிப்பகங்களை நிர்வகிக்க கொடுங்கள். கிராம அமைப்புகள் சில புத்தகங்களை வாங்கிக் கொடுங்கள். இன்று ஏராளமான போதனைகள், விரிவுரைகள், பாடரீதியாகத் தயாரிக்கப்பட்டு இணையங்களில் கிடைக்கின்றது. சில மடி கணினிகளை / Tab போன்ற சில உபகரணங்களைப் படிப்பகங்களில் பேணிவந்தால், அங்கு படிக்க வரும் மாணவர்கள், அந்த வீடியோக்களைப் போட்டுக் கேட்டுத் தாங்களாகவே சில பாடங்களைப் படிக்கவும் முடியும். அவர்கள் வீடுகளில் அவ்வாறான இணைய வசதிகள் கூட இல்லாது இருக்கலாம். இந்தப் படிப்பகங்கள் நாளடைவில் மிக நேர்த்தியாகச் செயற்பட ஆரம்பித்தவுடன், கிராமியப் கல்வித்துறை சம்பந்தமான ஒரு ஆவணக்காப்பகமாகவே மாறிவிடும். அந்தக் கிராம மாணவர்களில் பிரச்சினைகள் தெரிந்திருக்கும். ஏதோ ஒரு வகையில் உதவியை ஒருங்கிணைக்க முடியும்.

நிறையப் பெரியவர்கள், ஆசிரியர்கள் பிரசன்னம் இருக்கும் போது தேவையற்ற சமூகப் பிரச்சினைகள் வராமல் பேணமுடியும். பெண் பிள்ளைகளை 9 மணியளவில் பெற்றோர் வந்து வீட்டுக்கு அழைத்துச் செல்ல ஆண்கள் சற்று அதிக நேரம் எடுத்துப் படிக்கலாம். இது ஒரு ஆரோக்கியமான படிப்பகக் கற்றல் சூழலைக் காலப்போக்கில் ஒவ்வொரு கிராமங்களிலும் உருவாக்க உதவும். இது சாத்தியமானதே! சுழிபுரம் கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இவ்வாறான படிப்பகம் ஒன்று வெற்றிகரமாக இயங்கி வருவதாக அறிகிறேன். அத்தோடு சிறகுகள் என்ற பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட ஒரு அமைப்பு 2017 முதல் சில பாடசாலைகளில் இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியும் உள்ளது.

நான் சொல்வது ஒன்றும் புதிதல்ல. வெளிநாடுகளில் பெரும்பாலான மாணவர்கள் நூலகங்களிலும், உணவு அங்காடிகளிலும், Mcdonalds , KFC, Starbucks போன்ற பெரிய உணவுக்கடை மேசைகளிலும் கூட்டமாக இருந்து இரவிரவாக படித்துக் கொண்டிருப்பர். நாங்கள் எங்கள் கலாசாரங்கள், பண்பாடுகளோடு கண்ணியமாகப் படிக்க வேண்டும் என்பதால்தான் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், ஊர் கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்களின் கண்காணிப்புடன் கூடிய கிராமிய படிப்பகங்கள் உருவாக்கப்படுவதை முன்மொழிந்தேன்.



இது இலகுவாக சாத்தியமாகக் கூடியது. ஒரு வீடும், மின்சார வசதியும், தளபாட வசதிகளில் ஊர் மனிதவளமும் போதுமானது. எந்த வெளிநாட்டு உதவியும் இல்லாமலே எல்லா ஊர்மக்களாலும் இலகுவாகத் தத்தம் ஊரின் கல்வி மேம்பாட்டைப் பேணக்கூடிய இலகுவான திட்டம்.

**அத்தியாயம் தொடரும்...**

# வளர்ந்து வரும் நாடுகளைப் பாதிக்கும் மூளைக்காய்ச்சல்



பைஷல் இஸ்மாயில்

மூளைக்காய்ச்சல் (Meningitis) பக்றீரியாவால் வரக்கூடிய ஒரு அழற்சி நோய். மூளையைச் சுற்றியுள்ள திரவம் பாதிக்கப்படும்போது மூளைக் காய்ச்சல் ஏற்படலாம். மூளை மற்றும் முதுகெலும்பைப் பாதிக்கக்கூடியது. இதனால் மரணம் அல்லது நிரந்தரப் பக்கவாதம் ஏற்படலாம்.

கைக்குழந்தைகள், இளம்பிள்ளைகள், பதின்வயதினர் மற்றும் பெரியவர்கள் அனைவரும் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்படலாம், இருப்பினும் மூளைக்காய்ச்சல் வகை வயதுக்கு ஏற்ப மாறுபடும். மூளை மற்றும் முதுகெலும்பைப் பாதுகாப்பது மூளையுறை. அதாவது அவை மூளை மற்றும் முதுகெலும்புகள், கிருமிகள் அல்லது ஏதேனும் அதிர்ச்சியால் பாதிக்கப்படுவதைத் தடுக்கின்றன. இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள திரவம் பாதிக்கப்படும்போது மூளையுறையில் வீக்கம் ஏற்படுகிறது. இது, மைய நரம்பு மண்டலத்தின் கட்டமைப்புகளைப் பாதுகாக்கும் செரிப்ரோஸ்பைனல் திரவத்துடன், மூளையுறை செயலிழப்பை ஏற்படுத்துகிறது.

மூளைக்காய்ச்சல் பற்றித் தெளிவுபடுத்த முடியுமா? உலகளவில் பேசும் பொருளாக இருப்பது கொரோனா மற்றும் ஒமிக்ரோன் பிறழ்வாகும். இலங்கையில் டெங்கு நோய் இடைக்கிடையே மக்களை அச்சுறுத்தி வருவதையும் காண்கிறோம். இவைபற்றிக் கூடியளவு கவனத்தைச் செலுத்தும் நாம், சில முக்கியமான நோய்களைப் பற்றிய விழிப்புணர்வுகளைத் தவறவிட்டு விடுகிறோம் என்பது நிதர்சனமான உண்மையாகும். அந்தவகையில், மூளைக்காய்ச்சல் நோய் பெரியோர் முதல் குழந்தைகள் வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். விசேடமாகக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் மூளைக் காய்ச்சல் பற்றி சற்றுப் பார்ப்போமானால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 24 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் விழிப்புணர்வு தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நோய் ஜப்பானில் முதன் முதலில் 1871 ஆம் ஆண்டு பாரியளவில் இருந்ததைக் கண்டுபிடித்தனர். அதனால் ஜப்பானிய மூளையழற்சி (Japanese Encephalitis) காய்ச்சல் என்று பெயர் உருவானது. இலங்கையில் ஒரு வயது நிரம்பிய குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கப்படுகிறது.

குறிப்பாக, வளர்ந்துவரும் ஏழை நாடுகளில் மூளைக் காய்ச்சலின் பாதிப்பு கொஞ்சம் அதிகமாக இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதுமட்டுமல்லாது, மூளைக் காய்ச்சல் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. இரண்டு முதல் பதினைந்து நாட்கள் வரை அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். குழந்தைகளுக்குச் சளி, இருமல் காரணமாக வருகின்ற காய்ச்சலையெல்லாம் மூளைக்காய்ச்சல் என நினைத்துப் பயந்து விடத் தேவையில்லை.

**காய்ச்சல் ஏன் ஏற்படுகிறது?**

ஏதாவது ஒரு கிருமி உடலுக்குள் செல்லும்போது, உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி அக்கிருமியை எதிர்த்துப் போராடும் போதுதான் காய்ச்சல் ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் காய்ச்சல் எமது உடலுக்கு ஒரு பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குகின்றது.

**மூளைக்காய்ச்சலை இரு பெயர்களால் அழைக்கின்றனர் இதுபற்றித் தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், முதலாவது வகை மூளை அழற்சிக் காய்ச்சலாகும் (Encephalitis) இது மூளைத்திசுக்கள் பாதிப்படைவதனால் ஏற்படுகிறது. அதாவது, மூளையைச் சுற்றிக் காணப்படுவது மூளையுறைகளாகும். இவை கிருமிகள் உட்புகாமலும் ஏதேனும் அதிர்ச்சியினால் மூளை பாதிப்படைவதையும் தடுக்கும் தொழிலைச் செய்கின்றது. இவ்வாறாக இயற்கையில் மூளையும், முதுகுத் தண்டுவடத்தையும் சுற்றியுள்ள மெல்லிய சவ்வுபோன்ற பாதுகாப்புப்படலம் நோய்க் கிருமித் தாக்கத்துக்குட்படும்போதே "மூளைக்காய்ச்சல்" ஏற்படுகிறது.

இரண்டாவது வகை, மூளை உறை அழற்சிக் காய்ச்சலாகும் (Meningitis) இது மூளை உறை பாதிக்கப்படுவதனால் ஏற்படுகிறது. மூளை அழற்சிக் காய்ச்சல் (Encephalitis), மூளை உறை அழற்சிக் காய்ச்சல் (Meningitis) இந்த இரண்டு வகைக் காய்ச்சலும் "மூளைக்காய்ச்சல்" எனக் கூறப்படுகின்றது.

**இக்காய்ச்சலினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் யார்?**

பெரும்பாலும் ஒரு வயத்திற்குட்பட்ட குழந்தைகளும், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், நாட்பட்ட நோயாளிகள், மதுப்பழக்கம் உடையவர்கள், இடநெருக்கடி அதிகமான இடங்களில் வாழ்வோர், தடுப்பூசிகளை முறையாக ஏற்றிக் கொள்ளாதவர்கள் போன்றோரைப் பெரும்பாலும் தாக்குகின்றது.

**குழந்தைகள் பெரும்பாலும் பாதிப்படையக் காரணம் என்ன?**

குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு பெரும்பாலும் நோய் எதிர்புச் சக்தி பூரணமாக விருத்தியடைந்திருக்காது. அத்துடன் மூளையும் வளரச் செய்கின்ற வயதாக இருப்பதனாலும் இத்தாக்கத்துக்குட்படுகிறார்கள்.



**மூளைக்காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

சில நோய்களின் தொடர்ச்சியான தாக்கங்கள் இருப்பின் இக்காய்ச்சல் ஏற்படலாம். அதாவது, தட்டம்மை, கக்குவான், இருமல், மலேரியா, கூகைக்கட்டு, காதுத் தொற்றுக்கள் போன்ற நோய்களைக் குறிப்பிடலாம். மேலும் காசநோய்கள், தொண்டைத்தாபிதங்கள், மண்டையோட்டில் ஏற்படும் கிருமித்தொற்றுக்கள், பூஞ்சை, இரசாயனங்களால் வரும் எரிச்சல் என்பவற்றாலும் ஏற்றபடக் கூடும். இவை தவிர பாதிப்படைந்தவருடன் தொடர்புகளைப் பேணல் (தனிநபர் சுகாதாரம் பேணாமை), வீட்டைச் சுற்றியுள்ள கழிவுநீர் தேங்குதலை முறைப்படி அகற்றாமை போன்ற காரணங்களாலும் ஏற்படுகின்றது.

**மூளைக்காய்ச்சலின் அறிகுறிகள் எவை?**

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தையெனின் எந்நேரமும் அழுகை, சிணுங்கிச் சிணுங்கி அழுதல், காய்ச்சல் மற்றும் வலிப்பு, திடீர் அசைவுகள் போன்ற அறிகுறிகள் காணப்படும். பெரும்பாலும் நினைவிழக்கும் வரை நிலமை மோசமடையலாம்.



வைத்தியர் வைகலை இராநாதன்
BSMS, மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
கோபாலபுரம், திருகோணமலை.

ஏனையோருக்கு திடீரென கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, குமட்டல், வாந்தி, மனக்குழப்பம், வலிப்பு, பசியின்மை, கழுத்துப் பிடிப்பு, தூக்கம், சோம்பல், ஒளியைப் பார்க்க முடியாமை, சுயநினைவை இழக்கச் செய்து கோமா நிலைக்கு ஆளாதல் போன்ற அறிகுறிகளைக் குறிப்பிடலாம். இருப்பினும், அறிகுறிகளை மட் டும் வைத்துக் கொண்டு முடிவு எடுப்பதைவிட உடனடியாக வைத்தியரை அணுகி முறையான பரிசோதனைகளைச் செய்து சிகிச்சை எடுப்பது நல்லது.

**மூளைக்காய்ச்சலின் காரணிகள் என்ன?**

அறிகுறிகள் பெரும்பாலும் ஒரே தன்மையானதாக இருப்பினும், ஏற்படுத்தும் காரணியைப் பொறுத்தும் அதன் தீவிரத் தன்மையைப் பொறுத்தும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றது. ஆனால் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகளே அக்காரணியை உறுதிப்படுத்துகிறது.

அதாவது, வைரஸ் மூளைக்காய்ச்சல் (Virus meningitis), பக்றீரியா மூளைக்காய்ச்சல் (Bacterial meningitis), பூஞ்சை மூளைக்காய்ச்சல்(Fingal meningitis), ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல் (Parasitic meningitis), தொற்று அல்லாத மூளைக்காய்ச்சல் (Non infectious meningitis) போன்ற மூளைக்காய்ச்சல் வகைகளைக் கொண்டும் அறியலாம்.

**நீங்கள் குறிப்பிட்ட 5 வகைக் காரணிகளைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

**வைரஸ் மூளைக்காய்ச்சல்:-** இது பொதுவாக ஏற்படும் ஒருவகை Entro Virus என அழைக்கப்படும். Herpes, mumps தன்மை கொண்டது. மூளைக்காய்ச்சலினதும், பக்றீரியா மூளைக்காய்ச்சலினதும் அறிகுறிகள் மிகவும் கடுமையானது. இது வயதைப் பொருத்தே அறிகுறிகளும் மாறுபடும்.

**பக்றீரியா மூளைக்காய்ச்சல்:-** இது Neisseriraia meningitis, streptoc occus போன்ற நுண்ணுயிர்கள் காதுவழித் தொற்று மூலமும், அறுவைச் சிகிச்சை மூலமும் உடலினுள் சென்று இரத்த சுற்றோட்டத்தில் கலந்து மூளை மென்சவ்வுக்குள் பரவி விடும். இதனால், உயிருக்குத் தீவிர ஆபத்தை விளைவித்து விடும்.

**பூஞ்சை மூளைக் காய்ச்சல்:-** இது பெரும்பாலும் ஏற்படுவது குறைவு. அரிதானது ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தோருக்கே ஏற்படுகிறது. Crypt ococcus, coccidiosis's போன்ற காரணிகளால் இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்து மூளை, முது கெலும்புக்கு பயணிக்கிறது. எனினும் ஆரம்பத்தில் இதைக் கண்டுபிடித்தால் குணப்படுத்தலாம்.

**ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல்:-** அழுக்கு, மலம், இறந்த மீன், அழுகிய கோழி போன்றவற்றில் இருக்கும் ஒட்டுண்ணி காரணமாக ஏற்படுகிறது. இதுவும் மற்றையவைகளைவிட ஒப்பீட்டளவில் ஏற்படுவது குறைவாகும்.

**தொற்றல்லாத மூளைக்காய்ச்சல்:-** தொற்று நோயில்லாத காரணத்தின் விளைவுகளால் கூட மூளைக்காய்ச்சல் ஏற்படலாம். Lupus, Sarcoidosis போன்ற நோய்களைக் குறிப்பிடலாம்.

**இந்த நோய்த்தாக்கத்தின் மூலம் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்பட வாய்ப்புள்ளதா?**

ஆம், ஆரம்பத்திலேயே விழிப்புணர்வுடன் இருந்து கொண்டு காய்ச்சல் ஏற்படும்போது அலட்சியம் செய்யாது வைத்தியரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் சில வகையான நினைவகச்சிக்கல்கள், அதிர்ச்சி, கற்றல் குறைபாடுகள், மூளைப் பாதிப்பு, மூளை நீர்க்கோவை, கீல்வாதம், காது கேளாமை, நடைப் பிரச்சினைகள் போன்றவைகள் ஏற்படலாம். இறுதியில் இறப்புக்கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

**இந்நோய் தொற்றும் அபாயம் உள்ளதா?**

சிலவகையான பக்றீரியாக்களினால் மூளைக்காய்ச்சல் நோய் தொற்றிக்கொள்ளும் தன்மையடையது. அதாவது, தொற்றுநோயுள்ள ஒருவரின் வாய் அல்லது மூக்கிலிருந்து வெளிவரும் சளி மூலமாக மற்றவருக்குப் பரவலாம். இருமுதல், முத்தமிடுதல், தொற்றுள்ளவரின் கைக்குட்டையைப் பயன்படுத்தல் போன்றவற்றாலும் ஏற்படலாம். சாதாரண தடிமன், காய்ச்சல் உள்ளவர்களின் மூலம் பரவிவிடும் என அச்சப்படத் தேவையில்லை. நெருங்கிய தொடர்பிலிருப்போர் சற்று எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

**இந்த நோய் தொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்பட்டாலோ அல்லது குழந்தைகள் திடீரென நினைவிழந்தாலோ, வலிப்பு வந்தாலோ உடனே பிள்ளைகளை வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சையளிக்க வேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை பலமாக வைத்திருந்தால் எந்த நோயும் அணுகாது. குழந்தைப் பருவத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் சேர்ந்து மூளை விருத்தியும் நடக்கிறது. அதனால் குழந்தைகளுக்குச் சரியான ஊட்டச்சத்துக்களையும், முறையான சுகாதாரப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

வீட்டுக்குள்ளும், வெளியேயும் சுகாதாரத்தைப் பின்பற்றவேண்டும். திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுதல், தண்ணீர் தேங்காமலும், கொசுக்கள் நுளம்புகள் பெருகாமலும், நுளம்புக்கடிக்கு உள்ளாகாமலும், வீட்டிலுள்ளோர் பாதுகாப்பாக இருத்தல். குறிப்பாக மழைகாலங்களில் கவனமாக இருக்க வேண்டும். சுகாதாரமாக இருப்பதை நாம் உறுதிசெய்யும் போது இந்த நோய் மட்டுமின்றி பெரும்பாலான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

விஷேடமாக, தடுப்பூசிகளை முறையாக ஏற்றிக் கொள்ளல் வேண்டும். இவற்றை முறையாக அந்தந்தக் காலத்திற்குகேற்ப ஏற்றிக்கொள்வதன் மூலம் குழந்தைகள் மட்டுமல்ல பெரியோர்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு வழிவகுக்கும். இதைத்தவிர தொற்று ஏற்பட்டபவர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தாது இருத்தல் அவசியமாகும்.

# தமிழக உள்ளாட்சித் தேர்தலில் முட்டிமோதும் கட்சிகள்

ரவி

> **விஜயகாந்த், கமல், தினகரன் ஆகியோரின் கட்சிகளில் இருந்த செல்வாக்கு மிக்கவர்களில் பலர் கட்சி மாறிவிட்டனர். தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆளைத் தேடும் நிலையில் உள்ளனர். இவர்களுடன் அண்ணாமலையும் களத்தில் குதித்துள்ளார். கட்சிகளில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காத பிரபலங்கள் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர். இவர்களுடன் ஊரின் செல்வாக்கு மிக்கவர்களும் பதவியைப் பிடிப்பதற்காக சுயேட்சையாகக் களம் காண்கின்றனர். இந்த அரசியல்வாதிகளுடன் விஜயின் மக்கள் இயக்கமும் தேர்தலில் குதித்துள்ளது.**

தமிழகம் முழுவதும் பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர் பதவிகளுக்கான போட்டியில் 57,778 பேர் போட்டியிடவுள்ளதாக மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது குறித்து மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்தம் 12,838 வார்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையினை 26.01.2022 அன்று தமிழக மாநிலத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கானதல்ல. கிராமத்தில் செல்வாக்கு மிக்கவருக்குப் பதவி கொடுக்கும் தேர்தல். கிராமத்தில் உள்ள 300, 400, 500 வாக்குகள் மூலம் ஒருவர் பதவியில் அமர்த்தப்படுவார். என்றாலும் தமது செல்வாக்கைக் காட்டுவதற்கு அரசியல் கட்சிகள் முட்டிமோதுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றுக்கிடையேதான் பலமான போட்டி இருக்கும். மூன்றாவது இடத்தைப் பிடிப்பதற்கான தேர்தலாகவும் இதனைக் கருதலாம்.



கருணாநிதிக்கும், ஜெயலலிதாவுக்கும் சவால் விட்டு மூன்றாவது இடத்தைப் பிடித்த வியஜகாந்த் காணாமல் போய் விட்டார். கருணாநிதியும், ஜெயலலிதாவும் மறைந்த பின்னர் புதிய சக்தியாக உருவெடுத்த தினகரனின் விலாசத்தைக் காணவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூடாரம் காலியாக உள்ளது. திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.



ஆளும் கட்சியான தி.மு.க. அனைத்து உள்ளாட்சி பணியிடங்களையும் கைப்பற்றியே தீரவேண்டும் என்ற ஒரு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் , விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, மனித நேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் அதே பலத்துடன் உள்ளன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டனியில் இருந்த பாட்டாளி மக்கள் கட்சி வெளியேறி விட்டது. ஒட்டிக்கொண்டிருந்த பாரதீய ஜனதாக் கட்சியும் தனி ஆவர்த்தனம் செய்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் வெளியேற்றத்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி பாதிக்கப்படும். வனியர் வாக்குகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இழக்கும் நிலை தோன்றியுள்ளது. வாசன் மட்டும்தான் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்துடன் இருக்கிறார். அவரால் கழகத்துக்கு எந்த லாபமும் இல்லை.








அண்ணாமலையின் அட்டகாசப் பேச்சால் பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணியை விட்டு வெளியேறியது. இதனால் பாரதீய ஜனதாவின் வெற்றி பாதிக்கப்படுவது உறுதி. பாரதீய ஜனதா இல்லாததால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிம்மதியடைந்துள்ளது. கடந்த காலத் தேர்தல்களின் தோல்விகளுக்குப் பாரதீய ஜனதாதான் காரணம் எனக் கழகத்தின் தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்தனர். தேர்தல் வெற்றிக்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாகப் போராட வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, விஜயகாந்த, சீமான், கமல், தினகரன், பாரதீய ஜனதாக் கட்சி இவற்றுடன் விஜயின் மக்கள் இயக்கமும் தேர்தலில் போட்டியிடுகிறது. கட்சிகள் ஒதுக்கியதால் சில பிரமுகர்கள் சுயேட்டையாகப் போட்டியிடுகின்றனர். இவர்களுடன் கிராமத்தில் செல்வாக்கு மிக்கவர்களும் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர்.

வாக்குகள் சிதறும் வாய்ப்பு இருப்பதால் வெற்றியடையும் வேட்பாளர் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் பதவியைப் பிடிப்பார். பாரதீய ஜனதா கட்சி சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளிலும் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளது. இந்தக் கட்சி கணிசமான வாக்குகளைப் பெறுவதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு நேரடிப் போட்டியாகவும், மாநிலத்தில் 3 ஆவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தைப் பெறவும் திட்டமிட்டுள்ளது. சென்னையில் பலமுனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் கடந்த 2011 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் 200 வார்டுகளில் 169 இடங்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

கடந்த சட்டசபை தேர்தலில் வட மாவட்டங்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியைத் தழுவியது. எனவே நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற அந்தக் கட்சி சபதம் எடுத்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவு இல்லாதது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு பாதிப்பாக இருக்கும். ஏற்கெனவே சட்டசபை தேர்தலில் வட மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றிய திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான கூட்டணி உள்ளாட்சித் தேர்தலிலும் தொடர்வதால் நம்பிக்கையுடன் இருக்கிறது.

விஜயகாந்த்,கமல், தினகரன் ஆகியோரின் கட்சிகளில் இருந்த செல்வாக்கு மிக்கவர்களில் பலர் கட்சி மாறிவிட்டனர்.தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆளைத் தேடும் நிலையில் உள்ளனர். இவர்களுடன் அண்ணாமலையும் களத்தில் குதித்துள்ளார். கட்சிகளில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காத பிரபலங்கள் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர். இவர்களுடன் ஊரின் செல்வாக்கு மிக்கவர்களும் பதவியைப் பிடிப்பதற்காக சுயேட்சையாகக் களம் காண்கின்றனர். இந்த அரசியல்வாதிகளுடன் விஜயின் மக்கள் இயக்கமும் தேர்தலில் குதித்துள்ளது.

தமிழகத்தில் என்றைக்கும் இல்லாதவகையில் பலமுனைப் போட்டி இருப்பதால் வாக்குகள் சிதறடிக்கப்படும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இருந்த ராமதாஸ், அண்ணாமலை ஆகியோர் வெளியேறியது அக் கட்சிக்குப் பாதகமானது. திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி தொடர்வதால் அதன் வாக்கு வங்கி அப்படியே உள்ளது. ஆகையால் அதன் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ■

# நா.முத்துக்குமாரின் தத்துவ வரிகள்

த.அபிநாத்

தமிழ்த்திரையிசை உலகிலே கண்ணதாசனின் பாட்டுப்புகையிரதம் இலக்கிய மீட்டெடுப்பு, தத்துவவார்ப்பு எனும் இரு தண்டவாளங்களில் பயணித்தது. வைரமுத்து இலக்கிய மீட்டெடுப்பைத் தன் வசமாக்கினும் தத்துவத்தில் பெருமளவில் ஆர்வம் காட்டவில்லை. கண்ணதாசனின் அஸ்தமனத்திற்குப் பின்னர் வாலியும் வேறொரு பாதையில் பயணிக்க தத்துவப்பாடல்கள் அருகிப்போன பாலையாக திரையிசை உலகம் தவித்த வேளையில் பெருமழை பொழியும் கார்மேகமென தத்துவப்பாமாரி பொழிய வந்தடைந்தவர் நா.முத்துக்குமார். மிகக்குறுகிய காலத்தில் தத்துவமுத்துக்களை எங்கணும் வாரியிறைத்தார். இவரது தத்துவங்கள் யமனுக்கும் பிரியமானவையாகியதால் வெகுவிரைவில் தன்னிடம் அழைத்துக் கொண்டான். நா.முத்துக்குமார் இன்று நம்மிடையே இல்லையெனினும் அவர் தம் பாடல்கள் உயிர்ப்போடு காதுகளில் உரசுகின்றன.

உனக்கென இருப்பேன் எனும் பாடலில் சோகம் நனி சொட்ட தத்துவங்களைப் பொழிகிறார் நா.முத்துக்குமார்.

“கல்லறை மீதுதான் பூத்த பூக்கள் என்று
வண்ணத்துப்பூச்சிகள் பார்த்திடுமா”
“மின்சாரக் கம்பிகள் மீது மைனாக்கள்
கூடுகட்டும்”
“வளையாமல் நதிகள் இல்லை வலிக்காமல்
வாழ்க்கை இல்லை”
“நிலவொளியை மட்டும் நம்பி
இலையெல்லாம் வாழ்வதில்லை
மின்மினியும் ஒளி கொடுக்கும்”
“கண்களின் வார்த்தைகள் புரியாதே” என்ற

கண்ணதாசனின் பாடலைக்காட்டி இயக்குநர் தத்துவப்பாடல் ஒன்றை எழுதுமாறு கூறியபோது “கண் பேசும் வார்த்தைகள் புரிவதில்லை” என்ற பல்லவியுடன் ஆரம்பிக்கும் நல்லதோர் பாடலை எழுதியுள்ளார். அப்பாடலில் இடம்பெறும் பின்வரும் வரிகள் தத்துவக்கூர்மையோடமைகின்றன.

“தூரத்தில் தெரியும் வெளிச்சம்
பாதைக்குச் சொந்தமில்லை
மின்னலின் ஒளியைப் பிடிக்க
மின்மினிப் பூச்சிக்கு தெரியவில்லை”

தந்தைக்கும் மகளுக்குமான உறவை வெளிப்படுத்த தமிழ்த் திரையுலகில் எத்தனை பாடல்கள் இருப்பினும் அவை அனைத்தும் சூடும் மணிமகுடமாக “ஆனந்த யாழை மீட்டுகிறாய்” பாடல் அமைகிறது. அப்பாடலில் பின்வரும் வரிகள் மிகச்சிறப்பாய் அமைந்துள்ளன.

“இரு நெஞ்சம் இணைந்து பேசிட உலகில்
பாசைகள் எதுவும் தேவையில்லை
சிறு புல்லில் உறங்கும் பனியில் தெரியும்
மலையின் அழகோ தாங்கவில்லை”

அகத்திணையினை மேம்படுத்தும் பாடலான “ஆகாயம் இத்தனை நாள் மண் மீது விழாமல்” என்ற பாடலிலும் மிகச் சிறப்பான தத்துவத்தின் சாரலை இனங்கணமுடிகிறது.

“கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்
வழியில் மரங்கள் கிடையாது
ஆனாலும் கண்டம் தாண்டும்
சிறகுகள் வலிக்காது
மலையேறும் எறும்பின் கால்கள்
வெயிலை மிதித்து உடையாது”

சோகப்பாடலென்றால் நா.முத்துக்குமாரிடம் இயல்பாகவே தத்துவமுத்துக்கள் உற்பத்தியாகின்றன. “நினைத்து நினைத்துப் பார்த்தேன்” என்ற பாடலில்

“அமர்ந்து பேசும் மரங்களின் நிழலும்
உன்னைக் கேட்கும் எப்படிச் சொல்வேன்
உதிர்ந்து போன மலரின் மௌனமா...” என

கண்ணீர் வரவழைக்கும் வண்ணம் எழுதிச் செல்கிறார். அதேபோல ஒரு தடவை சொல்வாயா எனும் பாடலிலும் அகத்திணைக்கு நம்பிக்கையூட்டும் விதமான தத்துவவார்ப்பை இனங்கணலாம்.



“நதியில் தெரியும் நிலவினுருவம்
நதிக்குச் சொந்தமில்லை
நினைப்பதெல்லாம் நடக்கும் வாழ்க்கை
யார்க்கும் அமைதில்லை”

இவ்விதம் திரையிசையில் தத்துவவார்ப்பு மிகு பாடல்களை படைத்த பிரமனான முத்துக்குமாரின் பிரிவு திரையிசைக்கு ஈடுகட்ட முடியாக பேரிழப்பாகும். முத்துக்குமாரின் மறைவின் பின்னர் தத்துவம் மிகு திரையிசைப் பாடல்களில் பாரிய இடைவெளியை காணமுடிகின்றது. திரையுலகில் நல்ல கருத்தாழமான பாடல்கள் வராமைக்கு முத்துக்குமாரின் மறைவும் முக்கியமான காரணமென துணிந்து கூறலாம். ■

# பயங்கரவாதத் தடைச் சட்டமும்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

புவிசார் நலன் அடிப்படையில் அனைத்தையும் பெற்றுக் கொண்ட பின்னர் அமெரிக்க- இந்திய அரசுகள் ஈழத்தமிழர் விவகாரம் குறித்து எந்தவொரு அழுத்தங்களையும் முன்வைக்கப் போவதில்லை என்பது இலங்கைக்கும் நன்கு பரீட்சையம்.

இந்தப் பின் புலங்களை அறிந்து தமிழ்த்தேசியக் கட்சிகள் தங்கள் நகர்வுகளை முன்வைக்க வேண்டுமே தவிர அமெரிக்க- இந்திய அரசுகளின் தேவைகளுக்கு மாத்திரம் இயங்கும் கருவிகளாக மாறிவிடக் கூடாதென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி இலங்கை ஒற்றையாட்சி அரசுக்கு தொள்ளாயிரம் (900) மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படுமென கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பல்கே சென்ற ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை அறிவித்திருந்த நிலையில், மேலும் ஒரு பில்லியன் டொலர் வழங்கப்படுமென ஜனவரி 15 ஆம் திகதி இந்தியா உறுதியளித்திருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் ஜனவரி 15 ஆம் திகதி இணையவழி ஊடாக நடத்திய உரையாடலில் இந்த நிதியுதவித் திட்டங்கள் குறித்துப் பேசப்பட்டிருக்கின்றன.

ஜனவரி மாதம் 06 ஆம் திகதி அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஆகியோர் தொலைபேசி மூலம் உரையாடிய பின்னரே தமிழ் பேசும் மக்களின் தாயகமான கிழக்கு மாகாணம் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் மீண்டும் இந்தியாவுக்குக் கையளிக்கும் ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அன்றைய நாளே தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 13 ஐ நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தும் கடிதத்தில் கைச்சாத்திட்டிருந்தது.

ஜனவரி 13 ஆம் திகதி தொள்ளாயிரம் (900) மில்லியன் டொலர் வழங்கப்படுமென கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நேரில் சந்தித்து உறுதிப்படுத்தியுமிருந்தார்.

இதன் பின்னணியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடில்லிக்குச் சென்றிருந்த அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக இந்தியா எந்தவொரு அழுத்தங்களையும் வழங்கவில்லையென இலங்கைச் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்று அமைச்சர் ஜெய்சங்கர் பேராசிரியர் பீரிஸிடம் வலியுறுத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அந்தச் செய்திக் குறிப்பிலும் 13 பற்றிப் பேசியதாக எதுவுமே கூறப்படவில்லை.




தமிழ்த்தேசியக் கட்சிகள் அனுப்பிய 13 தொடர்பான கடிதம் குறித்துப் பேசப்படவில்லை என்றும் கொழும்புத் துறை முகத்தின் மேற்கு முனையத்தை அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் ஆரம்பிப்பது குறித்தே இரு அமைச்சர்களும் பேசியதாகக் கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூர்மைச் செய்தித் தளத்திற்குத் தெரிவித்தன.

அத்துடன் இந்தியாவிடம் இருந்து இலங்கை மின்சாரத்தைப் பெறுவது குறித்தும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் புதுடில்லியில் பேசியதாகவும் கூறப்படுகின்றது.

ஆகவே ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில், இலங்கையில் பிம்ஸ்டெக் மாநாடு நடைபெறவுள்ளது. இந்தியா முக்கிய பங்கு வகிக்கவுள்ள நிலையில், இலங்கை ஒற்றையாட்சி அரசின் செல்வாக்கு சர்வதேச மட்டத்தில் மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டெனலாம்.

ஆகவே போரை நடத்திய ராஜபக்ஷக் குடும்பம் தற்போது ஆட்சியில் இருக்கும் நிலையில், இலங்கை ஒற்றையாட்சியைப் பலப்படுத்தும் செயற்திட்டங்கள் அரங்கேறுவதையே தொடர்ச்சியாக அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகள் இலங்கை ஒற்றையாட்சி அரசை மேலும் பாதுகாக்கும் உத்திகளை வகுத்துச் செயற்பட்டு வரும் ஒரு பின்னணியில், வெளிச் சக்திகளோடு சில உள்ளூர் தேசிய சக்திகள் இணைந்து தனது ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்வதாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

சென்ற புதன்கிழமை அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் முதலாவது மாநாட்டில் உரையாற்றியபோது இவ்வாறு கருத்து வெளியிட்ட கோட்டபாய ராஜபக்ஷ, 2015 இல் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தது போன்ற சதிப் புரட்சி ஒன்று இடம்பெறுவதாகவும் அடித்துக் கூறினார்.

சர்வதேச சக்திகளென கோட்டபாய ராஜபக்ஷ யாரைக் குறிப்பிடுகின்றார் என்று பலருக்கும் புரிந்திருக்கும். ஆனால் அதே வெளியகச் சக்திகள், ஆட்சி மாற்றம் என்ற பெயரில், தமது புவிசார் நலன்களில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றன.

ஈழத்தமிழர்களின் பக்கம் இருக்கும் அரசியல் நியாயங்களை அந்த வெளிச் சக்திகள் ஒற்றையாட்சிக்குள் முடக்கவே முற்படுகின்றனர்.

தமது மக்கள் செல்வாக்கை மீண்டுமொரு முறை உலகத்துக்கு வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மாநாடு, மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் இலங்கை ஒற்றையாட்சி அரசின் புதிய அரசியல் யாப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுவதாகவும் அமைந்திருக்கின்றது. ■

# மனங்கள் தொடர்பான சிக்மன் பிராயிட்டை முன்வைத்த சிறு விளக்கவுரை:

சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE,
DIP.in.Cinema

மனிதமனக் கட்டமைப்பினை மூன்றாகப் பகுத்து விளக்குகிறார், சிக்மன்ட பிராயிட் எனும் அறிஞர். Id, Ego, Super Ego என்பவையே அவை யாகும். ஒருவரின் செயல், மனப்பிறழ்வு ஆகியவற்றை அளவெடுத்துக் காட்டுவது இவற்றின் செயற்பாடு களாகும்.

இவை நனவிலிநிலை அல்லது நனவுநிலை மனங் களுடன் தொடர்புடையனவாகும். அதாவது, அறி யாநிலை அல்லது அறிவுநிலை மனங்களுடன் தொடர்புபட்டவையாகும்.

**Id (பண்படாத மனம்):**

இச்சை உணர்ச்சி, இயல்பூக்க மனம், நனவடி அகம், பண்படாத மனம் என்றெல்லாம் 'Id' நோக்கப்படுகி றது. மனச்சமநிலையில்லாத ஒருவரின் மனப்பிறழ்வின் அசைவுப்போக்கினை இது குறிக்கிறது. பண்படாத மனம் (Id) என்பது பிறப்பிலிருந்து அமையக்கூடிய ஒன்றாகும்.

குழந்தை வளர்ந்து வரும்போது Ego, Super Ego என்பன குழந்தைக்குள்ளே உருவாகி வருகின்றன. வளர்ந்து வரும் பிள்ளைக்குள்ளே வளரக்கூடிய இவற் றினளவு மூத்தவர்களின் பழக்கவழக்கங்களிலேதான் தங்கியிருக்கிறது.

இயல்பாக வரக்கூடிய, ஆசை, பாசம், பசி, தாகம், காமம், கோபம், மகிழ்ச்சி, பகுத்தறிவற்ற பழக்க வழக் கம் மற்றும் கழிவகற்றும் பழக்கம் எனப் பலவற்றைக் கூறலாம்.

இவற்றுள்ளே இன்பமான நிகழ்வுகளை ஏற்பதாக வும், துன்பமான நிகழ்வுகளை விளக்குவதாகவும் இது காணப்படும். ஒவ்வொரு குழந்தையிடமும் இதனளவு கூடக்குறைய இருக்கலாம்.

கனவு தோன்றுவதற்கு பண்படாதமனமே காரணம் என, சிக்மன்ட் பிராயிட் குறிப்பிடுகிறார்.

மனிதர் உறங்குநிலையில் உள்ளபோது பண்படாத மனம் விழிப்புநிலையில் இருக்குமென அவர் கூறுகி றார். அதாவது, மனிதனின் நிறைவேறாத ஆசைகள் கனவின் மூலம் நிறைவு செய்யப்படுகின்றன என்ற கருத்தை அவர் முன்வைக்கிறார்.

கனவு போலவே நகைச்சுவைப் பேச்சு, மற்றவர் மீதான பகிடிகள், நக்கல் நளினங்கள் யாவும் மனித னிடம் உருவாகி வருகின்றன. இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாக அமைவது Id என சிக்மன்ட் பிரா யிட் கூறுகிறார். அதாவது, தான் செய்வது சரியா? தவறா? அல்லது தான் சொல்வது சரியா? தவறா? என்பது மனிதர்கள் பலருக்குத் தெரிவதில்லை. தான் எதைச் செய்ய நினைக்கிறாரோ? அல்லது எதைச் சொல்ல நினைக்கிறாரோ? அதை உடனடியாக நிறை வேற்றி விடுவார்.

உதாரணம்(1): சுந்தரன் அந்த வீதி வழியாக வந்து கொண்டிருந்தான். கணபதியின் வீட்டுத்தெருப்பட லையில் புத்தம்புதிய சைக்கிளொன்றைக் காண்கிறான். அது பூட்டப்படாமல் நிற்கிறது. சுந்தரன், அந்த சைக் கிளை அபகரிக்க நினைக்கிறான். உடனடியாகச் செய லில் இறங்கினான். அதை அபகரித்து ஓடித் தப்புகி றான்.

உதாரணம்(2): சுந்தரனிற்கும் குணசிங்கத்துக்கும் நடந்த வாய்த்தர்க்கத்தில், சுந்தரன் எழுந்தமான போக் கில் குணசிங்கத்தைத் தாக்கினான். குணசிங்கம் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

உதாரணம்(3): குணசிங்கம் தனது நண்பனென்றும் பாராமல் அந்த இடத்தில் கடுமையான வார்த்தைக ளால் குணசிங்கத்தைப் பேசினான். குணசிங்கத்தின் முறையற்ற பிறப்பு பற்றியும், குணசிங்கத்தின் மனைவி நடத்தை கெட்டவளென்றும், குணசிங்கத்தின் பிள்ளை கள் ஒழுக்கமாக வளர்க்கப்படவில்லை என்ற விடயங் களையும் சுந்தரனின் பேசுமொழி தெரியப்படுத்தியது. ஆனால், குணசிங்கம் பற்றி சுந்தரன் சொன்னவற்றில் எதுவுமே உண்மையில்லை. தன் மனதைத் திருப்திப் படுத்தவும், குணசிங்கத்தை அவமானப்படுத்தவுமே அப்படி சுந்தரன் சொல்லியிருந்தான்.

உதாரணம்(4): சுந்தரன் தன் பேத்தி வயதுள்ள சிறுமியிடம் தகாத முறையில் நடக்க முனைந்தான். அச்சிறுமி சுந்தரனால் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டு மயங்கிக் கிடந்தாள். உறவுக்காரர்களினால் அவள் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரி வில் சேர்க்கப்பட்டாள்.

முடிவு: (1) களவெடுப்பது சரியா? தவறா? என்பதும், (2) ஒருவரை அடித்து, உதைத்து இரத்தம் வருமளவுக் குக் காயப்ப டுத்துவதும், (3) பண்பற்ற வார்த்தை களால் பேசு வதும், (4) சிறுமியை வல்லுறவுக்கு உட்படுத்துவ தென்பதும் பகுத்தறிவற்ற செயல்களாகும்.







அதாவது சுந்த ரனின் மனம் ஒரு சீரத் திடமாக இல்லை என்பதாகும்.

இவற்றினால், பின் விளைவுகள் எப்படி இருக்குமென்பது சுந்தரனிற்கு முக்கியம் கிடையாது. ஒவ்வொரு சந் தர்ப்பத்திலும், தான் என்ன செய்ய வேணும் அல்லது என்ன சொல்ல வேணுமென்று நினைத்தனோ அதை உடனே செய்து முடித்தான்.



இங்கே, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுந்தரன் பண்படாதமனத்தின் (Id) வழி செயற்பட்டிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**Ego (ஈகோ):**

அகம், யதார்த்தமனம், பண்பட்ட மனம், தன்முனைப்பு என்றவாறு Ego நோக்கப்படுகிறது.

இதுவொரு பக்குவநிலை ஆகும். அறிவுநிலை யென்றும் சொல்லலாம். ஒருவனுடைய தேவைகள் யாவும் அறிவு, சிந்தனை என்பவற்றின் அடிப்படையி லேயே ஆரம்பிக்கின்றன என்பதைக் கூறுகிறது.

ஒருவன் தனது செயலில் எது சரி? எது பிழை என்பதை முன்கூட்டியே உணர்ந்து தன் தேவை நிறைவுறும் காலம் வரைக்கும் பொறுமையாகக் காத்திருத்தலாகும்.

பதற்றம், பிழை, தவறு ஏற்படாதவாறு யதார்த்த மான ஒரு நிலைக்கு பண்பட்டமனம் (Ego) ஒருவனை வழிநடத்திச் செல்லும். இப்படிப் பக்குவமான நடத்தை பாங்கான ஒருவரைப் பார்க்கும் ஒருசிலர் 'உவராள் ஒரு ஈகோ புடிச்சவர்' என்று சொல்லுவதை அவதா னித்திருக்கலாம்.

'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்பார்கள். இதற்கு அமைவாக யதார்த்தமனம் உள்ளவர்களுக்கு விரோதிகள் பலர் தோன்றுவார்கள். இப்படியானவர் களுக்கான விமர்சனமும் பலவிருக்கும். ஆனாலும், எதற்கும் அஞ்சமாட்டார்கள்.

உதாரணம்(5): மகிழ்நன் என்பவன் வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, சைவசமய விசேட தினங்கள் மற் றும் தனது ஊர்த்திருவிழாக் காலங்களில் இறைச்சி, மச்சம் சாப்பிடுவதில்லை. இப்படி பரம்பரையான மனக்கட்டுப்பாடுடையவன்.

ஒருமுறை வெள்ளிக்கிழமை நாளன்று தனது நண்ப னுடைய மகனின் பிறந்தநாள் விழாவிற்குச் சென்றி ருந்தான். அங்கே சைவ உணவுகளும், அசைவ உணவு களும் பரிமாறப்பட்டன. சாப்பிடுவதற்காக மகிழ் நன் அழைத்துச் செல்லப்பட்டான்.

ஆனாலும், அவனுக்குப் பசிக்கவில்லை. உணவு இருக்குமிடம் சென்றதும், ஆட்டிறைச்சி, கோழியி றைச்சி, கணவாய்க்கறி, நண்டுவறுவல், இறால்பொரி யல், அவித்தமுட்டை என்பவற்றைக் கண்டான். அவற் றின் சுவையான வாசத்தினை மகிழ்நனும் நுகர்கிறான். அந்த உணவுகள் மீது ஆசை கொள்கிறான்.

அங்கு வந்தவர்களில் அனேகமானோர், அசைவ உணவுகளையே சுவைக்கின்றனர். இவனுக்கு பசி யில்லை. என்றாலும், மச்ச உணவுகளைச் சாப்பிட வேண் டும்போல் வாயூறினான். இருந்தாலும் இன்று வெள் ளிக்கிழமை என்பதால், தான் சைவ உணவுகளை மாத் திரமே உண்பேன் என மன உறுதியாக நின்றான். மேலும், இப்ப தனக்குப் பசியில்லை என்பதால், சில நிமிடங்கள் கழித்து சாப்பிடுவோம் என நினைத்து விட்டு தான் இருந்தவிடத்திற்குச் சென்று அமர்ந்தான், மகிழ்நன்.

பசி என்பதை உணரும்போதுதான் உண்ண வேண்டும், வெள்ளிக்கிழமை நாளில் அசைவ உணவுகளை உண்ணக் கூடாது என அக்கணத் தில் மகிழ்நன் முடி வெடுக்கக் காரணம் அவனிடம் காணப் பட்ட பண்பட்ட மனமே (Ego) ஆகும்.

இப்படியானவர் களை மற்றவர்கள் வேடிக்கையாகப் பார்ப் பதும், வேடிக்கையா கப் பேசுவதும் நடை முறை விடயமாகும்.

**Super Ego (சுப்பர் ஈகோ) :**

அதியகம், உயர் நிலை மனம், மேம்பாட்டுமனம் என்றவாறு இது நோக்கப் படுகிறது.

நல்ல பழக்கவழக்கம் என்பது குழந்தை வயதி லேயே ஏற்பட்டு விடுகிற ஒன்றாகும். பொய் பேசுவதையோ, வஞ்சகமாக நடந்து கொள்வ தையோ குழந்தைகள் தெரிந்திருப்பதில்லை.

எந்தவொரு குழந்தையும் நல்ல குழந்தை யாகத்தான் பிறக்கிறது. அது நல்ல பிள்ளை யாவதும், தீய பிள்ளையாவதும் பெற்றோர் மற்றும் உற்றவரின் பழக்கவழக்க முறைக ளிலேயே தங்கியிருக்கின்றது.

குழந்தை, தான் வாழ்கின்ற சூழலிலே தான் நல்லவற்றையும் தீயவற்றையும் கற்கி றது. அதன்படியேதான் நடக்க முயல்கிறது. குழந்தையின் நடத்தைக் கோலங்களுக்கு அப்பா, அம்மா, மூத்த உறவுகள், ஆசிரியர், வாழும் பெரியோர், வாழ்ந்து மறைந்த சமூக சம யப்பெரியார் ஆகியோர் காரணமாகின்றனர்.

ஒருவனிடம் உயர்ந்த விழுமியங்கள், இலட்சி யங்கள், நற்பண்புள்ள நடத்தைகள் யாவற்றிற்கும் அவனிடத்தில் இருக்கின்ற மேம்பாட்டு மனமே (Super Ego) காரணமாகும். மனச் சாட்சிப்படி நடப் பது மட்டுமல்லாமல், தனது கௌரவம், தனது அந் தஸ்துநிலை ஆகியவற்றினைத் தக்க வைத்து கொள் வதற்காக மேம்பாட்டுமனம் (Super Ego) எனும் இயல்பு செயற்படுகிறது.

உதாரணம் (6): மலர்ச்செல்வன் கோயில் தலைவ னாக இருக்கிறான். அக்கோயில் திருவிழாவின்போது பணம், பொருள் போன்றவை மக்களால் கோயிலுக்கு வந்து சேர்கின்றன. பணத்தின்மீது ஆசைவர, பொருளா ளரை ஏமாற்றி பணத்தின் பெரும் பகுதியைத் தன தாக்கிக் கொள்ளலாம் என அவனின் பண்படாத மனம் (Id) அவனைத் தூண்டுகிறது. ஆனால், மலர்ச் செல்வன் அப்படி எதுவும் செய்யவில்லை. ஏனென் றால், ஏமாற்றுவதும், களவெடுப்பதும் தவறாகும் என மலர்ச்செல்வனைச் சிந்திக்கத் தூண்டியது அவனி டம் இருந்த மேம்பாட்டுமனமே (Super Ego) ஆகும்.

**முடிவாக:**

பொருள்மீது ஆசைப்பட்டு அதனை களவெடுக்க வேணும், ஒருவருக்கு அடிக்கவேணும் அல்லது உதைக்க வேணும், ஒருவரை வசைகட்டி பேசவேணும் என பண் படாதமனம்(Id) ஒருவனைத் தூண்டுகிறது. களவெடுப் பது தவறு, ஒருவனை துன்புறுத்துவது பாவம், ஒருவரின் மனம் நோகக் கதைப்பது, ஒருவரைப்பற்றி புறம் பேசு வது ஆகிய யாவும் தீங்கான செயல்களாகும் என மேம்பாட்டுமனம் (Super Ego) அவனைத் தடுக்கிறது.

ஆசைப்பட்ட பொருள் விலைக்குக் கிடைக்குமா? அல்லது அப்படியான ஒரு பொருளை வேறெங்காவது பெற்றுக்கொள்ளலாமா? நான் ஆசைப்பட்ட பொருள் எனக்குக் கிடைக்கவேண்டிய நேரத்தில் கிடைக்கும். ஆகவே, அதுவரை பொறுமையாக இருப்போம் என பண்பட்டமனம் (Ego) ஒருவனின் மனதை சமநிலை செய்கிறது.

இங்கே பண்படாதமனமும் (Id), மேம்பாட்டுமன மும் (Super Ego) சமூகம் அடையமுடியாத இலக்குகளை அடைய முயற்சிக்கிறது. இவை யதார்த்தவழி நின்று சிந்திப்பது கிடையாது. ஆனால், பண்பட்டமனம் (Ego) என்பது, யதார்த்தவழி நின்று சிந்திக்க வைக்கிறது.

ஆகவேதான் பண்படாதமனமும் (Id), மேம்பாட்டு மனமும் (Super Ego) நனவிலி மனத்தில் (அறியாநிலை மனத்தில்) உள்ளடங்கி இருக்க, பண்பட்டமனமானது (Ego) நனவுநிலை மனத்தின் பகுதியாக இயங்குகிறது எனலாம்.

# பிரிட்டனின் ராணியாகிறார் கமீலா

ஊர்மிளா

ஐரோப்பிய நாடான பிரிட்டனின் அடுத்த அரசராக சாள்ஸ் பதவியேற்கும்போது, அவரது மனைவி கமீலா, ராணியாக இருக்க வேண்டும் என, ராணி இரண்டாம் எலிசபெத் விருப்பம் தெரிவித்துள்ளார்.

குயின் கன்சார்ட் பிரிட்டன் ராணியாகப் பொறுப்பேற்று 70 ஆண்டுகளை எதிர் வரும் ஜூன் மாதம் நிறைவு செய்கிறார், 95 வயதாகும் ராணி எலிசபெத். இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ராணி எலிசபெத் கூறியுள்ளதாவது:

“இத்தனை ஆண்டுகளாக மக்கள் எனக்கு அளித்த ஆதரவுக்கு, ஒத்துழைப்புக்கு நன்றி இதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். எனக்குப் பின், என் மகன் சாள்ஸ்,



அரசராகப் பொறுப்பேற்கும்போதும், இந்த ஆதரவைத் தொடர வேண்டும்.

சாள்ஸ் அரசராகப் பொறுப்பேற்கும்போது, அவரது மனைவி கமீலாவை ராணியாக ஏற்க வேண்டும். அந்தக் கடமையை நிறைவேற்ற முழு தகுதி உடையவர் அவர். இவ்வாறு அவர் கூறினார். பிரிட்டன் அரச குடும்ப வழக்கத்தின்படி ராணி ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது, அவரது கணவர்கள், “பிரின்ஸ் கன்சார்ட்” எனப்படும் இளவரசராகவே கருதப்படுவர். ராஜாவாக கருதப்படமாட்டார்கள். அதே நேரத்தில் அரசர் பொறுப்பை ஏற்கும்போது, அவரது மனைவி “குயின் கன்சார்ட்” எனப்படும் ராணியாகவே கருதப்படுவார்.

வேல்ஸ் இளவரசி டயானா (Diana, Princess of Wales) இயற்பெயர்: பிரான்செஸ் ஸ்பென்சர், ஜூலை 1, 1961 - ஆகஸ்ட் 31, 1997) வேல்ஸ் இளவரசர் சாள்ஸின் முதலாவது மனைவி. 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. இவர்களது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம், ஹாரி ஆகியோர் பிரித்தானியாவுக்கு முறையே இரண்டாவது, மூன்றாவது



முடிக்குரியவர்கள் ஆவர்.

1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று விவாகரத்துறுதி செய்யப்பட்டது. டயானாவிற்கு $ 23 மில்லியனுக்கும், ஆண்டிற்கு 600,000 டொலருக்கும் இடையில் குடியேற்ற விதிமுறைகளும் பதிவாகியுள்ளன. அவர் மற்றும் சாள்ஸ் இருவரும் தங்கள் மகன்களின் வாழ்க்கையில் செயலில் இருக்க வேண்டும். கென்சிங்டன் அரண்மனையில் அவர் தொடர்ந்து வாழ்ந்தார், “இளவரசர் வேல்ஸின்” பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார், ஆனால் “ஹெர் ராயல் ஹைனெஸ்” இன் ஸ்டைலிங் அல்ல. விவாகரத்திலேயே, அவருடன் பணிபுரிந்த பெரும்பாலான தொண்டு நிறுவனங்களும் தங்களை ஒரு சிலருக்கு மட்டுமே கட்டுப்படுத்துகின்றன: வீடற்றவர்கள், எயிட்ஸ், தொழுநோய், பாலே, குழந்தைகளுக்கான மருத்துவமனை, மற்றும் ஒரு புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றில் டயானா தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

1996 ஆம் ஆண்டில், டயானா நிலக்கண்ணிகளைத் தடை செய்வதற்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பிரிட்டிஷ் ராயல் குடும்பத்திற்கான விதிமுறைகளை விட நிலப்பிரதேச எதிர்ப்பு பிரச்சாரத்துடனான தனது ஈடுபாட்டிலும் அவர் பல நாடுகளுக்கு விஜயம் செய்தார்.

1997 ஆம் ஆண்டின் முற்பகுதியில், டயானா 42 வயதான “டாட்” ஃபாய்டு (ஈமட் முகமது அல்-ஃபெயட்) உடன் காதலுடன் இணைந்தார். அவரது தந்தை, முகமது அல்-ஃபெயட், ஹரோட் துறையின் பல்பொருள் அங்காடி மற்றும் பாரிசில் உள்ள ரிட்ஸ் ஹோட்டல் ஆகியவற்றின் சொந்தக்காரர். தந்தை மற்றும் மகன் ஆகியோரும் ஓரளவு கவனத்தை ஈர்த்துள்ளனர்.

ஆகஸ்ட் 30, 1997 அன்று, டயானா மற்றும் ஃபாய்டு பாரிஸ் நகரில் ரிட்ஸ் ஹோட்டலை விட்டு வெளியேறினர், அல்-ஃபெயேடு குடும்பத்தினர் மற்றும் டோட்டின் மெய்க்காப்பாளர் ஆகியோருடன் காரில் இருந்தார். பப்பராசிகள் பின் தொடர்ந்ததால், பாரிஸில் ஒரு சுரங்கத்தில் கார் மோதி விபத்துக்குள்



ளானது. 1997 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31 அன்று டயானா மரணமானார். உலகமே துயரத்தில் ஆழ்ந்தது.

2005 இல், சாள்ஸ், கமீலாவை திருமணம் செய்தார். கமீலாவுக்கும் இது இரண்டாவது திருமணம். தற்போது குயின் கன்சார்ட்டாக கமீலா இருக்க வேண்டும் என, ராணி எலிசபெத் தெரிவித்துள்ளதால், இது தொடர்பாக இருந்த குழப்பங்களுக்குத் தெளிவான பதில் கிடைத்துள்ளது.

பிரிட்டன் மக்களிடையே நீண்ட நாட்களாகவே ஒரு குழப்பம் நிலவியது. கமீலா, சாள்ஸின் முதல் மனைவி இல்லை. இருவருமே முதல் திருமணத்தை விவாகரத்து செய்து, மறுமணம் செய்தவர்கள். இதனால் சாள்ஸ் அரசராகப் பொறுப்பேற்கும்போது, கமீலாவை, இளவரசி என அழைக்க வேண்டுமா அல்லது ராணி என அழைக்க வேண்டுமா என்ற சந்தேகம் இருந்தது. கமீலாவை ராணியாக பிரிட்டன் மக்கள் அங்கீகரிப்பார்களா? என்ற குழப்பமும் இருந்தது.

பிரின்சஸ் கன்சார்ட் என, அதாவது இளவரசி என அழைக்கப்பட்டால், அவருக்கு அரச குடும்பத்துக்கான மரியாதை கிடைக்கும் ஆனால் ராணி அந்தஸ்து கிடைக்காது. இந்தக் குழப்பத்துக்குத் தீர்வு காணும் வகையில், தற்போது ராணி எலிசபெத்தே, கமீலாவுக்குக் குயின் கன்சார்ட் எனப்படும் ராணிக்கான அந்தஸ்தை வழங்கி விட்டதால், இனி இதற்கு மறு பேச்சு இல்லை. சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. பிரிட்டன் மக்களால் கமீலா, “ராணி கமீலா” என, இனி அழைக்கப்படுவார். குயின் கன்சார்ட் என்றால், அரசரின் ஜோடி என, அர்த்தம். சாள்ஸ் அரசனாக்கப்படும் போது கமீலாவின் தலையில் ராணி அன்னையின் விலைமதிப்பற்ற பிளாட்டினம், வைரம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட கிரீடம் வைக்கப்படும். இது 1937 ஆம் ஆண்டு ஆறாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்காக உருவாக்கப்பட்டது. கிரிமியன் போரின் போது பிரிட்டிஷ் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 1856 ஆம் ஆண்டு துருக்கி சுல்தானால் விக்டோரியா மகாராணிக்கு வழங்கப்பட்ட பெரிய கல்லுடன் கூடிய 2,800 வைரங்கள் ராணி தாயின் கிரீடத்தில் இடம் பெற்றுள்ளன. முன் சிலுவையில் இந்தியாவில் தோன்றிய புகழ்பெற்ற 105 காரட் கோஹ்-இ-நூர் வைரம், பிரிக்கக் கூடிய பிளாட்டினம் மவுண்டில் உள்ளது.

இளவரசி டயானாவுடனான விவாகரத்துக்குப்



பிறகு, கமீலாவை ஏற்றுக்கொள்வது பொது மக்களுக்குக் கடினமாக இருந்தது. 2005 இல் இளவரசர் சாள்ஸ் கமீலாவை மணந்தபோது, அரச உதவியாளர்கள் கமீலா ராணியாவதை விரும்பவில்லை என்று வலியுறுத்தினர், மேலும் முதலில் முன்னாள் திருமதி பார்க்கர் பவுல்ஸ், பிரிட்டிஷ் வரலாற்றில் முதன்முறையாக இளவரசி மனைவியாக அறியப்படுவதை “உத்தேசம்” என்று கூறினார்கள்.

**குயின்ஸ் பிளாட்டினம் ஜூபிலி**

ராணி அரியணையில் 70 ஆண்டுகளைக் கொண்டாடுகிறார் - பிரிட்டிஷ் முடியாட்சியின் வரலாற்றில் மிக நீண்ட ஆட்சி.

ஜூன் மாதத்தில் ஜூபிலி வார இறுதியில் எல்லாம் திட்டமிடப்பட்டது.

ராணியின் 70 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் நான்கு நாட்கள் சிறப்பு வங்கி விடுமுறை அளிக்கப்படும். ராணி எலிசபெத்தின் பிளாட்டினம் ஜூபிலியில் உலகின் மிகப் பெரிய பெயர்கள் சிலவற்றின் நிகழ்ச்சிகள் மற்றும் அவரது சில தனியார் எஸ்டேட்கள் பொதுமக்களுக்குத் திறக்கப்படும்.

மே 12 மற்றும் 15 க்கு இடையில், வின்ட்சர் கோட்டையில் 1,000 க்கும் மேற்பட்ட கலைஞர்களும், 500 குதிரைகளும் பங்குபற்றும் நிகழ்ச்சி நடைபெறும்.

அதே நாளில், இங்கிலாந்து, ஐல் ஆஃப் மேன், சேனல் தீவுகள் மற்றும் அதன் வெளிநாட்டுப் பகுதிகளுடன் சேர்ந்து, பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒரே நேரத்தில் ஒரு கலங்கரை விளக்கத்தை ஒளிரச் செய்யும்.

அடுத்த நாள், ஜூன் 4 ஆம் திகதி அரண்மனையில் ஒரு பார்ட்டிக்கு முன்னதாக செயின்ட் பால்ஸ் கதீட்ரலில் நன்றி தெரிவிக்கும் சேவை நடைபெறும், இது உலகின் மிகப்பெரிய நட்சத்திரங்கள் சிலவற்றை ஒன்றிணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூன் 5, ஞாயிற்றுக்கிழமை, வங்கி விடுமுறைக் காலத்தின் இறுதி நாளைக் குறிக்கும் பிக் ஜூபிலி மதிய உணவிற்கு பிரிட்டன்கள் ஒன்று சேர முடியும்.

பொதுவாக பொதுமக்களுக்கு மூடப்படும் பால்மோரல் மற்றும் சாண்ட்ரிங்ஹாம், நீண்ட வார இறுதியில் உள்ளூர்வாசிகளுக்குத் திறக்கப்படும்.

தன்னார்வலர்கள், நடனக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், இராணுவப் பணியாளர்கள் மற்றும் முக்கிய பணியாளர்கள் பிளாட்டினம் ஜூபிலி போட்டியில் ராணியின் 70 ஆண்டுகால சிம்மாசனத்தின் கதையைச் சொல்வார்கள்.

■

தீம்புனல் THEEMPUNAL



ச.சஜீபன்
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# தொழில்சார் மன அழுத்தம்

இயந்திரமான இன்றைய வாழ்க்கையில் தமது தேவைகளை நிறைவேற்றிட நிற்காமல் பயணித்துக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் மன அழுத்தம் என்பது தவிர்க்க முடியாத தீய சக்தியாக உருவெடுத்துள்ளது. மன அழுத்தமானது வயது, பால் வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரையும் ஆட்டிப்படைக்கிறது . மனஅழுத்தம் எனும் போது நம்மை வெளிப்புறத்திலிருந்து தாக்கும் புதிய பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் நமது உடலின் எதிர்த் தாக்குதலே மன அழுத்தமாகிறது. மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்களில் பெரும்பாலானவை அவனது அழுத்தமான சூழலின் காரணமாகவே ஏற்படுகின்றன என ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மன அழுத்தமானது ஒருவரில் இரு விதத்தில் ஏற்படுகிறது. அவை நேர்மயமான மன அழுத்தம், எதிர்மயமான மன அழுத்தம் என்பனவாகும். நேர்மயமாகத் தொழிற்படும் மன அழுத்தமானது ஒருவரது கட்டுப்பாட்டுக்குள் இருந்து குறுகிய காலத்துக்கு மட்டும் தொழிற்படும் தன்மையுடையது. இது ஒருவரது உள்ளார்ந்த சக்தியை ஊக்கு வித்து அவரது செயலாற்றும் தன்மையை மேம்படுத்துகின்றது. மாறாக எதிர்மயமாகத் தொழிற்படும் மன அழுத்தமானது ஒருவரிடத்தே பதகளிப்பு, மகிழ்ச்சியற்ற நிலை, ஊக்கமின்மை போன்ற எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம் குறித்த நபரின் செயலாற்றும் தன்மையினைக் குறைத்துவிடுகின்றது .

தொழில்நுட்ப பிரயோகத்தின் வளர்ச்சியினால் இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரினதும் தேவைகள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இத்தேவைகளுக்கு ஏற்றால்போல் சவால்களும் அச்சுறுத்தல்களும் விரிவடைந்தே செல்கின்றன. இச்சவால்கள் அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்காகவும் வெற்றி கொள்வதற்கும் ஆற்றல்கள் தன்னிடம் இல்லை என ஒருவர் உணரும் பட்சத்தில் அவர் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றார்.

இம் மன அழுத்தமானது பணியிடத்தில் ஒருவர் முகங்கொடுக்கும் தொழில், கல்வி, குடும்ப உறவு, ஆளிடைத்தொடர்பு போன்றவற்றில் ஏற்படுகின்ற இடர்பாடுகளால் உருவாகின்றது. இவற்றில் இன்று தொழில்சார் மன அழுத்தமானது அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் தொழில்சார் மன அழுத்தமானது நிறுவன ஊழியர்களிடையே மிகவும் பாரதூரமாக உளவியல் மற்றும் உடற் தொழிற்பாட்டில் பாதிப்பினை ஏற்படுத்துவதனாலாகும்.

தொழில் உலகைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களிடையே அவர்கள் செய்கின்ற பணியின் நிமித்தம் மன அழுத்தம் ஏற்படுகின்றது. “பணி எனும் போது ஒரு குறிப்பிட்ட வரம்புக்குட்பட்டு கட்டாயத்தின் பேரில் நடந்து கொள்கின்ற உளச்செயல்” என்றாகிறது. உழைப்பாளர் இன்றி சமூகம் இல்லை என்றார் கால்மார்க்ஸ். அந்தளவிற்கு பணி என்பது சமூகத்திலே மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. இத்தகைய பணியில் குழப்பங்கள், சிக்கல்கள், தடைகள் மற்றும் சூழ்நிலைக்கு முகம் கொடுக்க முடியாத்தன்மை ஏற்படுவதனால் அழுத்தத்திற்கு உள்ளாகின்றார். பணியிடத்தில் அடிக்கடி எதிர்பாராத பொறுப்புக்கள் வழங்கப்படும் போது ஒருவரால் தனது அறிவு மற்றும் திறமையைப் பயன்படுத்தி குறித்த நேரத்தில் அவற்றைச் செய்ய முடியாத போது பணிசார் மன அழுத்தமானது ஏற்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) “ வேலை செய்யும் இடத்தில் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் மற்றும் அழுத்தங்கள் தனிநபரது அறிவு மற்றும் திறன்களுடன் பொருந்தாமலும், அவர்களது சமாளிக்கும் திறனுக்கு சவாலாகவும் அமையும் போது தொழிலாளர்களால் வெளிப்படுத்தப்படுகின்ற துலங்கல் தொழில்சார் மன அழுத்தமாகும்” என்கிறது.

திருப்தி நிலை என்பது ஒருவரின் பணி தொடர்பான ஆர்வம், விருப்பம், எதிர்பார்ப்பு என்பவற்றைக் குறித்து நிற்கிறது. திருப்தியற்ற வேலை கிடைப்பது, மனதிற்கு விருப்பமில்லாத வேலை, எதிர்பார்ப்பிற்கு அப்பாற்பட்ட வேலை என்பன ஒரு நபரைக் குறித்த வேலையில் முழு ஈடுபாட்டுடன் செயற்படுவதைத் தடுக்கும் தடைக்கற்களாக விளங்குகின்றன.

> **“பொருத்தமற்ற வேலை அமையும் போதும் வேலை செய்கின்ற சூழல் ஊழியருக்கு பொருத்தப்பாடற்ற முறையில் அமையும் போதும் குறிப்பாக அடிப்படை வசதிகளற்றதாகப் பணிச்சூழலானது அமைகின்ற போது அந்த நபர் மன அழுத்தத்திற்கு உள்ளாகலாம். மேலும் நிறுவனத்தில் ஏற்படும் பொருத்தமற்ற வேலை மற்றும் பொருத்தமற்ற பணிச்சூழல் என்பன ஒருவரை மன அழுத்த நிலைக்கு இட்டுச் செல்கின்றன.”**

பணிசார் மன அழுத்தமானது ஏற்படுவதற்கான காரணங்களாக தனிநபர் காரணிகளும், நிறுவன சூழ்நிலைக் காரணிகளும் அமைகின்றன.

தனிநபர் காரணிகள் எனும் போது நிறுவனத்தில் பணிபுரிகின்ற தனிநபரினுடைய திருப்தி நிலை, உடல் ஆரோக்கியம், குடும்பச்சிக்கல்கள், நெருங்கிய உறவுகளின் மரணம்,போக்குவரத்து, எதிர்பாராத விபத்துக்கள், உடலாரோக்கிய குறைபாடுகள், நீண்டகால நோய் நிலைமைகள் என்பவற்றால் ஏற்படும் சிக்கல், பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்ப உறவுகளுக்கிடையேயான விரிசல்கள், குடும்ப உறவுகளின் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள், குடும்ப உறுப்பினர்களின் இழப்புக்கள் என்பன ஒருவரை அழுத்தமான நிலைக்கு இட்டுச்செல்கின்றன.

பணியிடத்தில் ஒருவர் தனது குடும்ப சூழ்நிலைகளை, பிரச்சினைகளை நினைத்துக் கொண்டிருப்பதால் குறித்த வேலையில் முழுக்கவனத்துடன் ஈடுபட முடியாமல் மன அழுத்தத்தை இலகுவாக எதிர்கொள்கிறார்கள். போக்குவரத்தும் பணிசார் மனஅழுத்தத்தைத் தூண்டும் காரணியாக அமைகிறது. அதிகப்படியான சன நெருக்கடி, நீண்ட தூரம் நின்று வருதல், பாலியல் ரீதியான சேட்டைகள் என்பன பணியிடத்தில் மகிழ்ச்சியான முறையில் வேலையை செய்வதற்கு தடையாக இருக்கின்றன.

ஒருவர் பணிபுரிகின்ற நிறுவன சூழலானது அதிகளவில் மன அழுத்தத்தினைத் தூண்டுவதாக உள்ளது. நிறுவன சூழல் எனும் போது அகச்சூழல், புறச்சூழல் என்பனவாகும். அகச்சூழல் என்பது நிறுவனத்திற்கு உள்ளே ஏற்படும் இடர்பாடுகள் மற்றும் முரண்பாடுகள் என்பவற்றினால் குறித்த நபரால் வேலையை சரியான முறையில் செய்யமுடியாமற் போகின்றது. சக ஊழியர்களுக்கிடையேயான முரண்பாடு, பொருத்தமற்ற தொழில், குறைவான ஓய்வு, பொருத்தமற்ற வேலைச்சூழல், பக்கச்சார்பு, குறைவான சுதந்திரத்தன்மை, பாதுகாப்பற்ற தொழில், அதிகளவிலான வேலை, கெடுபடியான மேற்பார்வை, நிறுவனத்தின் பொருளாதார வீழ்ச்சி, பக்கச்சார்புடன் நடந்து கொள்ளல், ஊழியர்களுக்கு குறைந்தளவிலான சுதந்திரத்தை வழங்குதல் எனலாம்.

புறச்சூழல் காரணிகள் எனும் போது அரசியல் கட்சிகளின் செல்வாக்கு. அதாவது உறுதியான அரசியலமைப்பு காணப்படாத போது அங்கு அரசியல் மாற்றங்கள் ஒழுங்கு முறையாக அமுல்படுத்தப்படாதிருக்கும் அவ்வாறான நிலைமையில் தாம் வேலையை இழந்து விடுவோமோ என்ற பயம் மனஅழுத்தத்திற்கு இட்டுச் செல்கிறது. ஏனைய நிறுவனங்களின் போட்டி அடிப்படையிலான செல்வாக்கு, நிறுவன சட்டங்கள், இயற்கை அனர்த்தங்கள் என்பன பணிசார் மன அழுத்தத்தை தூண்டுபவையாகக் காணப்படுகின்றன.

பணியிடத்திலே ஊழியர்களுக்கிடையிலான ஒற்றுமையானது வலுவாக உள்ள போது தான் மகிழ்ச்சியும், வேலை செய்தற்கான ஆற்றலும், ஆர்வமும் ஊழியரிடையே ஏற்படும். மாறாக முரண்பாடுகள் விரிசல்கள் ஏற்படுகின்ற போது அவர்களது மனநிலையில் குழப்பம் ஏற்படுகின்றது. அதாவது தமது கருத்துக்களை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லையே, பணிதொடர்பான சரியான தீர்மானத்தை யாருடன் கலந்தாலோசிப்பது என்ற நிலைக்குத் தள்ளப்படும் போது மன நிலையில் குழப்பம் ஏற்பட்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

கொரோனா காலத்தில் வைத்தியர், தாதிமார், இராணுவம், பொலிஸ், சுகாதார அதிகாரிகள் போன்றோர்கள் அதிகளவான வேலை, குறைந்தளவிலான ஓய்வு என்பவற்றாலும் இத்தகைய ஊழியரிடையே அழுத்த நிலையானது காணப்பட்டதை நாம் அறிந்த விடயமாகும். இவர்களிடையே அலுவலக நேரத்திற்குள் தமக்கு தரப்பட்ட அதிகளவான பணிகளை செய்ய முற்படுகின்றனர். அவ்வாறு செய்து முடிக்காத வேலையை தமக்கு வழங்கப்பட்ட ஓய்வு நேரத்தில் செய்கின்றனர். இந்நிலைமையில் அவர்களின் ஓய்வு நேரமும் பணிக்காக செலவிடப்படுகின்றது. இதனால் போதியளவு ஓய்வு இன்மையால் மனஅழுத்தத்திற்கு உள்ளாகக் கூடும்.

பொருத்தமற்ற வேலை அமையும் போதும் வேலை செய்கின்ற சூழல் ஊழியருக்கு பொருத்தப்பாடற்ற முறையில் அமையும் போதும் குறிப்பாக அடிப்படை வசதிகளற்றதாக பணிச்சூழலானது அமைகின்ற போது அந்த நபர் மன அழுத்தத்திற்கு உள்ளாகலாம். மேலும் நிறுவனத்தில் ஏற்படும் பொருத்தமற்ற வேலை மற்றும் பொருத்தமற்ற பணிச்சூழல் என்பன ஒருவரை மன அழுத்த நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

ஒருவரால் தனது ஆற்றல் மற்றும் திறமைக்கு ஏற்ற வகையிலேதான் வேலையை செய்ய முடியும். மாறாக பணியிடத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தம் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. பொதுவாக மன அழுத்தமானது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என்ற கருத்து பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

அந்த வகையில் மனவழுத்தத்தை தனிப்பட்ட மற்றும் நிறுவனரீதியில் வெவ்வேறாகத் தனியாள் அணுகுமுறையில் ஒவ்வொரு உத்தியோகத்தரும் மனவழுத்த மட்டங்களைக் குறைப்பதற்கு தானே பொறுப்பேற்க வேண்டும்.

நேர முகாமைத்துவம் மிக முக்கியமானது. அதாவது செய்யவேண்டிய செயற்பாடுகளுக்கான நாளாந்த பட்டியல் தயாரித்தல், முக்கியத்துவம், அவசரம் என்றவாறாக செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கபடுதல், முன்னுரிமை வழங்கப்பட்டதற்கிணங்க செயற்பாடுகளை பட்டியற்படுத்துதல், நாளாந்த செயற்பாடுகளைத் தெரிந்து கொண்டு உயர் கேள்வியுடைய செயற்பாட்டினை உற்பத்தித்திறனும் கவனமும் அதிகரித்திருக்கும் தருணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தளர்வுப் பயிற்சிகள், உடற் பயிற்சிகளை அதிகரித்தல், தியானம் செய்தல், சகபாடிகள் குடும்பம் மற்றும் சக ஊழியர்களிடமிருந்து கிடைக்கும் சமூக ஒத்துழைப்பு வலைப்பின்னல் பாதிப்பினைக் குறைக்கலாம். உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அமர்த்தலின் போது அவர்களின் தொழில் அனுபவம் மற்றும் ஆளுமைப் பண்புகள் தொடர்பில் கவனம் எடுத்தல் வேண்டும். ஏனெனில் இப் பண்புகள் மனவழுத்தத்தை மிக விரைவாக ஏற்படுத்தும்.

பயிற்சியளித்தலின் மூலமும் உத்தியோகத்தரின் சுய - பலம் பற்றிய நம்பிக்கையை அதிகரித்து தொழில் பதட்டத்தினை குறைக்கலாம் . தொழிலின் இலக்குகளை வகுத்தல், வேலையை மீள்வடிவமைப்பதன் மூலமாக பொறுப்பு, வேலை பற்றிய விளக்கம், சுயாதீனம் மற்றும் பின்னூட்டல் அதிகரிக்கின்றது. இதன் மூலம் செயற்பாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன் மற்றவர்கள் மீது தங்கியிருக்கும் தன்மையையும் இது குறைக்கின்றது. வெளிநாட்டு பயணம், தனிப்பட்ட செயற்றிட்டங்களை நிறைவேற்றுதல் போன்றவற்றுக்கு ஒரு சில வாரங்களிலிருந்து பல மாதங்கள் வரையில் நீடிக்கும் விருப்பின்பேரில் விடுப்பு (sabbaticals) எடுப்பதற்கான அனுமதி கொடுத்தல்.



உடல், உள ஆரோக்கியத்துக்கான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்கச் செய்தல். உளவளத்துணையாளரை நிர்வகித்தல் என்பதும் இன்றியமையாதது ஆகும். ஊழியரின் உளவளங்களில் ஏற்படும் தடைகளை தானாக அறிந்து முன்னோக்கிச் செல்லவும் ஊக்குவிப்பதற்காகக் காணப்படுவதால் இன்று பல நிறுவனங்களில் உளவளத்துணையாளரின் வகிபாகமும் இன்றியமையாதது ஆகும்.

நிறுவனத்தில் ஊழியர்கள் சரியான முறையில் மனஅழுத்தத்தினை கையாளும் போது வேலையில் வெற்றியையும் தொழிலில் திருப்தியையும் அடைய முடிவதோடு ஒவ்வொரு நிறுவனமும் தமது இலக்கை நோக்கி நகர இலகுவாக அமையும் என்பதிலும் ஐயம் இல்லை எனலாம். ■



கனவு 10

# கல்யாணக்கனவு

◒ யாழ் சத்யா

> “மூன்றாம் தரம் படிக்கும் போது முரளிதரனும் அவளும் ஜோடியாக நடித்திருந்த பாடலின் ஒரு காட்சியின் புகைப்படம் அது. அந்தப் பாடலில் சஞ்சயனும் நடித்திருந்த படியால் அவனிடம் இந்தப் புகைப்படம் இருந்திருக்கிறது. சஞ்சயன், வைஷாலியையும் முரளியையும் மட்டும் பெரிதாக்கி அந்த போட்டோ பிரேமில் போட்டுக் கொண்டு வந்திருந்தான். சந்தோசத்தில் துள்ளிக் குதிப்பாள் என்று நினைத்திருக்க, முகம் கறுத்தவளைப் பார்த்ததும் என்னவோ சரியில்லை என்று மட்டும் சஞ்சயனுக்குப் புரிந்தது. வைஷாலி உடனேயே தனது முகபாவத்தை மாற்றிக் கொண்டு புறூட் சலாட் எடுப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றாள்.”

“ரொம்ப தாங்ஸ் வைஷூ... ஒரு கல்யாணச் சாப்பாடே சாப்பிட்டது போல இருக்கு... மூக்கு முட்டச் சாப்பிடுறது என்ன என்று எனக்கு இப்பத்தான் புரியுது...” என்றவாறு வயிற்றைத் தடவினான்.

“ரொம்ப அவசரப்பட்டு நன்றி சொல்லாதீங்க சஞ்சயன். புறூட் சலாட் இன்னும் பிரிட்ஜில் இருக்கு. உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமாமே... வைஷூ சொன்னா...”

அதுல்யா குறுக்கிடவும், சஞ்சயன் வியப்பும் மகிழ்ச்சியுமாக வைஷாலியை ஏறிட்டான்.

“உனக்கு இன்னும் ஞாபகம் இருக்கா வைஷூ?”

“எனக்கு கொஞ்சம் கூடத் தராமல் போட்டுக் கட்டுவியே... எப்பிடி மறக்கும்?”

“ஓகே... ஓகே... அதுல்யாவுக்கு முன்னால மானத்தை வாங்காமல் ஒரு பத்து நிமிசம் கழிச்சுக் கொண்டு வா...” என்று சிரித்தவன், வைஷாலியிடம் வண்ணக் காகிதம் சுற்றப்பட்ட ஒரு பொதியைக் கொடுத்தான். நன்றி சொல்லி வாங்கியவள் சிறு பிள்ளையின் ஆர்வத்தோடு வாங்கிப் பார்த்தாள். உள்ளே ஒரு போட்டோ பிரேம் இருந்தது. என்ன போட்டோ என்று ஆவலோடு எடுத்துப் பார்த்தவளின் முகம் அடுத்த நொடியே அவ்வளவு நேரமாக இருந்த மகிழ்ச்சிக்கு எதிர்மாறாய்க் கறுத்துச் சுருங்கியது.

மூன்றாம் தரம் படிக்கும் போது முரளிதரனும் அவளும் ஜோடியாக நடித்திருந்த பாடலின் ஒரு காட்சியின் புகைப்படம் அது. அந்தப் பாடலில் சஞ்சயனும் நடித்திருந்த படியால் அவனிடம் இந்தப் புகைப்படம் இருந்திருக்கிறது. சஞ்சயன், வைஷாலியையும் முரளியையும் மட்டும் பெரிதாக்கி அந்த போட்டோ பிரேமில் போட்டுக் கொண்டு வந்திருந்தான்.

சந்தோசத்தில் துள்ளிக் குதிப்பாள் என்று நினைத்திருக்க, முகம் கறுத்தவளைப் பார்த்ததும் என்னவோ சரியில்லை என்று மட்டும் சஞ்சயனுக்குப் புரிந்தது. வைஷாலி உடனேயே தனது முகபாவத்தை மாற்றிக் கொண்டு புறூட் சலாட் எடுப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றாள்.

சஞ்சயனைச் சந்தித்து இந்த இரண்டு மணி நேரங்களில் அதுல்யாவுக்கு அவனில் நல்லதொரு அபிப்பிராயம் வந்திருந்தது. இவன் மூலமாவது தோழியின் வாழ்வில் ஒரு விடியல் வரட்டும் என்று எண்ணினாலும் வைஷாலியின் அனுமதியின்றி அவளைப் பற்றிச் சொல்லத் தயங்கினாள்.

புறூட் சலாட்டுடன் வந்தவளைக் கேள்வியாய் நோக்கினான் சஞ்சயன். வைஷாலி அப்போதும் அமைதியாக இருக்கவும்,

“வைஷூ... முரளிக்கும் உனக்கும் என்னாச்சு? உன்ர விசயத்தை நான் வேற யாரையும் விசாரிச்சு அறிய விரும்பேல்ல. நீ விரும்பினால் சொல்லு...”

ஒரு பெருமூச்சோடு புறூட் சலாட் கிண்ணத்தை அளைந்தவள்,

“நாங்க பிரிஞ்சு அஞ்சு வருசமாகுது. முரளி இப்ப வேற யாரையோ கல்யாணம் பண்ணிட்டதாக அறிஞ்சன்.” கேட்டவன் அதிர்ந்தே போனான். எப்படி இது சாத்தியம்? வைஷாலி முரளியை எவ்வளவு காதலித்தாள் என்று அவனை விட வேறு யாருக்குத் தெரிந்து விடும்? ஒன்றா... இரண்டா... எத்தனை வருடக் காதல் இது... மூன்றாம் வகுப்பில் முரளியைத் திருமணம் செய்ய ஆசைப்பட்டவள், அந்த ஆசையில் இருந்து கொஞ்சம் கூடப் பின்வாங்காது நின்று சாதித்தாளே...
அப்படியிருக்க இந்தப் பிரிவு எப்படி நடந்தது?

அதிர்ச்சியில் கையிலிருந்த கரண்டியைத் தவற விட்டான். அவனின் அதிர்ச்சியைப் புரிந்து கொண்ட அதுல்யா இருவருக்கும் தனிமை கொடுக்க எண்ணி கீழே விழுந்த கரண்டியைக் கழுவும் பாவனையில் அதை எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள்.

“என்னாச்சு வைஷூ...?”

சஞ்சயனின் கம்மிய குரலில் இவள் உடைந்தே போனாள். எவ்வளவு தடுக்க முனைந்தும் இத்தனை நாட்களாக அடக்கி வைத்திருந்த கண்ணீர் அருவியாய் ஊற்றெடுத்தது.

அவளை எப்படி ஆறுதல் படுத்துவது, என்ன சொல்லித் தேற்றுவதென்று தெரியாமல் அப்படியே சிலையாக அமர்ந்திருந்தான் சஞ்சயன். சத்தமின்றி விசித்தவள்,

“ப்ளீஸ் எதுவும் கேட்காதை சஞ்சு...”

சொன்னவள் அடக்க மாட்டாது வந்த விம்மலை அடக்க முனைந்த படி குளியலறைக்கு விரைந்தாள்.

வைஷாலி எழுந்து செல்வதைப் பார்த்தபடியே அதுல்யா வந்து அமர்ந்தாள். சஞ்சயன் விறைத்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்து அவள் மனமும் அந்த இரு உள்ளங்களுக்காகவும் வருந்தியது.

“கவலைப் படாதீங்கோ சஞ்சயன். வைஷூ இப்ப நல்லாத்தான் இருக்கிறா. அவ அழுது நான் பார்த்ததே இல்லை. அழுது ஆகப் போகிறது என்ன என்றுதான் சொல்லுவா. இன்றைக்கு உங்களைப் பார்த்ததும் அவளுக்கு பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்து கொன்றோல் பண்ண முடியாமப் போச்சுப் போல... அவளே பிறகு சந்தர்ப்பம் அமையும் போது உங்களுக்கு எல்லாம் சொல்லுவா என்று நினைக்கிறேன். நீங்க அது வரை முரளி பற்றிக் கதைக்காமல் இருக்கிறது நல்லம்...”

வாய் பேசக் கூட வார்த்தை வராமல் சரியெனத் தலையசைத்தான் அந்த ஆருயிர் நண்பன்.

எவ்வளவு நேரம்தான் குளியலறையில் தஞ்சம் அடைவது என்று எண்ணியவளாய் குளிந்த நீரால் முகத்தை அடித்துக் கழுவித் துடைத்து விட்டு வரவேற்பறைக்குச் சென்றாள்.

அதற்குள் அங்கே தொலைக்காட்சியைப் போட்டு விட்டு இன்றைய திரைப்படங்கள் பற்றி அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர் அதுல்யாவும் சஞ்சயனும். இவளும் எதுவுமே நடக்காதது போல அவர்களோடு அமைதியாக இணைந்து கொண்டாள். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு சஞ்சயன் இருவரிடமும் நன்றி கூறி விடைபெற்றுச் சென்றான். செல்லும் போது மறக்காமல் வைஷாலி மேசையில் வைத்திருந்த அந்த சிறு வயது போட்டோ பிரேமையும் தன்னோடு எடுத்துச் சென்று விட்டான்.

வேறு எங்கும் வெளியே சுற்றத் தோன்றாமல் நேராக வீட்டுக்குச் சென்றவன் எண்ணம் முழுவதும் வைஷாலியையும் முரளிதரனையும் சுற்றித் தான் வந்தது. வைஷாலியும் சஞ்சயன் கிளறி விட்ட பழைய ஞாபகங்களைத்தான் மீட்டுப் பார்த்து இன்னும் மனதை ரணப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் காயங்கள் ஆறுமா?

**அவள் கனவு நனவாகுமா?**

# தூங்காத தேகம்

ஆதவன்

“நான் உங்களுடன் இணைந்து கொள்ளலாமா” என்று ஆங்கிலத்தில் குழைவாக ஒருகுரல். அந்த இரைச்சலுக்கிடையில் என் காதுக்கு மிக அருகில் அழைத்தது.

புதிதாக வந்த மல்லிகைப்பூ வாசனைத்திரவியத்தின் வாசம் நாசியை நனைக்கத் திரும்பினேன். ஆக இளமையோ முதுமையோ இல்லாத இடை வயசு. கிட்டத்தட்ட முப்பதுக்கு மேல் இருக்கும் நவநாகரிக உடையோடு என்னை உரசும் தூரத்தில் நின்றாள்.

மலங்கிய கண்களுடன் நாங்கள் இருவரும் திரும்பினோம்.

இடைக்கிடை பளிச்சிட்ட ஒளியில் அவளின் முகத்தைச் சில நொடிகளில் எடை போட்டு விட்டதால்,

“நிச்சயமாக” என்று ஒரே நேரத்தில் இருவரும் அந்த வேண்டுகோளை ஏற்று நமட்டு சிரிப்புடன் நாங்கள் ஆளை ஆள் பார்க்கிறோம். எனக்கு இடதுபுறம் இருந்த இருக்கையில் அமர்ந்தவளை கண்கள் அளவெடுக்கத் தொடங்கின.

அதுவரை எங்களை உபசரித்த கிளப் வெய்ட்டர்ஸ் சுற்றும் முற்றும் திரும்பி எங்காவது தெரிகிறாளா என்று தேடினேன். நான்கு மேசைகள் தாண்டி இன்னொரு மேசையில் ஓடர் எடுத்துக்கொண்டு இருந்தவள் எதேச்சையாகத் திரும்பினாள். கைகாட்டி அழைக்கவும் பொறுக்கும்படி சைகையாலே பதில் சொல்லிச் சிரித்து விட்டு தொடர்ந்து அங்கே ஓடர் எடுப்பதில்கவனம் செலுத்தினாள்.

மேசையில் அரைவாசிக்கு இருந்த ஜாக் டானியல் போத்தல், எங்களின் இரண்டு கிளாஸ்கள் ஒரு சின்ன கிண்ணத்தில் ஐஸ் கியுப்ஸ்சும் அதை எடுத்து போட சாவணமும் இருந்தது. ஒரு கிண்ணத்தில் பிரன்ஸ் பிரொய்ஸ் டொமட்டோ சோஸுடன் ஓரமாகப் பைட்ஸ்க்கு இருந்தது.

“ஜக் டானியல் பிடிக்குமா?” என்றேன் அவள் கண்களை பார்த்து. ஏனெனில் அவள் என்னையே கண் வெட்டாமல் பார்த்தாள்.

“இது எனக்கும் பிடித்தவொன்றுதான்”

“தனியாக வந்திருக்கிறீர்கள் நண்பர்கள் ஆரும் கூட வரவில்லையா?”

நான் தொடர்ந்தேன். நண்பன் நடுக்கூட்டத்தில் ஆடும் சில இளவயசு பெண்களையும் அவர்கள் அசைவுகளையும் ரசித்தான் பிரன்ஸ் பிரொய்ஸ் கடித்தபடியே.

பளிச்சென்று விட்டு விட்டு ஒளிரும் பல நிற மின்குமிழ்கள். காதை சல்லடையாகத் துளைக்கும் DJ ஒலி. நடுவில் இளந்தாரிப் பெண்களும் ஆண்களும் பால் வேறு பாடும் இல்லாத உருக்கொண்ட ஆட்டம். இவை எனக்கு எந்த சலனத்தையும் உண்டாக்கவில்லை. நண்பனின் வேண்டுதலைத் தட்டிக்கழிக்க முடியாமல் சிலவேளைகளில் இந்த இரவு வாழ்க்கையைப் பழக்கப்படுத்திக் கொண்டேன்.

“எனக்கு நண்பர்களுடன் வரும் பழக்கம் இல்லை. பெரும்பாலும் தனியாக வருவேன். சில வேளை உங்களைப்போல் யாரோடாவது கூட்டுக் கிடைக்கும்” என்றாள் இயல்பாகவே.

> **மெதுவாக திரும்பி புன்முறுவல் செய்தேன். கிளப்பில் இப்படியாக சில பெண்கள் கேட்பது வழமைதான். ஆனால், இவள் அந்த ரகம் இல்லை என்றே முதலில் கணித்தேன். உடையில் கவர்ச்சி அதிகம் காட்டாமல், முகப்பூச்சுகள் அளவாகவும் உதட்டுச்சாயம் மெல்லியதாகவும் இருந்தது. ஆகவே இதை எதிர்பார்க்கவில்லை. அதோடு அந்த ரக பெண்கள் கிளப்பிற்கு வெளியில்தான் அதிகம் நிற்பார்கள். உள்ளே வருவதாய் இருந்தால் ஆண்கள் யாராவது விரும்பினால் சேர்ந்து வந்து இருப்பார்கள். தனியாக வருவது குறைவு.**

“நீங்கள் சிங்கப்பூரா?”

“இல்லை, நான் தாய்லாந்து. நீங்கள் இந்தியாதானே?” பதில் கேள்வி எழுப்பினாள். எங்கள் இருவரின் கலரும் தோற்றமும் அவளை அப்படி நினைக்க வைத்திருந்தது போலும்.

“நான் இலங்கை”

“என்னவேணும் சொல்லுங்கோ?” எனக்கு வலது பக்கம் வந்த வெய்ட்டர் கேட்டாள். என்னருகில் இருந்தவளைப் பார்த்து தலையை அசைத்துப் புன்னகை உதிர்த்தாள்.

“இன்னொரு கிளாஸ் எடுத்து வா.”

அவள் போவதைப் பார்த்து விட்டு திரும்பி

“என்ன பேர் சொன்னீங்கள்?” என்று கேட்க,

“நான் இன்னும் சொல்லவே இல்லையே” என்று சிரித்தாள்.

“நீ இன்னும் கேக்கவே இல்லையே மச்சி” என்று நண்பனும் சேர்ந்து பெரிதாகவே சிரித்தான். அவன் கவனம் அங்கே ஆடுபவர்களிடம் இருந்தாலும் நாங்கள் என்ன பேசுறோம் என்று கேட்க ஆவலும் இருந்தது.

“எனது பெயர் ஜாஸ்மின்”

“பெயர் மாதிரியே நீங்களும் அழகா இருக்கிறீங்கள்”

“நீங்கள் பொய் சொல்லுறீங்கள்” என்று வெக்கத்துடன் புன்முறுவல் பூத்தாள். நண்பன் வேறு திசையில் கவனம் செலுத்த அவளோ என்னையே ஆழமாகப் பார்ப்பதை நான் உணர்கிறேன்.



வெய்ட்டர் கிளாஸை மேசையில் வைத்து இன்னும் வேறு ஓடர் இருக்கா என்று கேக்கவும் பிறகு அழைக்கிறேன் என்று சொல்ல அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

நண்பன் மூன்று கிளாஸிலும் கால் வாசிக்கு ஜக் டானியலை நிறைத்து ஜாஸ்மினிடம் “ஐஸா? வாட்டறா?” என்று கேட்டபடி எங்கள் இருவருக்கும் ஐஸ் போட்டான்.

“ஐஸ் போதும்”

சேர்ஸ் சொல்லி ஒரு மிடறு எடுத்துவிட்டு,

“யங் லேடிசோடா டான்ஸ் பிடிக்குமா?” என்று நண்பனை சிரிப்புடன் கேட்டாள். அவள் வேறு பக்கம் திரும்பும் போது என் கண்கள் அசைபோட எத்தனித்தன. அதுவரை உள்ளே போன ஜக் டானியல் அதற்கு தூபம் போட்டது. வலுக்கட்டாயமாகத் தவிர்த்தேன்.

“இல்லை இல்லை பாக்கிறதோட சரி. மச்சி கதைச்சுக்கொண்டிரு” என்று வாயில் இரண்டு விரல்கள் கூட்டி வைத்து தம் அடிக்க போவதை சைகை செய்து விட்டு ஒதுக்காக இருந்த தம் கூட்டத்துக்கு நடந்தான்.

“என்ன செய்யிறீங்கள் இங்க சிங்கப்பூர்ல?” அவள் தொடர்ந்தாள்.

“எலக்ட்ரானிக்ஸ் என்ஜினீயர் டெலி கம்யூனிகேஷனில் வேலை பாக்கிறேன்”

“கேள் பிரெண்ட் இருக்கா” என்றாள் இன்னும் அந்த மதுவை சுவைத்த படியே.

“அதெல்லாம் இல்லை நண்பர்களுடன் இப்படி சில நேரங்களில் கிளப் வாறதும் ரசிக்கிறதும் எங்களுக்குப் பழகிப்போச்சு”

“என்னோடு இன்றிரவு தங்க உங்களுக்கு சம்மதமா” மெதுவாக எனது காதருகில் வந்து கேட்டாள். மூச்சுக் காற்று சூடாகக் காதையும் கன்னத்தையும் வருடியது.

மெதுவாகத் திரும்பி புன்முறுவல் செய்தேன். கிளப்பில் இப்படியாகச் சில பெண்கள் கேட்பது வழமைதான். ஆனால். இவள் அந்த ரகம் இல்லை என்றே முதலில் கணித்தேன். உடையில் கவர்ச்சி அதிகம் காட்டாமல், முகப்பூச்சுகள் அளவாகவும் உதட்டுச்சாயம் மெல்லியதாகவும் இருந்தது. ஆகவே இதை எதிர்பார்க்கவில்லை. அதோடு அந்த ரக பெண்கள் கிளப்பிற்கு வெளியில்தான் அதிகம் நிற்பார்கள். உள்ளே வருவதாய் இருந்தால் ஆண்கள் யாராவது விரும்பினால் சேர்ந்து வந்து இருப்பார்கள். தனியாக வருவது குறைவு.

“நான் உங்களின் தோற்றத்தை வைத்து இப்படிக் கேட்பீர்கள் என்று எதிர் பார்க்கவில்லை. நீங்கள் நகைச்சுவைக்குத் தானே அப்படி கேட்டீர்கள்? உங்களைப்பற்றி சொல்லலாமே? உண்மையில் என்னவேலை பார்க்கிறீர்கள்? என்று கேள்விகளை அடுக்கினேன்.

“முன்னம் பத்து வருடங்களாக மஸ்ஸாஜ் சென்டரில் வேலை செய்தேன். பலரை மகிழ்விப்பதில் இரவுகள் கரைந்தன. அப்போது ஜேம்ஸ் என்ற வெள்ளைக்காரருடன் தொடர்பாகி கல்யாணம் கட்டாமலே சேர்ந்து வாழ்ந்தோம். இரண்டு வயதில் மகன் இருக்கிறான். கடந்த ஆறு மாதமாக ஜேம்ஸ் சிங்கப்பூருக்கு வரவில்லை. தொழில் நிமிர்த்தம் வெளிநாடு போனபின் தொடர்பும் இல்லை. இருவரும் சேர்ந்து வாழத்தொடங்கின பின் ஜேம்ஸ் என்னை வேலை செய்ய அனுமதிக்கவில்லை. எனக்கும் அது மிகவும் வருத்தமாக இருந்தது. நான் இப்போ தனியார் நிறுவனத்தில் வரவேற்பாளராக சொற்ப சம்பளத்தில் வேலை பார்க்கிறேன். மிகவும் பணத்தட்டுப்பாடு. வீட்டு வாடகை, குழந்தையின் செலவு, பணிப்பெண் சம்பளம் என்பவற்றுக்கு இந்த வருமானம் போதுமானதாக இல்லை. அதாலேதான் என்று...” சங்கடத்துடன் தலை குனிந்தாள்.

“ஓ பரிதாபமாக இருக்கிறது” அனுதாபத்தை வெளிப்படுத்தினேன்.

நண்பன் இரண்டு தம் அடிச்சிருப்பான் போல அல்லது அங்கே மப்பில் இருந்த யாரோ இளம் பெண்களுடன் அரட்டை அடித்துக்கொண்டு இருந்தான்.

“எனது சேவைக்குத் தகுந்து நீங்கள் உங்களுக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை கொடுத்தால் போதும்” என்று எனது கையை பற்றினாள்.

“நான் யோசிக்கவேணும்” என்று அவளின் கையை மெதுவாக விலக்கி விட்டு அடுத்த ரவுண்டை எனக்கும் அவளுக்கும் ஊற்றினேன். நண்பனின் கிளாசில் இன்னும் அரைவாசி மீதம் இருந்தது.

அவளுக்கு ஒருமாதிரி ஆகியிருக்க வேணும் சிறிதுநேரம் அமைதியாக நடுவில் ஆடுபவர்களையும் மேடையில் கிற்றார் வாசிப்பதையும் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

“சூப்பர் சரக்கு மச்சான் என்னமா கதைக்கிறாள் தொட்டுத் தொட்டு” என்றபடி குதூகல சிரிப்புடன் சந்தோசமாக வந்து தனது இருக்கையில் அமர்ந்தான் நண்பன்.

“மூடுவாயை நான் சந்தோசமாக இல்லை” நண்பனை பார்த்துக் கடுமையாக கத்தினாள் ஜாஸ்மின்.

நான் அதிர்ந்து விட்டேன் நண்பனுக்கு ஏதும் புரியாமல் என்னைப் பார்த்தான் பரிதாபமாக. நான் அவனை அமைதியாக இருக்கும் படி சைகை செய்தேன்.

அவளோ மறுபடியும் பல்லை நெருமியபடி வேறு எங்கோ கவனத்தைச் செலுத்தினாள். எனக்குப் பயம் பற்றிக்கொண்டது. பக்கத்தில் திரும்பி எங்களை யாரும் அவதானிக்கிறார்களா என்று பார்க்கிறேன்.

அங்கே சுவர் ஓரமாக நின்ற பௌன்சர் என்னை அருகில் வரும் படி அழைத்தான். அவள் கத்தியது அவனுக்குக் கேட்டிருக்குமோ? என்று சந்தேகம் எழுந்தது. சரி என்ன நடந்து விடும் பார்க்கலாம் என்று திரும்பி நீங்கள் சாப்பிடுங்கள் என்று கிளாசை அவளிடம் நீட்டினேன். சடுதியாக அதைத் தட்டிவிட்டாள். கண்ணாடிக் கிளாஸ் விழுந்து நொறுங்கியது.

நண்பன் அவளை அடிக்கக் கையை ஓங்கவும் என்னை அழைத்த பௌன்சர் வேகமாக வந்து அவனைப் பிடித்தான்.

அவளைப்பார்த்தேன். பயமா? கோபமா? அனுதாபமா? என்று எந்த உணர்ச்சியைக் காட்டுவதென்ற குழப்பம் என்னுள் எழுந்தது.

“சரி சரி நான் சம்மதிக்கிறேன்” என்று அவள் கண்களைப் பார்த்துச் சொல்லவும்,

“ஜாஸ்மின் ஜாஸ்மின்” என்று ஒரு வெள்ளைக்காரன் ஓடி வந்து அவளை பிடித்தான்.

“மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இவளது கணவன் ஜேம்ஸ். இவள் கொஞ்சம் மனப்பிறழ்வில் இருக்கிறாள். வைத்தியம் பார்க்கிறோம். சில வேளைகளில் இரவில் கிளப்பிற்கு வந்து விடுகிறாள்.”

மறுபடியும் மன்னிப்புக் கேட்டான். அவன் முகம் அந்த மின்னும் பலவர்ண ஒளியிலும் சோபை இழந்திருந்தது. அவளை இறுக்கி அணைத்தபடி வலுக்கட்டாயமாக அழைத்துக்கொண்டு போனான்.

அவள் இன்னும் திமிறிக்கொண்டுதான் இருந்தாள். ■

# தமிழ் மக்களின் கனவுகளைத் திரையில் ஆவணமாக்கிய

## மனிதநேயக் கலைஞர் தர்மசேன பத்திராஜ

முருகபூபதி

இலங்கை, சிங்கள சினிமாவைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்தியதுடன், தமிழ்பேசும் மக்களின் கனவுகளையும் திரையில் ஆவணமாக்கிய மனிதநேயக் கலைஞர், திரைப்பட இயக்குநர் கலாநிதி தர்மசேன பத்திராஜ கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கண்டியில் தனியார் மருத்துவமனையில் காலமானார். அன்றைய தினமே மாலையில் கண்டி மஹியாவ மயானத்தில் அவருக்கான இறுதி நிகழ்வுகளும் நடந்தன!

அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திரைப்படவிழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதும் பெற்றார். தமது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் தமிழ்ப்பிரதேசத்திலிருந்தே விருதைப் பெற்றுக்கொண்டு அவர் விடைபெற்றுவிட்டார் என்பதும் நெகிழ்ச்சியான செய்தி.

தர்மசேன பத்திராஜ தமிழ்பேசும் மக்களின் உற்ற நண்பர். அனைத்து கலா ரசிகர்களினாலும் கொண்டாடப்பட்டவர். இலங்கையின் முன்னணித் திரைப்பட இயக்குநர். தரமான சிங்களப் படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் பலவற்றையும் இயக்கியவர். பழகுதற்கு இனியவர். எளிமையானவர். சிறுபான்மை இனமக்களிடம் அளவு கடந்து நேசம் பாராட்டியவர். விசால மனம் படைத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்.

> தர்மசேன பத்திராஜ தமிழ்பேசும் மக்களின் உற்ற நண்பர். அனைத்து கலா ரசிகர்களினாலும் கொண்டாடப்பட்டவர். இலங்கையின் முன்னணித் திரைப்பட இயக்குநர். தரமான சிங்களப்படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் பலவற்றையும் இயக்கியவர். பழகுவதற்கு இனியவர். எளிமையானவர். சிறுபான்மை இனமக்களிடம் அளவு கடந்து நேசம் பாராட்டியவர். விசால மனம் படைத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்.



எல்லாவற்றுக்கும் அப்பால் மனித நேயக்கலைஞர். எழுத்தாளர் காவலூர் ராசதுரையின் "பொன்மணி" திரைப்படத்தையும் இயக்கியவர்.

பொன்மணியில் திருமதி சர்வமங்களம் கைலாசபதி -டொக்டர் நந்தி-பொறியியலாளர் திருநாவுக்கரசு-ஊடகவியலாளர் கமலா தம்பிராஜா-கலைஞர் சோக்கல்லோ சண்முகம்-மௌனகுரு -சித்திரலேகா தம்பதியர் - பவாணி திருநாவுக்கரசு - திருமதி காவலூர் ராசதுரை உட்பட பலர் நடித்தனர். கதாநாயகியாகத் திரைப்பட நடிகை சுபாஷினி நடித்தார். பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன் பாடல்கள் இயற்றினார். காவலூர் ராசதுரையின் மைத்துனர் தயாரித்திருந்தாலும் பொன்மணியின் கதை- வசனம் நிருவாகத் தயாரிப்பு முதலான பொறுப்புகள் அனைத்தையும் சுமந்தவர் காவலூர் ராசதுரைதான்.






பொன்மணி திரைப்பட அனுபவம் குறித்து அதில் நடித்திருக்கும் பேராசிரியர் மௌனகுருவும் மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் மகுடம் இதழில் தர்மசேன பத்திராஜவின் நல்லியல்புகளையும் அவரது படைப்பூக்கத்தையும் சிலாகித்து எழுதியிருக்கிறார்.

தர்மசேன பத்திராஜ, முதலில் களனிப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் தோன்றியதும் அங்கும் விரிவுரையாளராகப் பணி தொடர்ந்தவர். அதனால் யாழ்ப்பாணத்தில் பல எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களைத் தமது நண்பர்களாக்கிக்கொண்டார். றுகுணு, கொழும்பு பல்கலைக்கழகங்களிலும் பணி தொடர்ந்துள்ள பத்திராஜ, இலங்கை ஊடகப்பயிற்சி நிறுவனத்திலும் தலைவராக இருந்தவர்.

பத்திராஜ அவுஸ்திரேலியா மெல்பன் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் பெங்காலி திரைப்படங்கள் தொடர்பான தமது கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டவர். அவரது இயக்கத்தில் வெளியான In Search Of A Road - ஒரு பாதையைத்தேடி- ஆவணப்படம் ஈழத்தமிழரின் வாழ்வோடு சம்பந்தப்பட்டது. இந்த ஆவணப்படம் கொழும்பு - காங்கேசன்துறையில் மார்க்கம் போர்க்காலத்தில் சீர்குலைந்ததைச் சித்திரித்தது.

In Search Of A Road ஆவணப்படத்தில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் டொக்டர் நந்தியும் நாடகக்கலைஞர், பிரதியாளர் குழந்தை சண்முகலிங்கமும் நடித்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் போர்க்காலத்தில் நீடித்த மின்சாரத் தடையினாலும் எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கான பயிற்சிப்பாடங்களை இரவில் எழுதுவதற்குத் தாம் மண்ணெண்ணை சிம்னி விளக்கினை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்துகிறார் என்பதை உருக்கமாக இப்படத்தில் டொக்டர் நந்தி சொல்கிறார்.

இப்படம் குறித்து மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் இடம் பெற்ற வரிகள்:

"வடக்கே ஓடும் புகையிரத வண்டியினதும் அதற்குச் சமாந்தரமாகச்செல்லும் ஏ9 பாதையினதும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த கதை ஒரு பாதையைத் தேடி.

போருக்கும் சமாதானத்துக்கும் இடையில் அகப்பட்ட நிலையில் உள்ள மக்களின் கதை. பயணக் கதை மரபில் உருவாகியுள்ள இத்தயாரிப்பு, தன்கதை சொல்லும் பாணியில் ஒரு விவரணப்படமாக வெளிவருகின்றது. இந்தப் புகையிரத வண்டியும் ஏ9 பாதையும் யுத்தம் - சமாதானம் - பயணம்- சமூக எழுச்சி - இடம்- இடப்பெயர்வு என்பவற்றின் சின்னங்களாகும்.

யாழ்நகர் நோக்கிப் புறப்படும் புகையிரத வண்டி இடம் - நிலம் பிராந்தியம் - யுத்தம் - சமாதானம் - இல்லம் - நாடு என்பவற்றுக் கூடாகப் பயணம் செய்கிறது. ஒரு பூமியை நாடி.... ஒரு கதையைத் தேடி.

உண்மைக்கும் புனைகதைக்கும் இடையில் உள்ள இந்தப்படம் எம்மை ஒரு நூறு ஆண்டு காலப் பயணத்துக் கூடாக ஒரு எதிர் காலத்தை நோக்கியே எம்மை இட்டுச் செல்கிறது.

"ஆம், நினைவுகள் சாசுவதமானவை. அழியாதவை. நினைவுகள் மரணித்துப்போனால் அதுவே மனிதனின் மரணமுமாகிவிடும். பூமிப்பந்தெங்கும் வாழும் மனித குலம் நினைவுகளைச் சுமந்து கொண்டே ஓடிக்கொண்டிருக்கிறது.

தேசிய இனப்பிரச்சினையால் யுத்த நெருக்கடிக்குள் மூழ்கி மரணங்கள் மலிந்த மண்ணாக மாறிய இலங்கையைப் பற்றிய வெட்டு முகத்தோற்றத்தைப் பத்தி ராஜ இந்த ஆவணப்படத்தின் மூலம் காண்பித்தவர்.

இலங்கையில் ஒரு காலத்தில் புரிந்துணர்வுடன் வாழ்ந்த மூவின மக்களும் தமது வாழ்விடங்களைத் தொலைத்துவிட்டு நினைவுகளைச் சுமந்துகொண்டு இடம் பெயர்ந்தனர். குறிப்பாகத் தமிழர்கள் அந்நிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர்.

எங்குதான் சென்றாலும் முன்னர் வாழ்ந்த வாழ்வும் - நடமாடிய பிரதேசங்களும் - பயணித்த ரயில் வண்டிகளும் நினைவுத்தடத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் என்பதை இந்த ஆவணப்படத்தின் மூலம் மிகவும் உருக்கமாகச் சித்திரித்தவர் பத்திராஜ.

போர்க்காலத்தில் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டது ஏ9 பாதையில் அமைந்த ரயில் நிலையங்கள் மாத்திரமல்ல மக்களின் நெஞ்சங்களும்தான் என்பதை இப்படத்தின் காட்சிகளில் பார்க்கும் போது நெகிழ்ந்துபோகின்றோம்.

வடக்குக்கான ரயில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதனால் கிளாலி கடல் ஏரிப்பாதையூடாக மக்கள் அனுபவித்த சொல்லொணாத்துயரமும் இதில்சித்திரிக்கப்பட்டது.

முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் - யாழ்குடாநாட்டிலிருந்து தமிழ் மக்களின் தென்மராட்சியை நோக்கிய பாரிய இடப்பெயர்வு, தாம் வாழ்ந்த மண்ணைத்ள தரிசிக்கத்திரும்பும் மக்களின் உள்ளக்குமுறல்.... இவ்வாறு பல உண்மைகளைக் கமரா உள்வாங்கிக்கொண்டிருந்தது. ஒரு சிறந்த திரைப்பட இயக்குநர் போதகர் அல்ல. அதனால் அவர் வெளிப்படையாக எந்தவொரு செய்தியையும் போதிக்கமாட்டார்.

இலங்கையிலிருந்த அரசியல் அழுத்தங்களினால் இப்படம் அங்கே காண்பிக்கப்படவில்லை. இப்படம் போரில் பங்கேற்ற அனைத்து தரப்பினரையும் கருத்தாழத்துடன் விமர்சித்தது. போரினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் ஆத்மக்குரலாகப் பேசியது.

குறிப்பிட்ட ஏ9 பாதையில் தார்போட்ட வீதியாக இருக்கட்டும் சிலிப்பர்க்கட்டைகள் தண்டவாளங்களினால் அமைக்கப்பட்ட ரயில் பாதைகளாக இருக்கட்டும் வரலாற்று ரீதியாக புள்ளி விபரப்படி பார்த்தால் அந்தப் பாதைகளில் அதிக எண்ணிக்கையில் பயணித்தவர்கள் தமிழர்களே!!

அவர்கள் ஒரு காலகட்டத்தில் தொலைத்து விட்டிருந்த அந்தப்பாதையை உலகிற்குக் காண்பித்தவர் மனிதாபிமானம் மிக்க ஒரு சிங்களச் சகோதரர்தான் என்பதே இந்தப்பதிவு உணர்த்த விரும்பும் செய்தி.

உலக யுத்தங்களாகட்டும் உள்நாட்டு யுத்தங்களாகட்டும் அவற்றை ஆதாரங்களுடன் திரைப்படங்களாகவும் ஆவணப்படங்களாகவும் வெளியிடும் தேர்ந்த ரசனை மிக்க சமூகக்கலைஞர்களின் நோக்கம் யுத்தங்களை ஆதரிப்பது அல்ல. அவர்களின் பதிவுகளில் காண்பிக்கப்படும் மனித வலி மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதற்கான எச்சரிக்கை செய்திதான்.

இந்த ஆவணப்படத்தினை இயக்கித்தயாரித்த கலைஞர் தர்மசேன பத்திராஜவின் நீண்ட நாள் கனவு மீண்டும் ஏ9 பாதை மக்களுக்காகத் திறக்கப்படவேண்டும் - மீண்டும் யாழ்தேவி வடக்கிற்கான தனது பயணத்தைத் தொடரவேண்டும் என்பதாகத்தான் இருந்தது. அந்தக்கனவு போருக்குப் பின்னர் நனவாகியது.

தர்மசேன பத்திராஜா செக்கோஸ்லவாக்கிய எழுத்தாளர் பிரான்ஸ் காஃப்கா (Franz Kafka, 1883 - 1924) எழுதிய Metamorphosis என்னும் நாவலை அடிப்படையாக வைத்தும் ஸ்வரூப என்ற சிங்களப் படத்தை இயக்கி வெளியிட்டவர். ■

ரமணி



# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

05

தமிழ்த் திரை உலகின் அட்டகாசமான வில்லன்களில் ஒருவர் பி.எச்.வீரப்பா. வீரப்பா என்றதும் “ஹாஹ்...ஹாஹ்...என்ற வெடிச் சிரிப்பும்”, “அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி” எனும் வசனமும் மனதில் வந்து போவதைத் தவிர்க்க முடியாது. பி.எஸ்.வீரப்பாவைப் போன்றே நம்பியார், அசோகன் போன்ற வில்லன் நடிகர்களும் சிரிப்பால் மிரட்டினார்கள். பஞ்ச் வசனம் இல்லாத அந்தக் காலத்தில் “அடைந்தால் மகா தேவி இல்லையேல் மரணதேவி” எனும் வசனம் பட்டி தொட்டி எங்கும் எதிரொலித்தது. தெரிந்தோ தெரியா மலோ பஞ்ச் வசனத்தை ஆரம்பித்து வைத்த பெருமை வீரபாவைச்சாரும்.



வஞ்சிக் கோட்டை வாலிபன் படத்தில் வீரப்பா பேசிய “ சபாஷ் சரியான போட்டி” எனும் வசனமும் இன்று வரை பேசப்படும் பஞ்ச் வசனம். எம்.ஜி.ஆர் நடித்த ஆரம்ப கால படங்களில் நம்பியாருக்கும் முன்னதாக வில்லன் வேடங்களில் நடித்தவர். ‘ஹாஹ்..ஹாஹ்.. ஹாஹ்...’ என்ற அதிரடி சிரிப்பிலேயே கலங்கடித்தவர். எம்.ஜி.ஆர். நடித்த ‘சக்கரவர்த்தி திருமகள்’ படத்தில் தான் முதன்முதலாக இந்த இடிச்சிரிப்பை அவர் வெளிப்படுத்தினார். அதற்குக் கிடைத்த பலத்த வரவேற்பால், பின்னர், அதுவே அவரது தனி முத்திரை ஆனது. அந்த சிரிப்புக்குச் சொந்தக்காரர் பி.எஸ்.வீரப்பா.




வீரப்பாவின் தமிழ் உச்சரிப்பும் ஏற்ற இறக்கத்துடன் அவர் பேசும் பாங்கும் மக்களைக் கவர்ந்தன. எம்.ஜி.ஆர். நடித்து 1957 ஆம் ஆண்டு வெளியாகி அமோக வெற்றி பெற்ற ‘மகாதேவி’ படத்தில் “அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி” என்ற வீரப்பாவின் வசனம் இன்றளவும் பிரபலம். அந்தப் படத்தில் வீரப்பாவின் பெயர் கருணாகரன். சந்தர்ப்பவசத்தால், வீரப்பாவின் விருப்பத்துக்கு மாறாக, இளவரசியாக வரும் நடிகை எம்.என்.ராஜத்தை அவருக்கு கட்டாயத் திருமணம் செய்துவைத்து விடுவார்கள். திருமணம் முடிந்து வீரப்பாவை “அத்தான்...” என்று எம்.என்.ராஜம் அழைப்பார். ஆத்திரத்தை அடக்கியபடி வேதனை கலந்த சிரிப்போடு வேண்டா வெறுப்பாக, “அப்படிச் சொல்... சத்தான இந்த வார்த்தையிலே கருணாகரன் செத்தான்” என்று வீரப்பா கூறும்போது தியேட்டரில் எழும் சிரிப்பலை அடங்க சில நிமிடங்கள் பிடிக்கும். 1948 முதல் 1984 ஆம் ஆண்டு வரை சினிமாவில் இருந்த வீரப்பா தமிழ், ஹிந்தி, மலையாளம் உட்பட 12 படங்களைத் தயாரித்தார். அன்றைய பிரபல நட்சத்திரங்களான, சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி, ஜெய்சங்கர் ஆகியோர் அவரின் படங்களில் நடித்தனர். ஆனந்தஜோதி, ஆலயமணி, ஆண்டவன் கட்டளை ஆகிய படங்கள் பெரு வெற்றி பெற்றன. சினிமாவில் உழைத்த பணத்தை சினிமாவில் முதலீடு செய்த வீரப்பா அதே சினிமாவால் முதலை இழந்தார்.



அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், என்.டி.ராமராவ், வி.என்.ஜானகி, ஜெயலலிதா ஆகிய ஆறு முதல்வர்களுடன் பணியாற்றிய பெருமைக்குரியவர். 1962 ஆம் ஆண்டு வெளியான ஆலயமணி வசூலில் பெரும் சாதனை செய்தது. கதாநாயகனான சிவாஜி வில்லனாக சித்திரிக்கப்பட்ட படம் ஆலயமணியை கிந்தியில் தயாரிப்பதற்கு உரிமை கோரி ஐந்து இலட்சம் ரூபா தருவதற்கு ஒருவர் முன் வந்தார். இன்றைய கணக்கில் சுமார் எட்டு கோடி ரூபா பெறுமதியானது. அதிர்ச்சியில் உறைந்த வீரப்பா அந்த சந்தோசச் செய்தியை நண்பர்களுடன் பகிர்ந்தார்.

வீரப்பாவுடைய நண்பர்கள் அனைவரும் பாராட்டினார்கள். ஒரே ஒரு நண்பர் மட்டும் வித்தியாசமாகச் சிந்தித்தார். ஆலயமணி பட உரிமைக்காக ஐந்து இலட்சம் ரூபா கொடுக்கத் தயாராக இருக்கும் அவர் அதனால் எவ்வளவு இலாபம் அடைவார் என வீரப்பாவின் காதிலே ஓதினார். சாத்தான் ஓதிய வேதம் வீரப்பாவின் சிந்தனையை மழுங்கடித்தது. அவர் சொல்வது சரிபோல் தோன்றியது. ஹிந்திப்பட தயாரிப்பாளர் மீண்டும் வீரப்பாவைச் சந்தித்துப் பேசினார். வீரப்பா மழுப்பலாகப் பதில் சொன்னார். ஆலயமணி படத்தின் உரிமையை வாங்குவதில் குறியாக இருந்த அவர், இம்முறை வித்தியாசமாகச் சொன்னார். பட உரிமையைத் தரவேண்டாம் படத்தை நான் தயாரிக்கிறேன். இலாபத்தை சமமாகப் பங்கு போடுவோம் என்றார். அந்த யோசனையை வீரப்பா ஏற்றுக்கொண்டார்.

வீரப்பாவின் அலுவலகத்துக்குச் சென்ற சாத்தான் மீண்டும் ஓதியது “உன்னுடைய படத்தின் இலாபத்துக்காக இன்னொருவனின் கையை ஏன் எதிர் பார்க்க வேண்டும். நீங்களே தயாரித்தால் முழு இலாபத்தையும் எடுக்கலாம்.” வீரப்பாவின் வாழ்க்கையில் நண்பனின் ரூபத்தில் விதி விளையாட்டை ஆரம்பித்தது.

வீரப்பாவின் பீ.எஸ்.வி பிக்சர்ஸ் கிந்திப் பட உலகில் காலடி எடுத்து வைத்தது. ஆலயமணி தமிழில் மிகப் பெரிய வெற்றி பெற்ற படம் என்பதால் ஹிந்திப் பட வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்றன. சிவாஜி நடித்த பாத்திரத்துக்கு திலீப்குமாரும், சரோஜா தேவி நடித்த பாத்திரத்துக்கு வகிதா ரகுமானும் ஒப்பந்தம்




செய்யப்பட்டனர். ஹிந்திப் பட உலகம் வீரப்பாவுக்கு வாழ்த்துக் கூறியது. ஆலயமணி படத்தை கே.சங்கர் இயக்கினார். ஆத்மி என்ற ஹிந்திப் படத்தை இயக்க ஏ.பிம்சிங் ஒப்பந்தம் செய்யப்பட்டார். பெரும் எதிர்பார்ப்புடன் மிகுந்த பொருட் செலவில் ஆத்மி படப்பிடிப்பு நடைபெற்றது. ஆத்மி தியேட்டரில் வெளியானது போட்ட முதலுக்கு அதிகமாகக் கிடைக்கும் என வீரப்பா எதிர் பார்த்தார். தமிழ்ப் படங்களில் கிடைத்த இலாபத்தை ஹிந்திப் படத்தில் தொலைத்தார் வீரப்பா.

வீரப்பாவின் தோல்வி திலீப்குமாரின் மனதை வாட்டியது. அவருக்கு உதவி செய்ய வேண்டும் என நினைத்த திலீப்குமார் “கங்கா ஜம்னா” என்ற தனது படத்தை தமிழில் தயாரிப்பதற்கு வீரப்பாவுக்கு அனுமதியளித்தார். ஆத்மி வெளிவருவதற்கு 10 வருடங்கள் முன்னதாக 1961 ஆம் ஆண்டு வெளியாகி வசூலில் சாதனை படைத்த படம் கங்கா ஜம்னா. அதை தமிழில் தயாரிக்க பலர் கேட்டபோதும் திலீப்குமார் மறுத்துவிட்டார். கங்கா ஜம்னா படத்தின் கதையை எழுதி தயாரித்தவர் திலீப்குமார். திலீப்குமார், வைஜயந்திமாலா ஜோடியாக நடித்த கங்கா ஜம்னா தமிழ்ப் படத்தில் சிவாஜியும் பத்மினியும் ஜோடியாக நடித்தனர். எஸ்.ராமநாதனின் இயக்கத்தில் வெளியான “இரு துருவங்கள்” என்ற அந்தப்படம் படு தோல்வியடைந்தது.

தமிழில் வெற்றி பெற்ற ஆலயமணி ஹிந்தியில் ஆத்மியாகி தோல்வியடைந்தது. ஹிந்தியில் பெரு வெற்றியடைந்த கங்கா ஜம்னா தமிழில் இருதுருவங்களாகி இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. இரண்டு படத் தோல்விகளும் வீரப்பாவை முடக்கின. இரண்டு பெரிய தோல்விகளுக்குப் பின்னரும் ஆனந்த சிற்பங்கள், திசை மாறிய பறவைகள், வெற்றி ஆகிய மூன்று படங்களை தயாரித்த அவரால் மீண்டும் தலை நிமிர்த்த முடியவில்லை.

■

வேதநாயகம் தநேந்திரன்





# ஸ்மார்ட் (Smart)...

**01**

அது ஒரு உதைபந்தாட்ட மைதானம். இரு பிரபலக் கல்லூரிகளின் அணிகள் மைதானத்தில் எதிரும் புதிருமாக நின்றன. இரு கல்லூரிகளின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும், அதிபரும் தமது மாணவர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காக வீரர்களுடன் உரையாடினார்கள்.

“சேர் அவங்களைப் பாருங்கள். விளைந்து மாமிச மலைகளைப் போல நிற்கின்றார்கள். எங்கட பெடியங்களைப் பாருங்கள்.மெல்லிய வாட்டசாட்டமான பெடியளாக நிற்கின்றார்கள். அவங்கட காலுகளுக்குள்ளால் புகுந்து கோல்களை அடித்து இலகுவாக வென்று விடுவோம்” என ஓர் கல்லூரி

> **கடுமையான வேலை (Hard Work) என்பதை விட ஸ்மார்ட் வேலை (Smart Work ) என்பதன் ஊடாகவே இலகுவான வெற்றிகளைக் காணும் மனிதனே 21 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த முன்னேற்றத்தைக் காண்கின்றான். உடற்பலத்தை மட்டும் நம்பி வாழும் மனிதன் வாழ்வில் பின்னடைகிறான். நுட்பமான நகர்வுகள் மூலமாக வேலைகளை இலகுவாகச் செய்து கொள்ளும் மனிதன் நிறையவே சாதித்துக் கொள்கிறான். அவனையே வெற்றியாளனாக உலகம் கொண்டாடுகிறது.**

அணியின் தலைவனான வீரன் கூறினான்.

விளையாட்டு ஆரம்பத்திற்கு விசில் ஊதப்பட்டது. இரு அணியின் வீரர்களும் மைதானத்தில் இறங்கினார்கள். விளையாட்டு ஆரம்பமானது.

உடற்பருமனுள்ள வீரர்களைக் கொண்ட அணி பூவா தலையா நாணயச் சுழற்சியில் வென்றது. உதைபந்தாட்டத்தை ஆரம்பித்தார்கள்.

மைதானத்தின் மையப் பகுதியிலிருந்து தமது சக அணி வீரருக்குத் துல்லியமாகப் பந்தைப் பரிமாறினார்கள்.

பந்தைக் காலடிக்குப் பெற்ற ஒரு வீரன் தனது அணியின் அடுத்த வீரனுக்குத் துரிதமாகப் பரிமாறினான். அதனை லாவகமாக கோல் போஸ்டிற்குள் செலுத்த கோல் ஒன்று பதிவானது.

இப்படியே அடுத்தடுத்துக் கோல்கள் பதிவாகின. மெல்லிய வாட்டசாட்டமான வீரர்களைக் கொண்ட அணி உடற்பருமனுள்ள வீரர்களைக் கொண்ட அணியிடம் பந்தைப் பறிப்பதற்காக ஓடியோடித் திரிந்தார்கள். நாக்கைத் தொங்க விட்டபடி திரிந்தது தான் மிச்சம். ஆனால் முடியவில்லை. மொத்தமான உடல் பருமனுள்ள அணி வீரர்கள் பெரிதாக ஓடிக் களைக்காமல் பந்தைச் சரியாகப் பரிமாறித் தமக்குப் பெரும் வெற்றியைக் குவித்தார்கள்.

**02**

காலை 6.30 மணி. திருகோணமலை உள்துறைமுகம்.லோஞ்ச் மூலமாக மூதூர் செல்வதற்காக இரு நூறு பேருக்கு மேலாக வரிசையில் நின்றார்கள். முதல் 100 பேருக்குத்தான் லோஞ்ச் மூலமாக காலை 7.30 மணிப் பயணம் கிடைக்கும். ஏனையோர் காலை 10.30 மணிக்குச் செல்லும் அடுத்த லோஞ்சில்தான் பயணம் செய்யலாம் என்ற அறிவிப்பு வெளியானது.

என்ன செய்வது பொதுமக்கள் பொறுத்துக் கொண்டு நின்றார்கள். காலாதி காலமாக எங்கள் வாழ்க்கை இப்படிப் போகிறதே எனக் கவலைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

2010 ஆம் ஆண்டு நாட்டின் நிலைமைகள் சீராகின. பல மணி நேரங்களை விழுங்கும் ஆபத்தான நீண்ட கடற்பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படலம் தொடங்கியது.

வெள்ளை மணலுக்கும் கிண்ணியாவுக்கும் இடையிலான கடலுக்கு மேலாக இலங்கையின் மிக நீண்ட கடற்பாலமொன்று கட்டப்பட்டது. இறால்குழி, உப்பாறு, கிளிவெட்டி, வெருகல், பனிச்சங்கேணி ஆகிய இடங்களிலும் பாலங்கள் கட்டப்பட்டன. மூதூருக்கான வாகனப் பயணம் முக்கால் மணி நேரத்தில் செய்யக் கூடிய நிலைமை உருவானது. அது மட்டுமல்ல திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான போக்குவரத்து நேரம் அரைவாசியாகச் சுருங்கியது.

பல நூற்றாண்டு கால அலைச்சல் மிகு வாழ்க்கைக்கு முடிவுரை எழுதப்பட்டது.

**03**

அவள் உயர் தர வகுப்பில் வணி கம் படிக்கும் மாணவி. கணக்கியலும் ஒரு பாடமாகப் படிக்கின்றாள். கணக்குகளைச் செய்து பார்க்கும் போது அடிமட்டம், சிவப்புப் பேனா போன்றவற்றைத் தவிர்த்தாள். தனியே நீலமைப் பேனாவை மட்டும் பாவித்துக் கோடுகள் அடித்துக் கணக்குகளைச் செய்துபழகினாள். அடிமட்டம் பாவிக்காத காரணத்தால் அடிமட்டத்தை எடுக்கும் போது வரும் கவனச் சிதறல் தவிர்க்கப்பட்டது. அது போல சிவப்பு மைப் பேனாவைப் பாவிக்காத காரணத்தால் கணக்குச் செய்யும் போது அந்தப் பேனாவை எடுக்கும் கவனச் சிதறல் தவிர்க்கப்பட்டது.

நீல மைப் பேனாவை மட்டும் பாவித்துக் கோடுகளை அடித்துக் கணக்குகளைச் செய்து பழகியதால் அவளது முழுமையான கவனமும் கணக்குகள் மீதே இருந்தன. அதனால் கணக்குகளைச் சரியாகவும், வேகமாகவும் செய்து உயர் புள்ளிகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானாள்.

**04**

வீட்டில் சின்னச் சின்ன வேலைகளுக்கும் ஆணி, ஊசி, நூல், நட்டு எனத் தேடி எடுப்பதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது. அது போல தனது ஆவணங்களைத் தேவை கருதித் தேடி எடுப்பதற்குள் சிலவேளை ஒரு நாளாகி விடும். என்ன செய்வதென யோசித்தான். தடித்த காட்போட் பெட்டி ஒன்றை கடையில் வாங்கினான். அதனுள் வீட்டில் அன்றாடம் காணும் ஊசி, ஆணி, நட்டு, நூல் போன்ற பொருட்களை இட்டான். கிளியர் பாக் ஒன்றை வாங்கி தனது ஆவணங்களை வகைப்படுத்தி அதனுள் வைத்தான். அது போல வீட்டின் சகல பொருள்களையும் இலகுவான ஒரு ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வந்தான்.

இப்போது என்ன தேவையென்றாலும் தனக்குத் தேவைப்படும் போது ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளும் நிலைமை உருவாகியது. மிக வேகமாக எதனையும் செய்து கொள்ள முடிகிறது. வாழ்க்கைப் பாதையில் நேரவிரயமின்றி விரைவாக முன்னேற முடிகிறது.

**05**

அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பெரிய பதவிக்குரிய பரீட்சை. பாடத்திட்டம் எட்டு அத்தியாயங்களைக் கொண்டது. நிறைவுப் பரீட்சைக்கு பகுதி 1 இல் 4 வினாக்களும், பகுதி 2 இல் 4 வினாவுமாக மொத்தம் 08 வினாக்கள் வரும். இரண்டு பகுதிகளிலும் குறைந்தது 2 வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

பாடத் திட்டத்தின் 8 அத்தியாயங்களையும் இடை விடாமல் படித்துப் படித்துப் பலர் பரீட்சை எழுதினார்கள். ஆனால் தகைமைக்குரிய அடிப்படை உயர் புள்ளிகளைப் பெற முடியாமல் பலர் கோட்டை விட்டார்கள். அந்த மாணவன் 8 அத்தியாயங்களில் பகுதி 1, 2 இல் கலந்து 5 வினாக்களுக்கு விடைகள் எழுதக் கூடியதாகத் தனக்கு விருப்பமான 5 அத்தியாயங்களை மட்டும் படித்தான். ஏனைய 3 அத்தியாயங்களையும் முற்றாகப் படிக்காமல் விட்டான். அதனால் அவனது கவனம் 5 அத்தியாயங்களில் மட்டும் இருந்தது. அதனால் மிகவும் கூர்மையாகப் படிக்க முடிந்தது.



நிறைவுப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெறுவதற்குரிய உயர் புள்ளிகளைப் பெற்றான்.

கடுமையான வேலை (Hard Work) என்பதை விட ஸ்மார்ட் வேலை (Smart Work ) என்பதன் ஊடாகவே இலகுவான வெற்றிகளைக் காணும் மனிதனே 21 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த முன்னேற்றத்தைக் காண்கின்றான். உடற்பலத்தை மட்டும் நம்பி வாழும் மனிதன் வாழ்வில் பின்னடைகிறான். நுட்பமான நகர்வுகள் மூலமாக வேலைகளை இலகுவாகச் செய்து கொள்ளும் மனிதன் நிறையவே சாதித்துக் கொள்கிறான். அவனையே வெற்றியாளனாக உலகம் கொண்டாடுகிறது.

கடுமையாக உழைப்பதை விடச் ஸ்மார்ட்டாக உழைப்பதே இன்றைய வாழ்வில் வெற்றியடைவதற்குத் தேவையானது. ■

**இக்பால் அலி**




# மலையக மக்களின்

## பண்பாட்டைச் சொல்லும் நூல்

மலையகம் பற்றிய ஆய்வுகளை மலையகத்திலுள்ள ஆய்வாளர்கள் செழிப்புறச் செய்து வருகிறார்கள். ஒருவர் விட்ட தேடுதலை மற்றுமொருவர் தேடி அதற்குச் சான்று பகரக் கூடிய உசாத்துணை நூல்களைத் தேடி வாசித்து ஆராய்ந்து போதிய ஆதாரங்களை முன்வைத்து திறம்படச் செய்து வருகிறார்கள். மெச்சப்படத்தக்களவு புரிந்துணர்வு காணப்பட்டு வருகிறது. மலையக மக்களிடையே மாறுதலை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் ஆய்வு முயற்சிகளில் புதிய விஷயங்களும் புதிய தேடுதல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை துலாம்பரமாகத் தெரிகிறது. இத்தகைய முயற்சிகளில் தெளிவான நோக்குடைய வரும், மலையக மக்களுடைய வரலாற்று ஆய்வுத் துறையில் அதிகம் ஈடுபாடுடையவருமான ரா. நித்தியானந்தன் எழுதிய "19 ஆம் நூற்றாண்டின் இந்தியத் தமிழரின் இலக்கை நோக்கிய அசைவியக்கமும் தள்ளல் - இழுவை காரணிகளின் செயற்பாடும் " என்னும் தலைப்பிலான ஆய்வு நூல் வெளிவந்திருக்கிறது. இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நூலாகும்.

"இந்திய வம்சாவழி மக்களின் வருகையின் வரலாறு மட்டுமே எதிர்காலத்தைச் சீர் செய்யும் இம்மக்கள் வரலாற்றை அறிந்து அதனை வெளிப்படுத்துவதில் இம்மக்களின் எதிர்காலத்தை அறிந்து சரி செய்ய நிறைய வாய்ப்புள்ளது. அதற்காகவே இவ்வாய்வு இங்கு நிகழ்த்தப்படுகிறது" என்று நூல் அறிமுகத்தில் நூலாசிரியர் ரா.நித்தியானந்தன் இந்நூலுக்கு இட்ட அத்திவாரமாகும்.

இந்திய வம்வச வழி மக்களது மனித வாழ்வை வளப்படுத்துவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் கவிதை, சிறுகதை, நாவல் ஆய்வுக் கட்டுரைகள் என எழுதி வரும் ரா.நித்தியானந்தன் மலையக மக்களது வாழ்வியல் அம்சங்களை ஆழ்ந்து கற்று அவர்களது வெளிப்படுத்தும் பண்பாட்டை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற இலட்சிய நோக்கினைக் கொண்டவர் ரா. நித்தியானந்தன் அதுவே இந்நூலிலும் வெளிப்படுத்தி நிற்கிறது. இலட்சியத்தின் இயன்றளவு ஈடேற்றம் பேரவாவின் விளைவாக எழுந்தவையாக அவர் பிறந்து வளர்ந்த மலையகம் சமூகம் சார்ந்த கட்டுரையாக உள்ளன என்பது வெள்ளிடைமலை.

இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருவதற்கான முக்கிய காரணிகளை அவரது நூலில் குறிப்பிடுகையில் மலையக தமிழர்களது வரலாற்றுப் பின்னணியும் குடியகல்வு செயற்பாடுகளும் உந்துல் இழுவைக் காரணிகள் அடிப்படையில் இடம்பெற்று வந்துள்ளன. வறுமை, வேலை இன்மை, வறட்சி, காலநிலைப் பாதிப்புகள், நிலமின்மை, ஜமீந்தார்களின் கொடுமைகள், சாதிக் கொடுமை என்ற பல காரணிகள் இலங்கை நோக்கி நகர உந்தித் தள்ளின (பக்கம் 78) என தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார் நூலாசிரியர்.

இந்தியவம்சாவழித் தமிழ் மக்களுடைய மாற்றத்திற்கான ஆரம்பம் இலங்கை நோக்கிர நகர உந்தித் தள்ளின கால கட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படுகிறது. இந்த ஆய்வு நூலின் வாயிலாக இந்தியவம்சாவழி தமிழ் மக்களது புலம்பெயர் வரவையும் அவர்கள் இலங்கை வந்து எதிர்நோக்கிய சவால்களையும் அவர்கள் அடைந்துள்ள மாற்றங்களையும் தெளிவுற விளங்கிக் கொள்ள முடிகிறது. அது மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் இடம்பெயர்வு தொடர்பான காரணிகளையும் அவர்கள் மேற்கொண்ட தொழில் துறைகளையும் அரசியல் பண்பாட்டுச் செழுமையையும் அறிந்து கொள்ளவும் இந்நூலிலுள்ள கட்டுரைகள் உதவுகின்றன.

மாற்றமுறும் மலையகம் பற்றி பல்கலைக்கழகங்களில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இந்நூலிலுள்ள கட்டுரைகள் பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகின்றேன்.

கவிஞர் ரா.நித்தியானந்தன் எழுத்துத் துறையில் பொதுவுடமைக் கருத்துக்களைக் கொண்டவரும் விமர்சனத் துறையில் செய் நேர்த்தித் தன்மையும் இலக்கிய ஆர்வமும் எல்லாவற்றுக்கும் மேலாக எல்லோருக்கும் எல்லாம் சமனாக கிடைக்க வேண்டும் என்ற நெறியில் மனித வாழ்வு மேம்பட வேண்டும் என்ற வேட்கையும் கொண்டவர் என்பதை தம் எழுத்துக்களில் நிலைநிறுத்தி வரும் இவர் இம் மலையக மக்கள் அனுபவித்த சொல்லொண்ணாத் துயரங்களையும் தம் நூலில் அங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளார். "19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடசேஐயர் போன்றோர் இவர்களைத் தேசிய சமூக முறைமைக்குள் உள்வாங்க முயற்சித்த போதும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதற்கு, சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் அப்போது இடமளிக்கவில்லை. 1930 களில் இந்திய வம்சாவழி மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை 1948 -49 களில் அம் மக்களின் பிரஜாவுரிமை கட்டுப்படுத்தப்பட்டமை என்பன தேசிய மக்களுடன் இவர்கள் கலப்பதை மேலும் தடை செய்தன. மேற்படி காரணங்களால் சொத்துக்களையும் சேமிப்பையும் கொண்டிருந்த கல்வி கற்றோர் சமூகமாகிய தமிழர்கள் கூட இந்தியாவை நோக்கி மீள் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்" என்று மலையக வரலாற்று விடயங்களில் அவர் அதிக ஈடுபாடு காட்டித் திறன்பட எழுதியுள்ளார். ஆற்றொழுக்குப் போன்ற மிகவும் எளிமையானதும் தெளிவானதுமான அவரது தமிழ், படிப்போர் உள்ளங்களை ஈர்க்கவல்லது என்பதில் ஐயமில்லை.

இந்நூலாசிரியர் இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில் "இதை போன்ற நூல்களின் ஆங்கிலப் பிரதிகள் பிரித்தானிய பாராளுமன்ற சமூகத்துக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் தமது வரலாற்றுத் தவறுகளுக்கு மன்னிப்புக் கோர வேண்டும். மன்னிப்புக் கோரச் செய்ய தூண்டுதல்கள் நிகழ வேண்டும். அப்படி நடந்தால் எமது மக்கள் அரசியல் பொருளாதார ரீதியில் மேம்பாடானதாக மாற்றமடைய நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே அவ்வாறான நோக்கத்தை அடைந்து கொள்வது தான் இந்நூலை இங்கு ஆக்குவதன் நோக்கம்" அதே போன்று "இந்நூல் பற்றி அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறிப்பிடும் போது வரலாற்றுக் கல்வி பற்றி ஒரு முக்கிய கருத்து உண்டு. சகல இன மக்களும் இத்தகைய கல்வியினூடாகவே தாம் கடந்த காலங்களில் நடந்து வந்த பாதை, அதில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் அவற்றை அவர்கள் எதிர்கொண்ட நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வானது அவர்களுடைய வாழ்க்கை முன்னெடுப்புகளுக்கு உதவும் என்பதால் வரலாற்றுக் கல்வி கட்டாயமானது என்ற கருத்தின் அடிப்படையில் அந்த அடிப்படையில் இந்நூல் மலையக மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது" என்று தமது அணிந்துரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மலையகத்தின் அரசியல் சமூக கலாசாரப் பண்பாடுகள் பற்றிய விடயங்களை அவரது ஆய்வு நூலின் மூலமாக ஆரம்பம் முதல் இன்று வரையிலும் மாற்றமுறும் மலையகம் குறித்த கருத்து நிலை சார்பாக வெளிக் கொண்டு வருவதற்கான பயனுடைய தகவல்களை உள்ளடக்கப்பட்டதாக காணப்படுகிறது.

யுத்த கெடுபிடிகளின் காரணமாக நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தையும் அதே போன்று இன்று நாடு பொருளாதார சூழ்நிலையின் காரணமாக இளைஞர் நாட்டை விட்டு தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் சூழலையும் ஒரு பொதுவான ஒத்த பார்வையில் விளங்கிக் கொள்வதற்குச் சிறந்த நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. நூலாசிரியருக்கு மலையகம் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

■

### உலகக் கிண்ண போட்டி ரிக்கெற்றுக்கு

# 17 மில்லியன் பேர் விண்ணப்பம்

கட்டாரில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியைப் பார்ப்பதற்கு 17 மில்லியன் ரசிகர்கள் விண்ணப்பித்திருப்பதாக பீபா செவ்வாய் அன்று கூறியது, இது எதிர்பார்த்ததை விட ஐந்து மடங்கு அதிகமாகும்.

ஆர்ஜென்ரீனா, பிறேஸில், இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா, மெக்சிகோ, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து அதிகமான விண்ணப்பங்கள் வந்துள்ளதாக பீபா தெரிவித்தது.

டிசம்பர் 18 ஆம் திகதி 80,000 இருக்கைகள் கொண்ட லுசைல் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு மட்டும் சுமார் 1.8 மில்லியன் ரிக்கெற்றுகள் கோரப்பட்டுள்ளன என்று பீபா தெரிவித்துள்ளது.

உலகக்கிண்ண உதைபந்தாட்ட ரிக்கெற்றுகளின் விலை 605 ரியால்கள் ($165) சில கட்டார் குடியிருப்பாளர்களுக்கு 5,850 ரியால்கள் ($1,600) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடந்த இறுதிப் போட்டிக்கான விலையை விட 45 சதவீதம் அதிகமாகும். சர்வதேச ரசிகர்களுக்கான மலிவாக 2,200 ரியால்கள் ($600) என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் போட்டிகளுக்கும் சுமார் 3.3 மில்லியன் ரிக்கெற்றுகள் கிடைக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். கட்டார் குடியிருப்பாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் இராணுவம் ஆகியோருக்கு $11 ரிக்கெற்றுகள்.

பீபா, ரிக்கெற்றுகள், ஒளிபரப்பு உரிமைகள் மற்றும் உலகக் கோப்பை வர்த்தக வருவாயில் $500 மில்லியனுக்கும் அதிகமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■



கொவிட் 19 தடுப்பூசி போடாததால், அவுஸ்திரேலிய ஓபனில் விளையாடுவதைத் தடுக்கப்பட்ட நோவக் ஜோகோவிச், அடுத்த மாதம் நடைபெறும் இந்தியன் வெல்ஸ் ஏடிபி டென்னிஸ் போட்டியில் விளையாடுவார்.

ஜோகோவிச் இந்தியன் வெல்ஸில் ஐந்து முறை சம்பியனானார், அங்கு அமைப்பாளர்கள் புதன்கிழமை விதிமுறையை அறிவித்தனர் போட்டிகளுக்கான மைதானத்திற்குள் பார்வையாளர்கள் நுழைவதற்கு முழு தடுப்பூசிக்கான ஆதாரம் தேவைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சேர்பிய நட்சத்திரம் கடந்த மாதம் தொடர்ந்து நான்காவது அவுஸ்திரேலியன் ஓபன் பட்டத்தை வெல்வதற்குத் தயாராக இருந்தார். ஆனால், தடுப்பூசி போடாத பயணிகள் நாட்டிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டதால் அவர் வெளியேற்றப்பட்டார்.

இந்தியன் வெல்ஸில் உள்ள அமைப்பாளர்கள் இந்த போட்டிக்கு தடுப்பூசிகள் தேவைப்படும் என்று ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். ■




# இந்தியன் வெல்ஸிற்கான நுழைவுப் பட்டியலில் ஜோகோவிச்



# குறைந்த விலையில் சிறந்த வீரர்கள்

ஐ.பி.எல் 2022 தொடருக்கான வீரர்கள் ஏலத்துக்காக ஐ.பி.எல் ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். கடந்த 2018க்குப் பின் முதல் முறையாக இந்த ஆண்டு மெகா அளவில் நடைபெற உள்ள இந்த ஏலம் வரும் பெப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் பெங்களூரில் நடைபெற உள்ளது. இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 590 வீரர்கள் பங்கேற்க உள்ளார்கள். இந்த ஏலத்தில் அதிகபட்ச அடிப்படை விலைத் தொகையாக 2 கோடி, 1.5 கோடி, 1 கோடி, 50 லட்சம், 20 லட்சம் என 5 வகையான பிரிவுகளின் கீழ் அனைத்து வீரர்களும் பங்கேற்க உள்ளார்கள். அதில் தரமான வீரர்களை வாங்க அனைத்து அணிகளும் பல கோடி ரூபாய்களைச் செலவழிக்கத் தயாராக காத்திருக்கின்றன. ஐ.பி.எல் ஏலம் என்றாலே நட்சத்திர வீரர்கள் பல கோடி ரூபாய்களுக்கு ஏலம் போவது வாடிக்கையான ஒன்றாகும்.

அதிலும் 15 கோடிகளுக்கும் மேல் ஒப்பந்தம் செய்யப்பட்ட எத்தனையோ வீரர்கள் கோடிகளில் சாதனைகளைப் படைத்துள்ளதைப் பார்த்தோம். இருப்பினும் அந்த ஐ.பி.எல் சீசன் முடிந்த பின்னர் அவர்கள் வாங்கிய பல கோடி ரூபாய் சம்பளத்திற்காக சிறப்பாக செயற்பட்டார்களா என வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பெரும்பாலான சமயங்களில் அவர்கள் சுமாராகவே செயற்பட்டு உள்ளார்கள்.

ஆனால் அதே சமயம் மிகக் குறைந்த சம்பளத்திற்கு ஒப்பந்தமான எத்தனையோ வீரர்கள் பெரும்பாலான நேரங்களில் யாரும் எதிர்பாராத வண்ணம் மிகச் சிறப்பாக செயற்பட்டு பல வெற்றிகளில் பங்காற்றியுள்ளார்கள். எனவே ஐ.பி.எல் ஏலத்தில் மிகக் குறைந்த சம்பளத்திற்குக் கிடைக்கும் வீரர்களை வாங்குவதே புத்திசாலித்தனமான ஒரு செயலாகும். அந்த வகையில் ஐ.பி.எல் 2022 ஏலத்தில் குறைந்த சம்பளத்திற்குக் கிடைக்கும் தரமான வீரர்கள் பற்றிப் பார்ப்போம்.

**1.பப் டு பிளேஸிஸ்:** தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த நட்சத்திர வீரர் பப் டு பிளேஸிஸ் கடந்த பல வருடங்களாகச் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முதுகெலும்பு வீரராக விளையாடி வருகிறார். கடந்த வருடம் வெறும் 1.6 கோடிகளுக்காகச் சென்னை அணிக்காக விளையாட ஒப்பந்தமான அவர் ஆரம்பம் முதலே பேட்டிங்கில் பட்டையை கிளப்பினார் என்றே கூறலாம். கடந்த சீசனில் சென்னை அணிக்காக பைனல் உட்பட 16 போட்டிகளில் விளையாடி 6 அரை சதங்கள் உட்பட 633 ஓட்டகள் குவித்த அவர் 4 ஆவது முறையாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சாம்பியன் பட்டம் வெல்ல முக்கிய பங்காற்றினார்.

அத்துடன் கடந்த வருடம் அதிக ஓட்டங்கள் விளாசியவர்களின் பட்டியலில் 2 ஆவது இடத்தையும் பிடித்து அசத்தினார். மேலும் பவுண்டரி எல்லையில் கேட்ச்களையும் அபாரமாக பீல்டிங் செய்வதிலும் இவர் வல்லவர். இருப்பினும் அவரை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் தக்க வைக்காத காரணத்தால் ஐ.பி.எல் 2022 ஏலத்தில் இவர் 2 கோடி ரூபாய் அடிப்படை விலையில் பங்கேற்க உள்ளார். இவரிடம் உள்ள திறமைக்கு கண்டிப்பாக 2 கோடிகள் என்பது மிகவும் குறைந்த தொகையாகும். ஏற்கெனவே 37 வயதை கடந்துவிட்டதால் இவரை ஏலத்தில் வாங்கப் பெரும்பாலான அணிகள் யோசிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அந்த யோசனையை விட்டுவிட்டு இவரை நம்பி வாங்கினால் கண்டிப்பாக முழு மூச்சுடன் செயற்பட்டு வெற்றி பங்காற்றுவார் என்பதில் சந்தேகமில்லை.

**2. ஜேசன் ஹோல்டர்:** வெஸ்ட்இண்டீஸ் நட்சத்திரம் ஜேசன் ஹோல்டர் கடந்த வருடம் ஐ.பி.எல் தொடரில் சன்ரை சர்ஸ் ஹைதராபாத் அணிக்கான வெறும் 8 போட்டிகளில் மட்டுமே பங்கேற்றார். ஆனால் அந்த 8 போட்டிகளில் 85 ஓட்டங்களை அடித்த அவர் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரு மிகச்சிறந்த ஆல்-ரவுண்டராக செயற்பட்டார். இத்தனைக்கும் கடந்த வருடம் அவரின் சம்பளம் வெறும் 75 லட்சமாகும். மேலும் சமீபத்தில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ரி20 போட்டியில் ஹாட்ரிக் உட்பட 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை எடுத்து மிகச் சிறப்பான பார்மில் உள்ளார். இருப்பினும் வரும் ஐ.பி.எல் 2022 ஏலத்தில் 1.5 கோடிகள் என்ற மிகக் குறைந்த விலையில் விண்ணப்பம் செய்துள்ள இவரை எவ்வளவு கோடிகள் கொடுத்து வேண்டுமானாலும் வாங்கலாம். ஏனெனில் இவர் 1.5 கோடிக்கும் மேலான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் தகுதியை கொண்டுள்ளார்.

**3.ஹர்ஷல் படேல்:** ஐ.பி.எல் 2022 தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக விளையாடிய ஹர்ஷல் படேல் அந்த சீசனில் 32 விக்கெட்டுகளை வீழ்த்தி ஐ.பி.எல் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு சீசனில் அதிக விக்கெட்டுகள் எடுத்த பவுலர் என்ற ட்வயன் ப்ராவோவின் சரித்திர சாதனையை சமன் செய்தார். மேலும் கடந்த சீசனில் வலுவான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக ஹாட்ரிக் விக்கெட்டுகள், ஒரு போட்டியில் 5 விக்கெட்டுகள் போன்ற பல சாதனைகளை படைத்த இவர் வெறும் 20 லட்சத்துக்கு விளையாடினார் என்பது ஆச்சரியமான ஒன்றாகும். அதன் காரணமாக இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்பையும் பெற்றுள்ள அவரின் மவுசு தற்போது கூடி உள்ளதால் ஐ.பி.எல் 2022 ஏலத்தில் 2 கோடி பிரிவின் கீழ் விண்ணப்பம் செய்துள்ளார்.

20 லட்சத்தில் இருந்து 2 கோடிகளுக்கு வந்து நிற்பதில் இருந்தே இவர் எந்த அளவுக்கு தரமானவர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**4. ஷாருக்கான்:** தமிழகத்தைச் சேர்ந்த வளர்ந்து வரும் இளம் வீரர் ஷாருக்கான் தற்போது வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார். கடந்த சீசனில் இவரை 5 கோடிகள் கொடுத்து வாங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி நிர்வாகம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்றே கூறலாம். ஏனெனில் கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் தொடரான சயீத் முஷ்டாக் அலி கோப்பை 2021 தொடரின் இறுதிப் போட்டியில் கடைசிப் பந்தில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது சிக்ஸர் அடித்து தமிழகத்திற்கு சாம்பியன் பட்டத்தை வாங்கிக் கொடுத்தார். அதன் பின் நடந்த விஜய் ஹசாரே கோப்பையிலும் கூட தமிழகத்திற்காக பினிஷராக செயல்பட்ட ஷாருக்கான் ஒரு தரமான வீரராக உருவெடுத்துள்ளார். இப்படிப்பட்ட இவர் ஐ.பி.எல் 2022 மெகா ஏலத்தில் பங்கேற்க வெறும் 20 லட்சத்துக்கு விண்ணப்பம் செய்துள்ளது ஆச்சரியமாகும். எனவே குறைந்த விலையில் கிடைக்கும் இவரை எந்தவித யோசனையும் இல்லாமல் வாங்கினால் அதன் பின் சிறப்பாகச் செயற்பட்டு கோப்பையை வென்று கொடுப்பார் என உறுதியாக நம்பலாம். ■




# பறந்து பறந்து பழம் பறிக்கும் ட்ரோன்கள்!

நவீன தொழில்நுட்பங்களை வேளாண்மைக்குப் பயன்படுத்துவதில் இஸ்ரேலியர்கள் கில்லாடிகள். அங்கே பழத்தோட்டங்களில் அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ளது. இதை சமாளிக்க, 'டெவெல் ஏரோபாடிக்சி'ன் ஆராய்ச்சியாளர்கள், புது வழியை உருவாக்கியுள்ளனர்.

அந்த வழி: பழம் பறிக்கும் ட்ரோன்கள்! பறக்கும் தானியங்கி ட்ரோன்கள், மரத்தில் பழம் பறிப்பதற்குச் செயற்கை நுண்ணறிவு மூளையையும், கணினிப் பார்வைத் திறன் கொண்ட கமராக்களையும் பயன்படுத்துகின்றன. தோட்டத்தில் இரு பக்கமும் பழ மரங்கள் இருக்க, நடுவே ஒரு சிறிய சேகரிப்பு வாகனம் செல்கிறது.



அந்த வாகனத்திலேயே ட்ரோன்களுக்குத் தேவையான மின் சாரத்தை வழங்கும் மின்கலனும் உள்ளது. ஒரு மின் கம்பி மூலம் வண்டியுடன் இணைக்கப்பட்டுள்ள சில ட்ரோன்கள், தங்கள் நான்கு விசிறிகளால் வேகமாக, மேலும் கீழுமாகப் பறந்து, பழமரங்களை பார்வையிட முடியும்.

பழுத்த பழத்தைக் கண்டுபிடித்து, அதை மட்டுமே ட்ரோன்கள் பறிக்கின்றன. பழத்தைச் சேதாரமின்றிப் பறிப்பதற்கு ஒரு ரோபோகரம், ட்ரோனோடு இணைக்கப்பட்டுள்ளது.

பழத்தைப் பறித்ததும், வண்டியின் பின்புறம் சேகரிப்புப் பெட்டியில் மெதுவாக வைத்துவிட்டு மீண்டும் மரத்திலுள்ள பிற பழங்களைப் பறிக்க ஆலாய் பறக்கின்றன இந்த ட்ரோன்கள்.

இப்படியே வண்டியுடன் ஊர்ந்து சென்று, ராப்பகலாக பழத்தைப் பறிக்கும் திறன் கொண்டவை டெவேலின் ட்ரோன்கள்.

இஸ்ரேலில் சோதனை வெற்றியை அடுத்து, ஸ்பெயின், இத்தாலி மற்றும் அமெரிக்காவில் ஆப்பிள் தோட்டங்களில் இரண்டாம் கட்ட வெள்ளோட்டத்திற்காக டெவெலின் ட்ரோன்கள் பறக்கவிருக்கின்றன.

# காலம்



விண்வெளி ஆராய்ச்சிக்காக நானும் என்னைப்போன்ற விண்வெளி ஆய்வாளர்களும் நாளை விண்வெளி செல்ல வேண்டும். அதற்கான பயிற்சிகள் செய்து கொண்டிருந்தோம். இரவு ஆனது நான் படுக்கையறை சென்றேன். மறுநாள் அனைவரும் தயாரான நிலையில் ஏனையோர்களின் ஊக்கப்படுத்தலுக்கு இணங்க விண்கலத்தில் ஏறிப்பயணித்தோம். பல்லாயிரம் தூரங்களைக் கடந்து விண்வெளியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது சடுதியாக ஒரு மிகப் பெரிய எரிகல் எங்களது விண்கலத்தைத் தாக்கியது. விண்கலத்தோடு சேர்ந்து நாங்கள் ஒரு விசித்திரமான கிரகத்தை அடைந்தோம். ஆனால் அக்கிரகம் புவியைப் போன்று இல்லாமல் அதற்குத் தலைகீழாக இருந்தது. இளஞ்சிவப்பு நிற நீர், மிகச் சிறிய மரங்கள், மிகப் பெரிய பறவைகள் என்பன இருந்தன. ஆனால், ஒரு ஆபத்தும் நிகழவில்லை. மூன்று மாதங்கள் கழித்து நாங்கள் வந்த விண்கலத்தைச் சரி செய்து பயணத்தை ஆரம்பித்து விண்வெளி ஆராய்ச்சியை முடித்த பின் புவிக்குத் திரும்பினோம். ஆனால் புவியின் சூழல், தோற்றம் என்பன விநோதமாக இருந்தன. தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சியுற்று இருந்தது. மனிதர்கள் நான்கு கைகள், மூன்று கண்கள், நான்கு கால்கள் கொண்டவராக இருந்தனர். அவர்கள் பேசிக் கொண்ட மொழியும் வித்தியாசமாக இருந்தது. சடுதியாக மறுபக்கம் திரும்பிப் பார்த்தோம். அங்கே ஒரு இலத்திரன் நாட்காட்டி தொங்கியது. அதில் புவியின் ஆண்டு 5,021 ஆம் ஆண்டாக இருந்தது. அப்போதுதான் விண்வெளி மூன்று மாதங்கள் புவியில் மூவாயிரம் வருடங்களானதை உணர்ந்தோம். புவியில் உள்ள மனிதர்கள் சிலர் எங்களைக் கண்டதும் எங்களது தோற்றம் மாறுபட்டிருப்பதால் எங்களை தாக்குவதற்கு அவர்களது கையை ஆயுதமாக்கி தாக்கினர். உடனே நான் மயங்கி விழுந்தேன். அந்த வேளை எனக்கு கதவு தட்டுவது போல சத்தம் கேட்டது கண்களை விழித்த நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். ஏனெனில் நான் தற்போது இருக்கும் இடம் எனது படுக்கையறை சில நொடிகளுக்கு முன் நடந்த அனைத்தும் கனவு!!! இனிமேல் தான் நானும் ஆய்வாளர்களும் விண்வெளிக்குச் செல்லப்போகிறோம்.

**சி.ஹம்ரிதா**
தரம் -08
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## விடுகதைகள்

01. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
**தேள்**

02. பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?
**தலைமுடி**

03. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
**வெங்காயம்**

04. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
**கரும்பு**

05. மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?
**விழுது**

# தேடல்



வாழ்க்கை என்ற விடுகதையில்
தேடல் என்பது சிறந்த விடை
வாழ்வில் வெற்றி அடைந்திடவே
புதியவற்றைத் தேடிடுவோம்
இழந்தவையும் கிடைத்திடுமே
சலிப்பு இன்றி நீ தேட
வாழும் காலம் இது குறுகியது
தேடிப்பார் வாழ்ந்திடுவாய்

**நிஹாஷ்**



சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542



# உலகின் மிக நீளமான மின்னல்!



உலகின் நீளமான மின்னல் வெட்டு எங்கே நிகழ்ந்தது தெரியுமா? கடந்த 2020 ஏப்ரலில், அமெரிக்காவில் மூன்று மாநிலங்களுக்குத் தெரியும்படி நிகழ்ந்த இடி மின்னல் சம்பவம்தான் உலகிலேயே மிக நீளமான மின்னல் தாக்குதல்.

உலக வானிலை அமைப்பு (டபிள்யு.எம்.ஓ.) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அந்த மூன்று மாநில மின்னலின் மொத்த நீளம் 768 கி.மீ.! அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ், லூயிசியானா மற்றும் மிசிசிபி ஆகிய மூன்று மாநிலங்களின் மேல் வளைந்து நெளிந்து படர்ந்து வெட்டியது அந்த சாதனை மின்னல். இந்த மின்னலின் நீளம், 2018 ஒக்ரோபரில் தெற்கு பிரேசிலில் வெட்டிய சாதனை மின்னலை விட 60 கி.மீ அதிகம் என டபிள்யு.எம்.ஓ தெரிவித்துள்ளது.

அதுமட்டுமல்ல, அந்த அமெரிக்க மின்னல், அதிக நேரம் நீடித்த மின்னல் என்ற சாதனையையும் எட்டியுள்ளது.

சரி, எப்படி இவ்வளவு துல்லியமாக மின்னலை அளக்கிறார்கள்? அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய செயற்கைக்கோள்களில், மின்னலைப் பற்றி ஆய்வு செய்ய, தொடர்ந்து பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தத் தகவல்களை வைத்தே, டபிள்யு.எம்.ஓ சாதனை மின்னலை அடையாளங் கண்டுள்ளது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 12.02.2022 அன்று வெளியிடப்பட்டது.